உ

சிவமயம்

ஸ்ரீநீலகண்டகுருவேநம:



# பஜனைக்கீர்த்தனங்கள்.

இஃது

திருவனந்தபுரம்.

பிரம்மஸ்ரீ

ஸ்ரீநீலகண்டதாஸரவர்களியற்றியது.

ஷை ஸ்வாமி அவர்கள் புத்திரர் ஸ்தாணுநாதசிவனவர்கள்

பார்வையிட்டு

பிரம்மஸ்ரீ

S. ஞானஸ்கந்தய்யரவர்களால்

திருவனந்தபுரம்

அனந்தராமவர்ம அச்சியந்திரசாலையிற்

அச்சிட்டு பிரசுரஞ்செய்யப்பட்டது.

1929.

(*Copyright Reserved.*)

உ

சிவமயம்

இந்த பஜனைக்கீர்த்தனங்கள் அச்சிட்டுப் பிரசுரம் செய்வதற்குப் பல சாம்பவர்கள் வேண்டுகோளால்,

திருத்தருப்பூண்டி ப்ரம்மஸ்ரீ

## ம. நாணுவையரவர்களியற்றிய

### நேரிசை ஆசிரியப்பா.

நீள்கடலுடுத்த நிலமகட்டனக்கோர்
வாண்முகமாந்திருவாங்கூர்நாட்டிற்
கன்ந்தருபெரியர்தங் கணநிறைகாட்சிசேர்
அனந்தமாபுரியின்னருமைசேர்விழியின்
காமனைப்பெயரிய கருவிழிக்கண்ணெளிர்
குருமணிகுயற்றிய கோயிலாம்பாவைக்
கொளிதரற்பொருட்டிவ் வுலகெலாம்புகழு
மந்தணர்பெருமா னளப்பரும்புகழான்
சுப்பிரமணியனுந் தொன்மறையோர்க்க
விப்பிரசிகாமணி விருப்புறுகிழத்தியு
மெய்த்தவம்புரிந்ததை வியக்கானருளத்
தத்துதெண்டிரைக்கட னன்னின் முன்னுதித்த
புத்தமுதமுமிவர் பெறுமமுதினைப்போற்
புத்தியும்வித்தையும் புரகானடியிணைப்
பத்தியும்பெற்றிலாப்பான்மையின்வெளுத்ததென்
றித்தரைமகிழவு மெங்கிலத்துள்ளும்
மையமர்கண்டன் மலரடிக்கன்புசெய்
சைவருமறைக்குலச் சாம்பவர்களுந்துதி
செய்யவந்துதித்த திவ்வியமூர்த்தி
சைவச்சாலி தளர்ந்திடாவண்ண
முப்வகைநாடி யுவர்ச்சலநிதிவிடாத்
தெய்வமாமறையெனுந் தெள்கடல்பருகித்
திவ்வியகவிமழை தினஞ்சொரிந்தும்
மைவணமுறுதும் வறண்டுபின்வெளாதும்
செவ்வணத்திலங்குஞ் சீர்ப்பெருவான
மிலையெனக்கண்டா ரிலையெனநிண்ணமென்

றுலகெலாம்புகழ வோங்கியசாகைகள்
பலவுளவாகவும் பழிப்புறுகவடுக
ளிலையெனவேவருமின்பொடுசொலவருள்
பூவாநிறைந்தபின்போக்கிலாதாகியுங்
காயாதடுத்தவர்களுக்குமற்றவர்க்கும்
ஆயாக்கனிந்துடனருந்துங்கற்பக
மென்னவுமறிவுளாரின்னமும்பலவிதத்
தேத்துதற்கெல்லாமிசைதருமேலோய்
பாலலோசனனும்பங்கமர்மங்கையன்
நீலகண்டனிமலன்றிருவடித்
தாளனுந்திருப்பெயர்தாங்கியேயடியேன்
பாசமகற்றும்பரகுருநாதா
விவிலியமுதலியவினூல்பரந்து
தவநிலைதளர்ந்துசாம்புறுமிந்நாட்
குவலயமாக்கள்குணமுறவுன்னிச்
சிவநெறிதெரியவுந்தீநெறிகரியவும்
பவவழிகுறுகவும் பரவழிபெருகவும்
ஆணுமாணுமரவும்விழைந்து
கானங்கேட்டுக்களிப்பதுகண்டு
கற்றோரெனினுமற்றோரெனினு
முற்றோருடன்கேட்டுய்கவென்றுன்னிப்
பெற்றமூர்பெருமான்பெரும்புகழ்நிறைந்த
பற்பலகீர்த்தனப்பண்ணுடனியற்றி
நித்தியமாகநின்றிருமனையிற்
பத்தியாய்ப்புரியும்பஜனையைக்கேட்டு
புத்திவந்தெய்தப்பூதியேகதிக்கு
வித்தெனவந்நெறிவிழைந்தனர்பல்ரால்
எத்திசைமாக்களுமிவ்வணமிந்நெறி
யெய்திவிடடைதற்கின்றியமையாக்
கீர்த்தனம்பாவையுங்கிருபையுடனச்சினிற்
பூர்த்தியாயிட்டுப்புத்தகவுருவாய்த்
திசைகடோறும்பரவச்செய்
திசைநனிபெற்றனையின்புறுவித்தே.

உ

சிவமயம்

ஸ்ரீநீலகண்டபரமகுருவேநம:



# பஜனைக்கீர்த்தனங்கள்.

மகாகணபதி கீர்த்தனங்கள்

இராகம் நாட்டை தாளம் ரூபகம்.

பல்லவி

ஸ்ரீகணபதியே துணை செய்குவாய்நீயே

அநுபல்லவி

மோகமேகடந்தோங்கும்பரனே
முக்கண்ணனீன்றமுதற்குமரனே
மாகருணைபெறுமைங்கரனே
மதவாரணமாமுகமாதுமைபாலகபாவனனே. ஸ்ரீக

சரணங்கள்

தேவர்முனிவர்போற்றும்பாதா நீயவினைகள்மாற்றும்நாதா
நாவலரெலாம்நம்பும்வேதா நான்மறைப்போதா
பூவலம்வரத்தாதையோதப் புரகரன்வலம்வந்தநீதா
வவர்துதியுங்கேட்குங்காதா
எளியேன்றுதியிதுமுனக்கினிதாயருள்தாவரதா. ஸ்ரீக

மாயமில்லாதமறைமுடிவே மாகருணையேபெறும்வடிவே
நீயெனக்கென்றமுதனிதரவே நினைப்பாயின்புறவே
ஆயும்வெண்பிறைமுடிதிகழவே யருணீலகண்டன்மனமகிழவே
தூயவுனைமுன்பூசைசெய்யவே
தொடர்வினையிடர்பகைகெடவே சுந்தரசுககாவுருவே. ஸ்ரீக

இராகம் நாட்டை. தாளம் சாப்பு.

பல்லவி

சித்திபருள்சிவசத்திபாலகனே சின்மயானந்த
மத்தமதமொழுகத்தி யாமுகனே.

அநுபல்லவி

எத்தினமுமொருசித்தமுடையவர்
பத்திபுரியநினைத்தவரமருள். சி.

சரணங்கள்

பாசமங்குசமாதிகைக்கரனே பயறடைப்
தாஸைகொண்டருளும்மகோதரனே தேவர்மூவர்க்கும்
பூசைமுந்தியயீசன் மைந்தனே நீ சரண்சரணசுந்கவி
புகழுவருள்பரன்மகிழுவலம்வர
புதியகனிபெற்றமதிவேணியிலுற்ற சித்தி
மாயவினையிடர்நீக்கியருள்பவனே முக்குறுணிவி
நாயகனே துணைசெய்நீ சரண் சரணே மறைபுகழும்
தூயனுமையவள் நேயனருள் கைலைக்
கோயிற்றென் கோபுரவாயினிலுளமர் துதிபெருகும் கணபதியே
யருள்திருத் தொண்டபுரி நீலகண்டனடியேர்க்கு சித்தி

இராகம் பந்துவராளி. தாளம் ரூபகம்.

பல்லவி

கஜானனகணேசுவரனே கருணைசெய்வாய் சரணம்நீயே

அநுபல்லவி

விசாலகர்ணவக்ரதுண்டவேலவனுக்கு
முன்றோன்றியமூலமுதப்பொருளாகிய. கஜானன

சரணங்கள்

பாலசந்திரவேணியன்பெற்ற பாலவுமைலோலா
பழவகைபயறவனுண்டருளுஞ் சீலாவனுகூலா
நீலகண்டதாஸன்கவிக்கு நேர்ந்துவந்தருள்போதா
நித்தியநின்மலநிச்சலநிஷ்களஸத்தியஸம்பத்ப்ரஸாதா
ஆலடிதங்கியதாதா அன்பர்பணிந்திடும்பாதா
மாலயனும்தொழும்வேதா மங்களமருளேங்கரநாதா. கஜானன



இராகம் இந்துஸ்தானி காப்பி. தாளம் ரூபகம்.

பல்லவி

வந்தெனக்கருள்தந்து முன்னின்றருள் வக்கிரதுண்டா

அநுபல்லவி

அந்தநாள்தசகந்தரன்றனைப் பந்தெனவாடியகரனே
அந்தரர்பாடியபரனே. வந்தெ

சரணம்.

விரிந்துநன்மணஞ் சிறந்துமதநீர் சொரிந்துமத்தகத்தோட
விரைந்துவந்துமுன்றிரண்டதை யுண்டுபுரண்டு வண்டுகள்பாட
கரங்களிற் பாசாங்குசமும்விளங்கப் பரந்திருகன்னமாட
கரும்பவல்பொரியருந்தியன்பர்க்குப் பெருங்கருணைக்கண் போட
வருஞ்சிவன்றிருமைந்தா திருக்கநற்றமிழ்தந்தா
வருந்தவற்கருள்சொந்தா சரண்சரணமொருதந்தா. வந்தெ

ஸற்குருஸ்தோத்திரம்.

இராகம் கமாசு. தாளம் ஆதி.

பல்லவி

குருபரனேயெனக் கருள்தயாநிதியே
கோதிலாகுணநிதியே.

அநுபல்லவி

அருமறைப்பொருளருள் தரும்ஞானபூர்ணசந்திரா
அறுபத்துநாற்கலையும் பெறுவித்தமகாமந்திர. குருபரனே

சரணங்கள்

அஞ்ஞானமாகிய பொய்க்கானிற்றிரிந்திடு
மந்தரைக்கைதூக்கியானந்தவீடளித்திடும். குருபரனே

பாழ்வினைசூழ்ந்தபொய் வாழ்வினில்மயங்கிடும்
பாழுலகம்பொருந்துமேமைபர்க்கிரங்கிடும் குருபரனே

எளியர்தமக்குஞான வெளியைவிளக்கவந்த
யிதயங்கனிந்தபோதமதியேபரமானந்த குருபரனே

அண்டமனைத்தும்புகழ்கொண்டக்ருபாகர
அண்டினோர்க்கருணீலகண்டசராசர. குருபரனே

இராகம் சங்கராபரணம் ஆதிதாளம்.

பல்லவி

வாவாகலைமாதே யெனக்கருள்
தாவாயிப்போதே

அனுபல்லவி

தேவர்முனிவர்முதல் யாவரும்புகழ்பர
தேவிஸகலகலா ரூபிநன்மொழிதா — வாவாகலை

சரணம்

ராகதாளசேர்வையோடுநற்பத
ராசிவாரிராசிமாலையொப்பன
வேகுதித்தப்ராஸமோடுசொற்பொருள்
மேவிசையெதுகைமோனையும்
பாகையொத்தயோகமுற்றநவரஸ
பாவிலக்கியலக்கணம் பொருத்தமும்
ஆகமுத்துக்கோர்வையென்னவரகவி
யானதென்றன்நாவில்வந்துதோன்றிட — வாவா

## சுப்பிரமணியக்கீர்த்தனங்கள்.

தோடயம் காட்டை ஜம்பை.

ஜயகணேசுவரஸோதர ஜயமகேசுவரகுமார
ஜயபாவனசத்திதர ஜயகருணாகர — ஜயஜய
ஜயகேகிவாகனதீரா ஜயசூராசுரசம்மார
ஜயகோடிமன்மதாகார ஜயவேதாந்தசார — ஜயஜய
ஜயஷண்முகவல்லிலோலா ஜயசர்வகுணவிசாலா
ஜயசுந்தரதயாசீலா ஜயபக்தானுகூலா — ஜயஜய
ஜயசங்கரியருள்மைந்தா ஜயசந்தனசைலம்வந்த
ஜயநீலகண்டேசன்சொந்த ஜயமகவாகந்தா — ஜயஜய

இராகம்—பியாகு தாளம் ஆதி

ஹரஹரஷண்முகநமோநமோ ஆனந்தரூபாநமோநமோ
சரவணநாயகநமோநமோ சதுமறைப்பொருளே நமோநமோ
ஆதிருநயனநமோநமோ அயன்மதம்வென்றோய்நமோநமோ
நீறணிமேனியநமோநமோ நின்மலநின்சரண்நமோநமோ (மேல
தேறுமன்பர்போதமுறும்பொருளே தேவர்சேனாநாதர் வேதமுத



ஆறுகங்கைசூடியாடிபருளே அடியர்போற்றுங்கருணைநீண்டகட
அருள்புரிதருணமீதடியனேன்நமோநமோ (மேல
அமரர்கள்க்கவருலகளித்தவாநமோநமோ
திருநீலகண்டசுதா ஜயஜயநமோநமோ
சிவகுருபரபவபயஹரநமோநமோ — ஹரஹரஷண்முக

மத்திமாவதி ரூபகம்

பல்லவி

கருணாகரகருணாகரகருணாகரகுகனே

அனுபல்லவி

சரணாகதிசரணாகதிதருவாயறுமுகனே

சரணங்கள்

கமலாலயன்முதலோர்தொழும்விமலாம்புயப்பாதா
காவாயிதுசமயம்வானின்றேவர்சேனாநாதா
சமராடியபலதானவர்தமைவென்றவேற்கையா
ஜகமெங்கணும்புகழ்பொங்கியதிகழன்பர்கள்மெய்யா — கருணா
கருநீள்ச்சிறைப்பரிமேல்வருங்காமாறிரண்டுடையா
கைலாசலம்முதலாகியசைலேந்திரநிலையா
திருநீலகந்தரசங்கரர்க்குரியாவுமைதனயா
திருமால்மகள்மகவான்மகளிருவரிணைப்பிரியா — கருணா

இராகம் கேதாரம் தாளம் சாய்பு

பல்லவி

சரவணபவசிவானந்தா நல்ல
தருணமிதுகருணைபுரிகுவாய்கந்தா — சரவண

அனுபல்லவி

திருவருளுலகெலாஞ்சிறந்தவேல்முருகா தேவஸேனாதிப
செங்கண்மால்மருகா — சரவணபவ

சரணங்கள்

வேதனைச்சிறையிட்டவிமலமெய்ப்போதா
மெய்ப்பொருள்விரித்தவேதாசாமிநாதா
மாதவர்க்கருள்மாரிமொழியும்பிரசாதா
வானவர்முனிவர்வணங்கும்பொற்பாதா
மாதுமைக்கருமைக்குமாரா
மாயதுட்டரைமாய்க்கும்வீரா
நீதமாதிருவோர்சிங்காரா
நிலகண்டனடியேனுக்குபகாரா — சரவணபவ

இராகம் தருபார் தாளம் ரூபகம்

பல்லவி

கடைக்கண்பாரய்யா கருணைக் கடைக்கண்பாரய்யா

அநுபல்லவி

அடைக்கலமுனக்கடியேன் வேலா
அணையுமைபாலா திருக் கடைக்கண்பாராய்யா

சரணங்கள்

கருணையேதிருவுருவாகிவந்த சரவணநாதா
கரங்களாறிரண்டிலங்கவிரிந்தபெருமறைப்போதா   திரு
இருசிறைவிரித்தெழில்மிகும்புள்ளிக்கரிமயிலேறும்
இருமூன்றுமணிமகுடத்துலங்கவருளமுதூறும்   திருக்கடைக்கண்
அண்டமளித்தபரைமுலையமுதுண்டவுதாரா
அண்டர்முனிவர்பணிந்திடும்நீலகண்டன்குமாரா   திருக்கடைக்கண்

இராகம் இந்துஸ்தானிகாப்பி தாளம் ரூபகம்.

பல்லவி

ஷண்முகனே   சிவ
சத்திசொரூபனே முத்துக்குமாரனே

அநுபல்லவி

சின்மயவடிவேல்முருகனே
தேவசேனாதிபனே குகனே
வன்மலமறுத்தெம்மையாண்டருள்
வையம்புகழ்மெய்யனே என்னையனே சிவஷண்

சரணங்கள்

கலைசேரிளம்பருவத்திலே கடலையும்பூமியையுமொன்றாய்
மலைநகத்தினிலையாடிய மாயமால்மருகனே
மலைமகள்கண்களிப்படைய மண்ணளையும்வேளை தன்னில்
மலரயனைமதமழிய வாதஞ்செய்துபூதச்சிறைமீதில்வைத்த   ஷண்

தாயுமயாளொருபுறமுந் தந்தைசிவனொருபுறமுந்
சாயைகொண்டகற்பகத்தார் தனிச்சேடக்கொடிமேற்
ரூபகமாய்த்தாங்கிநின்று தாராட்டிச்சீராட்டி
நேயமகிழ்கொண்டசெல்வ நேசக்குமரேசசுப்பிரகாசசிவ   ஷண்



ஒருகனிக்காயாநுமைகேட்டுலகுசுற்றிவருவதின்முன்
கரிமுகன்றந்தையைவலம்வந்துகனிகைக்கொண்டிடவே
கருவிழிகள்கலங்கியந்தக்கஜமுகனோடமர் பொருதித்[னேசிவஷண்
திருகிக்கொண்டங்குமைமுன்சென்ற சீலத்தஸ்ரீநீலகண்டன்பால

இராகம் காம்போதி. தாளம் சாய்ப்பு.

பல்லவி.

எனக்குன்றிருமனதிரக்கஞ்செய்தருள்வாய் ஷண்முககுகமுருகா
வேளைமறந்திடுவேனோ கிருபைதருவாய்

அநுபல்லவி

உனைக்குலதெய்வமென்றுறுதிகொண்டுஸதா
நினைக்குமெனதுளம் நீயறியாததா   எனக்குன்

சரணங்கள்

கீர்த்திவளர்கலியாணகிரிவாசா குமரஸமரதீர
கார்த்திகேயகருணாகரவுல்லாசா
ஆர்த்திமுழுதுந்தீர்த்தருள்செய்சுப்பிரகாசா
மூர்த்திவல்லிமாதின்முகாம்புயாதிநேசா
நேர்ந்தருணமிந்தநேரந்தயாலேசம்
பார்த்திடவேவுமைபாலாலீலாவிலாசா   எனக்குன்

அடிமைக்கடிமையென்னவஸ்தைதெரியாதா   உனதுமனதுமென்ன
கடினமாகருணைக்கடலென்பதுஞ்சூதா
விடுமாவடிமறைவிளங்கும்மெய்விநோதா
வடிவேலவசரவணபவாவுன்பாதம்
விடுவேனோயினிக்கைவிடுவோர்கையாதா
ஆடிமயில்மீதேறுஞ்சூரசேனாதிநாதா   எனக்குன்

நாரணன்மருகனானவரவீரா தாரகாசுரஸம்ஹாரா
வாரணவதனன்மகிழிளையசூரா
ஆரணஸாகாவலையெனுமோங்காரா
காரணபன்னிருகரவோய்யாரசாரா
தாரணியோர்புகழ்ஸகலவுபகாரா
சீரணியுந்திருநீலகண்டர்குமாரா   எனக்குன்

இராகம் பைரவி தாளம் சாய்ப்பு.

பல்லவி

வேலாசரணம் ஷண்முகவடி வேலாசரணம்

அநுபல்லவி

சூலாயுதம்பெற்றபாலா கருணைவி
சாலாவேழைக்கனுகூலா புகழ்வடி — வேலாசரணம்

சரணங்கள்

வேதாவிமலமெய்ப்போதா சுரர்தொழும்
பாதாவுலகுக்கோர்நாதா திருவருள்
தாதாவென்னையறியாதா புகழுற்ற
காதாவிமகிரிமாதாவீன்றவடி — வேலாசரணம்
வீராவிஜயகம்பீரா மறைசொல்லுஞ்
சாராசத்குருசங்காரா திருவருள்
பாராயுனையன்றியாராதரவுறுந்
தாராதரமெனச் சீராயருள்வடி — வேலாசரணம்
வந்தாளிதுசமயந்தானருள்மிகு
கந்தாதொழுமன்பர் சொந்தா சுமுகாா
விந்தாசிவபோதானந்தா சமரிடை
பிந்தாநீலகண்டன்மைந்தா திகழ்வடி — வேலாசரணம்

இராகம் வஸந்தா தாளம் பெரிய ஆதி

பல்லவி

இந்தத்திருவடிவம் ஏதுக்தரும்வைபவம்

அநுபல்லவி

தந்தைமுகமோரஞ்சும்தாய்முகமுமாய்க்கொஞ்சும் — இந்த

சரணங்கள்

ஆறிருகைதுலங்கும் அம்புயப்பாதமிலங்கும்
ஆறுமூன்றுகண்டங்கும் ஆனந்தமாய் நின்றிலங்கும் — இந்தத்திரு
நீலமயிலில்வரும் நினைவுற்றவரந்தரும்
வேலணிந்தருள்பெரும் வினையறச்செய்தமரும் — இந்தத்திரு
சிதம்பரன்றன்சொந்தன் திருநீலகண்டன்மைந்தன்
எதுமருள்செய்கந்தன் என்னுங்கருணைமிகுந்த — இந்தத்திரு

இராகம் சுருட்டி தாளம் பெரிய ஆதி.

கந்தா வந்தருள் தந்தாள்
செந்தூரமருட்வேலா சிறியேனனுகூலா — கந்தா
அருளெதிர்பூஞ்சிலா மகிழ் அணையுமையாலா
கருணைகாநீல கண்டன் கண்மணியான லோலா — கந்தா



இராகம் முகாரி தாளம் சாப்பு.

பல்லவி

கண்ணுறக்கண்டேனே கதிர்வேலனை கண்ணுறக்கண்டேனே

அநுபல்லவி

கண்ணுறக்கண்டேனிருகண்ணுறுபெருகச்செங்
கண்ணன்மருகனைமுக் கண்ணனதிருமகனைக் — கண்ணுற

சரணங்கள்

ஆனந்தயானந்திகழ்ந்து துலங்கவு
மாறுமுகக்கையீராறுமிலங்கவும்
தானந்தமில்லான்றிருமெய்விளங்கவுந்
தய்யவிருவர்கொண்டாடியிணங்கவும் — கண்ணுற
அன்பர்குழாங்கள் வணைந்துகொண்டாடவு
மந்தார்கந்தமலர்மாரிபோடவும்
செம்பரியாடும் மயிலுங்கூத்தாடவும்
சேவல்சிறைவிரித்துநடமாடவும் — கண்ணுற
சோதிமயமாகித் தோன்றியெதிர்ந்திட
சுந்தரரூபஞ்சிறந்து முன்வந்திட
காதிற்குழைகள் தழைந்திடமைமணி
கண்டார்க்கடியேன் கரங்கள் குவிந்திடக் — கண்ணுற

இராகம் கமாசு தாளம் ஆதி.

பல்லவி

சரவணபவகுருசம்ஹாரா
ஜயந்திபுராதிபவீரா

அநுபல்லவி

பரமதயாகர பாவனரூபா — சரவண

சரணங்கள்

இமையமாதுமைபின்ற இளங்குமரசிங்காரா
இமையோர்பணியும் சேனாபதியானபெருவீரா
கமலயனைச்சிறையில்கட்டிவைத்தகம்பீரா
கருணைமிகுந்தயிலைப்பதிபுகுந்தருள்தீரா
கனகவேலணிபரா — சரவணபவ

வீரபாகுமுகலாம்வீரர்பலவும்போற்ற
வேலெறிந்துகிரியைத்துளைத்துத்தூள்படநீற்ற
தாரகனைமுடித்துச்சமரில்முன்வந்தங்கேற்ற
தானவரோடுஞ்சிங்கமுகனையுமுயிர்மாய்த்த
சந்தனகிரியுற்ற சரவணபவ

வேதன்மால்தேவர்பணிவிடைசெய்யுந்துறைகண்டு
வீரமகேந்திரமேவிவாழுஞ்சூரன்முன்சென்று
திதசுரக்கடலைச்சடுதியில்வற்றவுண்டு
செங்கைவேல்விட்டுமாவாய்நின்றசூர்வீரம்வென்ற
ஸ்ரீநீலகண்டன்மைந்தா. சரவணபவ

இராகம் காம்போதி தாளம் ஆதி.

பல்லவி

வேலாயுதனேஷண்முகனே
வினைதீர்த்தாள்பவனேகுகனே வடி. வேலாயு

அனுபல்லவி

சூலாயுதனார்வரத்தாலெதிர்த்தவெஞ்
சூரனைக்கொன்றுபெருவீரந்தரித்தவடி வேலாயு

சரணங்கள்

காமனையெரித்தவர்வாமமுறைந்தசிவ
காமிபெற்றகருணைப்பாலகனே
கோமளவடிவுடனேமெனவேயுதித்த
குருபரனெனவந்தசரவணைக்குமாரனே வேலாயு

மான்மகளெனும்பேடைமான்விழியானகுற
மாதுமனமகிழும்நாயகனே
வானவர்பணியுஞ்சேனாதிபனேநெடிய
மால்மருகனேவுயர்நீலமயில்வாகனனே வேலாயு

சரணமடைபவர்க்குக்கருணைபுரிந்துவரம்
சகலதுமுதவும்பன்னிருகரனே
திருநீலகண்டர்தமதருமைமகனேபாத
சேவர்க்கருளுந்தயனுபுரம்வாழ்பவனே வேலாயு



இராகம் ஆரபிதாளம் ஆதி

பல்லவி

ஓராறுமுகனே அம்மை உமையாள்திருமகனே.

அனுபல்லவி

ஈராறுகரனே எனக்குமுன்கருணை
பாராயுள்ளூர் மேவும் பாலசுப்பிரமண்யா ஓரா

சரணங்கள்

கேகிவாகனனே காங்கேயசுதந்தரனே
ஆகுவாகனன்ஸோதரனே கருணாகரனே
சரவணசம்பவனே ஓரா

பரிமளம்மிகவீசும் பூம்பொழில் பலதருவனஞ்சூழும்
திருவாவணிபுரம்மேவியருளுந்திருச்
செங்கண்மால்மருகனேஜயவரதகுகனே ஓரா

ஓங்காரப்பொருளே அருமறை ஒலிபடவருமுதலே
ரீங்காரதெனதுளமேவியருளுந்திரு
நீலகண்டனருமைப்பாலகனேபரனே ஓரா

இராகம் பந்துவராளி தாளம் ஆதி

மங்களம் குமார்க்கு மங்களம்.

மங்களம்மால்மருகர்க்கு மயில்மிசைவந்தருள்வார்க்கு
மங்களம் வடிவேலர்க்கு மங்களம்
மங்களம்மாதுமையின்றமைந்தனுக்குகந்தனுக்கு
மங்களம் தேவவேலர்க்கு மங்களம்
மங்களம் மைமணிகண்டன்மகவனுக்குமுருகனுக்கு
மங்களம் வல்லீசனுக்கு மங்களம்.

## சிவஸ்தோத்திரக் கீர்த்தனங்கள்.

விருத்தம்

சங்கரமகாதேவகங்கைமதிசேகரஸதாசிவமகானுபாவா
சம்புபரமீசுவரபரம்பரசராசரஜகம்படைத்தாளுமுதல்வா
எங்குநிறைவாகியருள்பொங்குபரிபூரணவிமாசலகுமாரிபாகா

ஈசாட்டராஜபுவநேசபரகாசவயநேசவகிலேசபகவா [லாக்
கண்களொருமூன்றுடையவெங்கள் குருவேநீலகண்டவடிவேயழிவி
கதிபுதவுஞானசிவபதிபதனிலேகாநிகாரவரசானபொருளே
நின்கருணைசெய்தேதழைலங்கடமெலாக்திரநின்கமலபாதபத்தி
நெறியாகிமறவாதவபிவாகியருள்போதசித்தியேபரந்தெய்வமே

தோடயம் நாட்டை ராகம் ஜம்பை தாளம்.

பல்லவி

ஜயசங்கரஸதாசிவ தேவாதேவாமகாதேவா
ஜயசின்மயானந்தரூபா ஜயமகாநுபாவா ஜயஜய

அநுபல்லவி

ஜயபார்வதிமனோகரா ஜகதீசுவராபுராரா
ஜயசுந்தரமதஹர ஜயகருணாகரா ஜயஜய

சரணங்கள்

சுப்பிரகாச ஜகதீசா சோமசேகர வுல்லாசா
சிற்பராபரவிலாசா ஸ்ரீகைலாசவாசா ஜயஜய
அப்ரமேயாவந்தரங்கா அகிலவேதாந்தப்ரஸங்கா
சர்ப்பவரபூஷணங்கா சம்போமகாலிங்கா ஜயஜய
கோமமறைபுகழ்கொண்ட கோரகாளகூடமுண்ட
காலகாலாதொழுந்தொண்டர் கருதும்நீலகண்ட ஜயஜய

மங்களச்சிந்து மங்களகவுசிகராகம்- ஆதிதாளம்

ஜகமெல்லாம் படைத்தருளுஞ் சிவமயசின்மயமான
மகதேவதேவருக்கு மங்களம். (க)
மகமேருவில்வளைத்த மாலயனுந்தேடவைத்த
மகிமைபெற்றார்தமக்கு மங்களம் (உ)
கதிதேடித்தொழுமடியார் கவலையெல்லாம்மாற்றியன்பாய்
மதிசூடிவருவார்க்கு மங்களம். (ங)

மங்களந்திருநாமர்க்குமங்களம் ஜய
மங்களாம்பிகாநாதர்க்குமங்களம்
கங்கைசடைபூண்டவர்க்குமங்களம் நீல
கண்டநமதாண்டவர்க்குமங்களம்
ஜயமங்களம் நித்திய சுபமங்களம்.



இராகம் கல்லியாணி தாளம் சாப்பு.

பல்லவி

மகாதேவநமோ நமோநமோ மகாதேவநமோ

அநுபல்லவி

சுகானந்தபரிபூரணசிவ சுந்தரகருணாநந்தபவஹர மகாதேவநமோ

சரணங்கள்

அரிஅயன்தேடிக் காணாதசோதி அந்திமதிசூடிப்
பெரியபுரம்முட்ட எரியக்கனவிட்ட
பெண்கொடிகலந்த தண்முடியணிந்த மகாதேவ
தக்கன்றலைவேகத் தான்செய்தயாகந் தவிர்த்தவைபோகத்
திக்கம்பரம்பெற்ற முக்கண்வடிவுற்ற
தேவர்க்குமரிய மூவர்க்கும்பெரிய மகாதேவ
சதிவினைகடரக் கஜமுகனைத் தந்தவுபகார
அதிகபலமுற்ற அசுரக்கடல்வற்ற
அமரர்தொழவைத்த குமரனையளித்த மகாதேவ
காலனுடல்சாயக் காமனும்மாயக் கருணைபுரிநேய
ஆலமதுமுண்ட மூலமுதலென்ற
அன்பர்க்கருள்கொண்ட சம்புநீலகண்ட மகாதேவ.

இராகம் ஆரபி தாளம் ரூபகம்

பல்லவி

நீலகண்டநித்தியானந்த நீயேகதியே

அநுபல்லவி

பாலசந்திரசேகரா பார்வதிநாயகதயாகர நீலகண்ட

சரணங்கள்

கங்காதரநாகபூஷண கிரிவாழ்தேவதேவா
சங்காபுரகாரகுருபா ஸதாசிவாமகாதேவா நீலகண்ட
அன்பர்க்கிரங்குந்திருமன மானநின்மலசங்கரா
துன்பவினைதொலைக்குங்காருண்ணிய தூரந்தாசிதம்பர நீலகண்ட
ஸாமகானலோலவரதா சம்போகுணவிசாலா
கோமளப்பாதாவடியவர்க்கநுகூலா சிலாகாலகாலா நீலகண்ட.

### இராகம் கமாசு தாளம் சாப்பு.

பல்லவி

கருணாஸாகர சங்கரனே பரனே ஹரனே — கருணாஸாகர

அநுபல்லவி

சரணஞ்சரணம்நீயே ஸகலகாலமுந்துணை
வருவாயாதரித்தருள் வரதா வரதா வரதா — கருணாஸாகர

சரணங்கள்

பனிமாமதியணியும் பார்வதிநாதனே
கனககிரிவிற்கொண்ட கரனே கரனே கரனே — கருணாஸாகர
பனகபூஷணசம்போ பரனேபாதம்பணிவோர்
ஜனனந்துயரகற்றுஞ் சிவனே சிவனே சிவனே — கருணாஸாகர
சிதகங்கைநீர்பூண்ட சிரனே ஸ்ரீநீலகண்ட
போதரூபனேபரி பூர்ண பூர்ண பூர்ண. — கருணாஸாகர

### இராகம் காம்போதி. தாளம் சாப்பு.

பல்லவி

என்னவந்தாலும் நானுன்னைமறப்பதில்லை என்பரனேசிவனே

அநுபல்லவி

மன்னர்பகைவரினும் மற்றோர்பகைவரினும்
பின்னுமநவக்கிரகம் பிழைத்தென்னையுறுக்கினும் — என்ன

சரணங்கள்

பந்தவினைகள்சீறிப்பாய்ந்துவந்தெதிர்த்தாலும்
பாயப்புலிமுதலாய்க்காய்ந்துமுன்குதித்தாலுஞ்
சிந்தைநோகவிடர்நீண்டித்திகைத்துளம்பதைத்தாலுஞ்
சிறுமைபட்டுவாடிவறுமைதொட்டிருந்தாலும் — என்ன
உடுக்கையூணுறக்கத்துக்குறுஞ்சனிதொடர்ந்தாலு
மோயாவிருத்தியாற்பாழ்மனமோடித்திரிந்தாலுங்
கடுத்தசொற்பலபேசிக்கடிந்தெவரிடைந்தாலுங்
கலியுகவாதிகள்புன்மலவாதம்புரிந்தாலும் — என்ன
அத்தனுன்னையுணராதபவாதமொழிந்தாலு
மானேநினைவேறுக்கிமறுதெய்வம்புகழ்ந்தாலு
மெத்தொழில்செய்தாலுமெதுவந்துநேர்ந்தாலு
மென்சொலினுமகண்டசின்மயநீலகண்ட. — என்ன



### இராகம் காம்போதி தாளம் சாப்பு.

பல்லவி

பரமானந்தசுந்தரசங்கரதேவா — உந்தன்
சரணாகதிஸந்ததமென்றனைக்காவா

அநுபல்லவி

கரிமுகனுமாறுதிருமுகனுந்தொழப்
பரையுமையோர்பாகம்மருவியருடரும் — பரமானந்த

சரணங்கள்

புன்லமாமதிசடையணிமாமுடியிலங்க — நந்தி
கணநாயகர் ஞானமுனிவர்நால்வர்வணங்கப்
பனிமாமதிபானு கனன்மூவிழிவிளங்கக்
கனககுண்டலமணிதிகழ்ந்திட பனகபூஷணவணிசிறந்தருட் — பரம
வரதாபயமழுமறுமான்கரங்கள்காட்டி — ஞானப்
பெருஞ்சாதனமாகுந் திருநீற்றொளியுந்தீட்டி
அருள்சாருங்கற்பகத் தருமூலம்நிலைகாட்டிக்
கருணைபொழியிருசரணகதியருள் புரிநீலகண்டசற்குருபஞ்சாக்ஷர
பரமான

### இராகம் சுருட்டி தாளம் ஆதி

பல்லவி

உன்னைத்தவிரவேறில்லை கதியெனக்
குன்னைத்தவிரவேறில்லை.

அநுபல்லவி

அன்னைதந்தையும்நீயே அகிலபந்துவும்நீயே
அன்னையுமையாளனையா அன்பர்க்கருள்ஸகாயா — உன்னை

சரணங்கள்

பகலுமிரவும்நீயே — பலதாந்தெய்வமும்நீயே
சுகமுந்துக்கமும்நீயே — சோமசூடாமணியே — உன்னை
இகமும்பரமும்நீயே — எல்லாப்பொருளும்நீயே
சகலகலையும்நீயே — சம்போதயாநிதியே — உன்னை
அண்டபிண்டமும்நீயே — அசராசரமும்நீயே
எண்டிசைவரும்நீயே — ஏகானேகமும்நீயே — உன்னை

அரியுமயனும்நீயே    அட்டமூர்த்தியும்நீயே
சுரரும்நரரும்நீயே    சுதிசொல்லுமாபதியே    உன்னை
எல்லாவுயிரும்நீயே    எல்லாப்பூதமும்நீயே
எல்லாத்தொழிலும்நீயே    எல்லாமேயறிவாயே    உன்னை
நானென்றவனும்நீயே    நானாவிதமும்நீயே
தானெனவனும்நீயே    ஸச்சிதானந்தமுநீயே    உன்னை
கண்டதெவையும்நீயே    காணாதவையும்நீயே
கண்டார்காக்ஷியேநீல    கண்டகிருபாநிதியே    உன்னை

கீர்த்தனம் இராகம் சுருட்டி தாளம் சாப்பு

பல்லவி.

உனைநம்பினேன்தேவதேவா    மங்கை
யொருபங்காமதிகங்காதரமகாதேவா

அனுபல்லவி

நினைவிலும்கனவிலும்நித்திரையிலுங்கூடி
நின்றுதுணைபுரிகின்றதெய்வமுனை
யன்றிக்கதியில்லையென்றதில்நாடி    உனைநம்பி

சரணங்கள்

நில்லாதமலபாண்டதேகம்    பசி
நீர்த்தாகம்முதலாமுபாதியனேகந்
தொல்லாதகவலைப்பிரவாகம்    மெத்தத்
தொல்லைபவவினையல்லல்தடுத்தாள
வல்லவுனையன்றியில்லைநிருவாகம்    உனைநம்பி
கனஜாலங்காட்டும்பிரபஞ்சம்    அதைக்
கண்டுபிரமித்துமோகங்கொண்டபோழ்நெஞ்சம்
வினைசாரும்பொருளாசைப்புஞ்சம்    பாரில்
விளையலேந்துபின்வாளைவிடுமிந்தப்
பிராணிக்குனையன்றிக்காணேம்மறுதஞ்சம்    உனைநம்பி
மனைவிக்களுறவுபந்தம்    மனை
வாழ்க்கைசேர்க்கையுற்றுப்பார்க்கிலவத்தம்
உனைநினைவிற்கொள்வதேசுத்தம்    சிறி
ஒலமிட்டுவருங்காலனைத்தடுத்துப்
பாலனஞ்செய்தநீலகண்டாநித்தம்    உனைநம்பி



கீர்த்தனம் இராகம் முகாரி, தாளம் சாய்ப்பு

பல்லவி

சந்திரகலாதரனே ஹர ஸாம்பஸதாசிவனே

அனுபல்லவி

சந்ததமுன்றன்பதம்நம்பினேன்றென்
குளந்தாபுரீசுவரனே நீயெ
தாரகமாங்கிருபைபாரெனக்கன்பா
யனந்தகுணாகரனே    சம்போ    சந்திர

சரணங்கள்

ஆதரவாயுன்றன் பாதகமலந்தனை
யாவர்பணிந்தாலும்    அவர்
பாதகம்நீக்கிப்பரமகிருபைசெய்
பரனேஇனிமேலுந்
சோதிக்கவேண்டாம்நானேழைக்குமேழை
சொல்லவேண்டுமோநாளும்    பரஞ்
சோதிஸ்வரூபானுவாதிசராசரத்
துறைவோயெனையாளும்    சம்போ    சந்திர
பாடிப்பாடியென்றன்நாவும்வலித்ததே
பரமதயாநிதியே    எங்குந்
தேடித்தேடியிருகாலுஞ்சலித்ததே
தேவாவுமாபதியே
நாடினேன்வேறொருதெய்வமில்லையெந்த
நாளுஞ்சிவஸ்துதியே    கொண்டு
தேடினபின்னும்பராமுகமாய்
நீயிருந்தாலெவர்கதியே    சம்போ    சந்திர
பாலன்பிழைகளைத்தந்தைதாய்பொறுத்துப்
பாலனம்செய்வதுபோல்    என்றன்
மேலும்பிழைபொறுத்தாளக்கிருபைபுரி
வெண்மதிக்கண்ணியார்
மூலபொருளாமுன்றனைப்பணிந்தோருள்
முற்றுமென்போலேழைபார்    திரு
நீலகண்டாவினிமேலுந்தன்பக்கடல்
நீந்தவொண்ணாதுமைநேசா    சம்போ    சந்திர

இராகம் இந்துஸ்தானி. காப்பி தாளம் சாப்பு.

பல்லவி

இன்னமிரங்காத தென்ஸ்தாணுநாதா
எளிமைஸங்கடமுனதுளமறியாதா

அனுபல்லவி

அன்னைதந்தைபுங்கதி யருணிதியேது
முன்னைநிதமுநம்பி யுணர்ந்தவென்மீது மின்னம்

சரணங்கள்

வினைக்குங்கொலைக்குமஞ்சா விம்பர்கட்கெல்லாம்
மனக்குறைமாற்றியருளவும் வல்லாய்
நினைக்கும்வரந்தரும் நிதியென்றசொல்லாய்
எனக்குமாத்திரமன மிளகாததகல்லா இன்னம்.
கல்லெறிந்தானுநற் கதிசேர்விலையா
சிலையறைந்தாற்கருள் சிலநீயலையா
நிலையாயொருவற்காயுள் நீட்டியகலையா
தலைபணிந்தேனை நீ தற்காத்தல்மலையா இன்னம்
மேலுங்கீழுந்தெரியா வினையினேன்நெஞ்சம்
மூலமதைத்தேடுதே மோகாசைப்புஞ்சங்
காலமிதையோட்டுதே கவலைப்பிரபஞ்சம்
நீலகண்டகிருபா நிதியேநீதஞ்சம் இன்னம்

கீர்த்தனம். இராகம் தோடி. தாளம் ரூபகம்.

பல்லவி.

பாரும்பாருங்கடைக்கண்கிருபை
தாருந்தாரும்ஸாமி

அனுபல்லவி.

ஆருமில்லைத்தாரகமுனை யல்லால்நீயெனல்லல்தீரப் பாரும்

சரணங்கள்

பாதிமதிகங்கையுடன் சோதிசபையிலாடும்
பரனேபுரகரனேமிருக தரனேதயாகரனே வரனே பாரும்
அன்பரைப்பரிபாலனஞ்செய்யுஞ் சம்புவேகிருபாஸாகரா
அடியன்றுயரம்கோடியிற்சிதற வகமேகுளிரசுகமேவளரப் பா
அந்தரிபரமானந்தேசுவரி யங்கமேவுமீசா [பாரும்
ஆலமுண்டநீலகண்ட வடிமைகொண்டவெனையாள்கண்டாய்ப்



கீர்த்தனம். இராகம் தனுசி. தாளம் ஆதி

பல்லவி

காளகூடவிஷமுண்டஸ்ரீகண்டா வென்மேற்
கருணைபுரிவாய்பகவா

அனுபல்லவி

நீளமாம்பாற்கடலில் நின்றுதேவாசுரர்முன்
மேளமாய்மதனஞ்செய் வேலையுண்டானவன் காளகூட

சரணங்கள்

அரிஅயன்முதலானோர் பணியுமப்புயப்பாதா
அரவமகரகுண்டலந் தனையணிந்தகாதா
திரிபுரந்நகைசெய்து நிக்குணவாக்கும்போதா
திரிலோகநாதா தேவாதிதேவா காளகூட
திங்களிரவிவன்னித் திரிகண்ணுமாலுடைய
தங்கைபாய்பார்வதியைத் தாங்கும்மலர்த்துடைய
மங்களமானகங்கை மதியணிசெஞ்சடைய
செங்கைமான்மழுவேந்துஞ் சினப்புலித்தோலுடைய காளகூட
அண்டர்முழுதும்போற்று மமலாநமச்சிவாயா
தொண்டர்கருத்தில்வாழுந் தூயவிபூதிக்காயா
அண்டினேனுன்கிருபையா லாண்டுகொள்வாயோ
கண்டிரங்குவாய்நீல கண்டாவன்பர்சகாயா காளகூட

கீர்த்தனம். இராகம் சௌராட்டிரம். தாளம் ரூபகம்

பல்லவி

சரணஞ்சிவ சரணம்பவ
ஹரசங்கரசம்போ

அனுபல்லவி

கருணைபுரிந்தருள்வாய் நல்ல
தருணம்பரமீசா சரணம்

சரணங்கள்

உடையாவுமதடியேன் மறு
படியோரிடமறியேன்
விடைபாய்கொன்றைச்சடையாய்ப் பழ
வடியார்தொழும்நாயகா சரணம்

இறைவாவுமதுறவே யன்றிப்
பிறிதோர்துணையில்லேன்
சிறியேன்பிழைபொறுத்தா ளருட்
டுறையேபிறைசூடி சரணம்

அரனேபுரஹரனே புமை
யொருபாலுறைபரனே
சுரர்மாமுனிவரர்போற் றிடுந்
திருநீலகந்தரனே சரணம்

கீர்த்தனம். இராகம் பைரவி. தாளம் ஆதி

பல்லவி

மனக்கவலையைமாற்றி யெனையாளாயினி
யுனைக்கைவிடே னுமை மணவாளா

அனுபல்லவி.

தனக்கவையுடன்பசிக் கனக்கவைமுதலான
இனக்கவையினலலு தினக்கவவசமான மனக்கவலை

சரணங்கள்

நானென்றகங்காரப்பேய்சண்டைகட்டுதே பேச்சி
யானகோபமதைநிலைநாட்டுதே யாசை
யானபெரும்பூதமெங்குமோட்டுதே சேர்ந்தஞ்
ஞானமாம்பூதச்சிசிங்கிலியாட்டுதே பிதையோட்டி மனக்கவ

மோகமெனும்பெகினிநல்வேஷமா யற்ப
போகருசிகாட்டியுட்பிரவேசமாய் கல்வி
வேகசிந்தாரந்தினமதைமோசமாய்க் கொண்டு
போகவொட்டிடாதருட்பிரகாசமாயுளம்வாசமாய் மனக்கவ

பண்டுசெய்தபாழ்வினைகள்போக்கியே யெம
னண்டிவாராதநின்னிலையாக்கியே பஞ்சாக்
கொண்டிடாமற்பாவமெல்லாம்நீக்கியே நீல
கண்டகிருபாநிதியேகைதூக்கியேவுறவாக்கியே மனக்கவ



கீர்த்தனம். இராகம் அடாணா தாளம்-ஆதி

பல்லவி.

இன்னமுமிரக்கமில்லையா யென்சாமியுனக்
கென்றன்மீதில்வாதோசொல்லையா

அனுபல்லவி

பன்னகபூஷணபுண்ணியபராந்தக
பரமதயாகரபார்வதிநாயகா இன்னமு

சரணங்கள்

தேவதேவேசமகானுபாவபரமீசாசம்போ
நினைபந்துநீயல்லவா மெத்தநல்லவா
பூவுறைந்தவேதன்மால்புரந்திரன்
தேவர்மாமுனிவர்சேவைசெய்திடவே
புள்ளிமான்மழுதரித்தானந்தமொடு
வெள்ளிமாமலையில்வாழுமகேசவரா இன்னமு

உள்ளமுனருளைநாடி யுள்ளநிறைகொண்டுபாடி
புனக்கடிமையானேனல்லவா பேரழுசொல்லவா
கள்ளவாசனைகள்கொண்டுநேப்பனது
பள்ளமாயையில்விழாதவண்ணமருள்
காட்டியன்புநிலைநாட்டியென்கவலை
யோட்டியாளமெய்ப்பிராட்டிமனோகரா இன்னமு

கற்பகந்தனைசிரதரை யற்பகானந்தருமுன்போய்
கைநீட்டவிடலாமோ வதுஞாயமோ
வற்புதாவமரகற்பகாவடியர்
சிற்பிரகாசசிந்தாமணிக்கடவு
ளானதெய்வதிருநீலகண்டசிவ
ஞானமூர்த்திவெளிமேலெனவக்குன்மன மின்னமு

இராகம் தோடி தாளம் ரூபகசாய்ப்பு

பல்லவி

அராஹரசம்போசங்கரவருள்புரிவாயே

அனுபல்லவி

புரஹரபாதிமதிதாசுரமுனிவர்தொழும் அர

சரணங்கள்

அழகியசீர்பாதா பழவடியார்போதா
முழுமறைபுகழ்நாதா தொழுமவர்க்கருள்நாதா — அர

கலைமதிபுனல்சூடி நலமிகுமறைபாடி
மலைமகளுடனாடி பலவுயிர்க்குளுமாடி. — அர

காலனையும்வென்றதூயா கோலையுமணிந்தநேயா
ஆலமதமுண்டவாயா நீலகண்டாவென்சகாயா — அர

இராகம் பியாக் தாளம் ஆதி

பல்லவி

சங்கரநின்கருணைபுரிவாய்

அனுபல்லவி

தவறவிடாதெனையாண்டருள்வாய்

சரணங்கள்

கங்களமோங்கியவெண்கிரிவாசா மாதவர்மாமுனிவோர்
தொழுநேசா அங்கமோர்மாதுவைத்தாளுமுலாசா
அரஹரபுரஹர மன்றுணடேசா
இங்குமங்குமெங்குமாயபூரணவெத்தொழிற்கு
மெய்ப்பொருட்குக்காரணா
கங்கைதிங்கள் தங்குபாசமோசனா
கருணைசெய்யத்தருணமூன்றுமேலோசனா — சங்கர

இராகம் நாட்டை. தாளம் சாப்பு

பல்லவி

சந்திரசேகரனே சதாசிவனே ஜகன்மயா
னந்தநாடகனே யருள்பரனே

அனுபல்லவி

சந்ததமுமெந்தன்சிந்தையில்வந்துபுகுந்துநினைந்தவரந்
தனைத்தந்தமுதூட்டுவா யின்பங்காட்டுவா யா
விந்தநயனந்தனருள்மைந்தனுடலந்தரித்த — சந்திர

சரணங்கள்

ஆலகாலமுண்டவிஷவாயனே அன்னுளினில்
மாலயனடிமுடிகாணத்தூயனே காலைத்தூக்கிநடனஞ்செய்யாயனே



காலனைக்காலாலுதைத்தகபிலைச்சகாயனே அப்பிரமேயனே
திருசூலாகபாலாவனுகூலாவுமையாணையனே — சந்திர
பொற்சிலம்பணியும்புயப்பாதனே புகழ்ந்தனை (தனே
அர்ச்சனைசெய்பவர்க்கருணுதனே கைச்சிலையாய்மேருவளைத்தபோ
உச்சிதமாய்ப்புவித்தேர்மிசையேறியநீதனே மனோதீதனே
கங்கைமெச்சியமுடிச்சடைநீள்நச்சரவக்கச்சினனே — சந்திர
புரமொருமூன்றையும்பொடித்தவனே பொற்பாதமே (வனே
சரணடைந்தவரைத்தாங்குஞ்சிவனே கருணையேயுருவோமொள்ப
திருநீலகண்டந்திகழுஞ்சகலவைபவனே ஞானேற்பவனே
ஒன்றுந்தெரியாமிகுசிறியேனுனைப்பிரியாவருள்புரிபவனே — சந்திர

இராகம் யமுனாகல்யாணி. தாளம் ஆதி.

பல்லவி

மஹாப்ரபோ ஸ்ரீபரமசிவா என்மனங்குளிரவுனதருள்புரிவாய்

அனுபல்லவி

சகத்துருவாஞ்சரா சரத்துயாந்தர
மஹத்வமுளபுகழ்வகித்ததயாகர — மஹப்ரபோ

சரணங்கள்

காமப்பிசாசுமாயையாலேநல்லுருக்காட்டிக்
கவடமொழியைநாட்டிக் கருத்தைக்கைவசமாக்கிச்
சதித்துமோகக்கானனக்கனடுமொன்போலாட்டி
மாமனதையவற்றிற்குநிக்கச்செய்தறிவையுமறைத்தற்ப
சுகங்காட்டிவரத்தரும்பவரோகத்துயரத்தையகற்றுநல்
மருந்தெனவருந்தெய்வத்தருவேயன்பமுதூட்டி — மகப்ரபோ
ப்ரபலமாய்விபுலமாய்நிலையுங்கரையுமின்றிபயங்கரவுருவாகிப்
பாரத்திரையுமோங்கிகூரப்ராணியுந்தாங்கிப்படரொலியுடனுகி
அபரிமிதமாய்நின்றபவசாகரத்தில்மூழ்கி
யலைவாயினலைவாகி யகதியாய்நொந்தபோதி
லுதவுமுன்கிருபானந்தவருளெனும்பெருந்தோணி
தருமுயிர்த்துணையேகி — மகப்ரபோ
பொல்லாமாயப்புலிமுன்வில்லாளிபோலேயின்னம்
போராடவைப்பதுண்டாபூனைக்குமதங்கொண்டால்
யானைக்குலத்தைவெல்லப்போகுமாபலமுண்டா

எல்லாவுயிருக்குஞ்சேர்ந்துள்ளாயிருக்குமுனக்
கேதுவுங்கைவசங்கண்டா யிரும்பையுங்கரும்பாக்குந்
திருவுளமிரங்கியேயிதிக்கதிபர்துவாய்நற்கதிக்கருணீலகண்டா மக

இராகம் முகாரி. தாளம் சாப்பு.

பல்லவி

நம்பினேன் சங்கரா சந்தரசேகரா
என்மேல் அன்பு வைத்தாதரி கருணாகரா.

அநுபல்லவி

அம்புஜநாபனுமம்புஜமேல்வளர்பிரமனு
மன்புடன்தேடிக்காணுவனப்புஜமலர்ப்பதத்தை நம்பி

சரணம்.

மருமலர்களணியும்பரனே மழுதரனே
மதியுங்கங்கையுமணிசிரனேசிங்காரனே
சித்தனே வேத சத்தனே ஜகர்த்தனே கயிலை மலையை முன்
னிருபதுகைப்பினாலெடுத்தயிராவணன்
ஒருபது சிரநெரியவொருவிரலூன்றும்பதத்தை நம்பி
சித்தஜனேனும் புரமெரித்தபாபநாசன
செங்கதிர்திங்கள்செங்கனலாகிய மூன்றுலோசன
சேணனே நித்தியகல்யாணனே நாகநாணனே நாளுந்தானினை
போற்றிசெம் பத்தராம் மார்க்கண்டர்மீதிற்பாசமிட்டாவேசமோடுங்
கத்திவருமந்தகனையெத்திபுதைத்தபாதத்தை நம்பி
வாசவன்முதலோர்போற்றும்சனேசஸதாசிவனே
வாணியாண்டோனேநஞ்சுணனேதேவதேவனே
வாஸமலரணிகேசனேஸ்வப்பிரகாசனேபவநாசநேசனே
கேசவன்முதலோர்போற்றவாஸவன் பூமாரிதூற்ற
நேசமாயாகாசந்தன்னில்கீர்த்தனஞ்செய்தபாதத்தை நம்பி
யாவர்க்குமுயிர்க்குயிராயுறைந்தோனே நிறைந்தோனே
யாவுமாகிச்சிறந்தோனே வேதமாகிப்பரந்தோனே
ஆலமேயுண்டகோலமேகொண்டமூலனேயுமைபாள்பணாளனே
சேவைசெய்வோரைப் பாலனஞ் செய்யுஞ்சிவனே பரம
பாவனநீலகண்டாநின்பங்கஜமலர்ப்பதத்தை நம்பி



இராகம் சங்கராபரணம் தாளம். சாப்பு.

பல்லவி

உன்மேற்பாரம்வைத்துனையே நம்பியிருக்கு
மென்மேற்கருணைபுரியீசா

அநுபல்லவி

இம்மாநிலப்புகழும் நன்மைமிகத்திகழும்
எம்மையாளுங்குளந்தைச் சின்மயநீலகண்டா உன்மே

சரணங்கள்

துலையாவிசாரயதைத் துலைக்கவுனக்குசத்தி
யிலையாயிதென்னமெத்த மலையாகருணைவர
விலையாயின்னமும் மனம்வலையாஞாயமாமேரு
மலையைச்சிலைவளைத்தகலையாபார்வதிநேயா உன்மே
அறியேன் வருங்கருமங்குறியேனறிவிலாத
சிறியேனென்றுமுனைமறவா திருக்கவரம்
பெறுமாறருள்வாய்சதுமறைபுகழ்ந்திடும்பாதிப்
பிறையணியுங்கருணைத்துறையேயெனதிறையே உன்மே
அண்டினோர்க்குதவிசெய்புப்புண்டரீகமலர்ப்பாதா
அண்டர்தொழவம்பலத்திற்கொண்டநடனவிநோதா
பண்டுபணிசெய்தமிருகண்டுசுதராயமாற்கண்டருக்காய்ச்
சண்டனைக்காற்கொண்டுதைத்ததொண்டர்நாதா உன்மே

இராகம் சாவேரி தாளம் ரூபகம்.

பல்லவி

சித்தங்கலங்காதநிலைவைத்தெனையாள் பரமசிவ
சித்தனேசர்வமுத்தர்நாடியசேணனேபரிபூர்ணனேயெந்தன்

அநுபல்லவி சித்தம்

எத்தொழிற்குமெப்பொருட்குமெவ்வகைக்குமெவ்வுயிர்க்கு
மெள்ளுக்குளெண்ணெய்போலவெங்குநிறைந்திருக்குங்
கர்த்தனேவுன்பத்தியெனுஞ்சிந்திக்குச்சத்துருவான
காமாதிப்பாமரர்கள்மாமோசம்போகுமான சித்தம்

சரணங்கள்

பொருளில்லாதான்பிணமென்றேயதைவிரும்பிப்
புந்திபுண்ணாகுதே பின்னும்

பூவையரைக்கண்டுமவர்மோகங்கொண்டும்
உலைவாய்மெழுகாய்வேகுதே
இரவும்பகலுமன்னோராச்சியமெண்ணிவெறுதேகாலமு
மேகுதே   மெத்த
யேழைபாவனென்றுசொல்லிளப்பங்கொண்
டேங்கியேயுளம்நோகுதே
இதற்கென்செய்வேனென்றே   யுருகு   நெஞ்சமாய்நின்றே
யுளறுமென்றனைக்கண்டே கிருபையுன்சிந்தையுட்கொண்டே மனத்
திருளையோட்டிப்பொருளைக்காட்டி
யிடர்களைந்துனடிமைசேர்த்துச்   சித்தம்
புகழ்ந்திச்சொல்லாதோரிகழ்ந்தவாக்கெவருரைத்தாலும்
பொல்லாக்கோபம்   வந்து
பொங்கிவினைக்கும்நகைப்புக்குமாயிடந்தந்து
போம்பின்றங்குந்தாபஞ்
சகத்துமூடருமிகழ்ந்துத்தள்ளிவெறுத்ததைத்தேடும்
க்ஷோபம்   வருந்
தேகியென்றவர்முன்னானுந்தேகியென்றே
திரும்பக்கேட்குதேலோப   மொரு
சேவகங்கொண்டாற்   பின்   யாவருங்கண்டாற்   பெருங்
கோபம்பண்டோர்   செய்த   யாவையும்   நன்றாய்ப்   பொம்மை
வகித்தனேராயகத்திற்பூராய்
மதமேபண்ணிச்சதமேயென்னும்   சித்தம்
உட்பலமறியா துர்ப்பலதேகத்தை
நற்பலமென்றெருவீரியம்   பூண்டு
மொன்றுநிகரில்லையென்றுமெதிர்வேறு
கொண்டுநேருதேமாச்சரியம்   மாயா
கர்ப்பிதமாகியவிப்பிரபஞ்சவாழ்வைச்
சொர்ப்பனமென்னறண்ணக்காரியம்   மிவர்
கட்டுக்குளாயகப்பட்டுக்கொண்டதினால்
விட்டுவெளிவரத்தயிரியம்   இல்லால்
கானப்புலிகள் நடுவானபசுவின்மன
மானதுபோலென்சிந்தைதானுமேக்குதுன்   கிருபா
வற்புதங்காட்டியற்பரையோட்டி
யாலமுண்டநீலகண்டா
சித்தம்



இராகம் முகாரி தாளம் சாய்ப்பு

பல்லவி

என்றைக்கு சிவகிருபை வருமோ   ஏழை
என்மனச்சஞ்சலமறுமோ

அனுபல்லவி

கன்றுக்குரலைக்கேட்டுக்கனியும்பசும்போலேக்கி
ஒன்றுக்குமஞ்சாதென்றனுள்ளத்துயரநீக்கி   என்றைக்கு

சரணங்கள்

உண்டானபோதுவெகுவுறவுண்டெனித்தரையிற்
கொண்டாடித்தொண்டாகிக்கொள்வார்தனங்குறையிற்
கண்டாலும்பேசாரிந்தக்கைதவமான   பொல்லாச்
சண்டாளவுலகத்தைத்தள்ளிசற்கதிசெல்ல   என்றைக்கு
காமக்ரோதலோபாதிக்கள்ளர்வாழுங்காவிலே
ஊமைகண்டகினாப்போலுளங்கலங்கிப்பாரிலே
நேமம்மறந்துநெடுநாளலையுமெளிய
னுமென்றனையழைத்து அமுதமூண்டுதெளிய   என்றைக்கு
நான்கொண்ட துயரத்தைநான்வென்றேனெனக்காட்டி
வீண்கண்டவிருளெல்லாம்வெளியாக்கிப்பொருணூட்டி
யானின்றுள்ளிளப்பாறியானந்தப்பெருந்தீரந்
தானின்றநீலகண்டன்சரணாரவிந்தஞ்சேர   என்றைக்கு

இராகம் பாகு தாளம் சாப்பு

பல்லவி

சம்புகிருபைவருமோ யெனக்குநல்
லின்பம்பெறச்சுகாரம்பந்தரச் சிவ   சம்பு

அனுபல்லவி

அன்பரையாளும்பரம்பொருளெனுமென்
நம்புதல்கைகூடத்துன்பவினைபோட   சம்பு

சரணங்கள்

முன்புளவினையோவிடும்பர்செய்வினையோவெவ்
அன்பைக்கலைக்கவெகுதுன்பவுருவாய்வந்து
டம்பக்கூத்தாடிபேவுடம்பைக்கரைக்குங்காம
வெப்பசிதீர்த்துமனக்கம்பமகற்றியாள   சம்பு

கோபவாதலோபமுந்தாபமோகக்ஷோபமும்
பாபமதபேதமும்பாவனமாய்மனதில்
வேபமணுகாஞானதீபமுந்தந்துமாயா
கூபத்தின் கரையேற்றியாபத்தகற்றியாள   சப்பு

ஏதுமறியாவேழைப்பேதைநானவர்திருப்
பாதமேகதியென்றெப்போதுமடிமையானேன்
ஆதரவாகக்குளிர்வாதமுன்னும்பன்னக
காதனல்விஷமுண்டபோதன்ஸ்ரீநீலகண்ட   சப்பு

இராகம் வேகடை தாளம் சாப்பு.

பல்லவி.

உன்பாதமேகெதியெனக்கீசா சரண
மென்பார்தமைக்காக்கும்பரமீசா

அனுபல்லவி.

செம்பொன்வடிவுமைமகிழ்நேசா சிவ
சம்போசங்கரசர்வேசா   நாளும்   உன்பாத

சரணங்கள்

சின்னஞ்சிறியேன்பத்தி   நன்னிலையில்லாச்சட
மென்னபிழையும்பொறுத்   தென்னையாள்வதுன்கட
னின்னம்பராமுகமா   மென்னிலேழைநான்றிட
னுன்னும்வகைதெரியேன்   முன்னஞ்சொன்னேனுன்னுடனுன்
அந்திபகலாய்ப்பின்னு   மெந்தவேளையும்போற்றுஞ்
சொந்தவடிமைக்காளா   யென்றனையுஞ்செய்தாற்றுஞ்
சிந்தைகலக்கந்தெளிந்   துன்றன்சொரூபந்தோற்று
மந்தவழியருள்செய்   தென்றன்பிறவிமாற்று   முன்பாத
கானனவிருமுனி   காணநடமாடிய
ஞானகனகஸபை   வாணாவன்பர்தேடிய
மோனமணியேதூய   வானமதிசூடிய
ஸ்ரீநீலகண்டசஞ்   ஞானுமுன்மால்தேடிய   வுன்பாத

இராகம் பைரவி தாளம் சாய்ப்பு.

பல்லவி.

இன்னமுமென்றன்மீதிலுனதுநெஞ்ச
மிரக்கமிலிருப்பதேனையா



அனுபல்லவி

வன்னமான் மழுகரந்தன்னிலணியுந்தூயா
வாமமேவுஞ்சிவகாமிமகிழுநேயா
முன்னம்மாலயனடிமுடிகாணாவப்பிரமேயா
முழுதுமுனையேநம்பித்தொழுமவர்க்கேசகாயா   இன்ன

சரணங்கள்

ஜனனமரணவரைதொலைக்குங்கருணாலயா
சிவனேயெனவருந்தச்செயவதெலினலையா
மனதுக்கவலைபகற்றுதற்கென்னமலையா
மலையுமுனதுகைக்குத்தனுவாகவிலையா   இன்ன
அனைத்துயிர்க்குமுயிராய்நிறைந்தவநேகநாமா
வடிமையாமெனைநீசோதிப்பதலங்காரமாமா
உனதுதயவுடைமையென்பதும்பொய்யாமா
உண்டவெச்சிலுணவேண்டித்தின்றதும்மறைந்துபோமா   இ
தொண்டுசெய்பாலனைமுன்காலனைவென்றுதரித்தோனே
துண்டமதிகங்கைதும்பைகொன்றையாதிதரித்தோனே
அண்டர்முனிவருய்யப்பண்டுவிஷம்புசித்தோனே
அண்டினோரையாளுநீலகண்டனெனவுதித்தோனே   இன்ன

இராகம் சுருட்டி, தாளம் சாய்ப்பு

பல்லவி

தயவுசெய்யவின்னமென்ன தாமஸம்ஸ்வாமி

அனுபல்லவி

நயனங்கள்மூனுடையவேதாநம்புமடியன்மீதும்வாதா
கயல்விழியுமைமகிழும்நாதாகருணைசெய்தெனையாளொணாதா   தய

சரணங்கள்

தேன்மலக்கொன்றைதும்பைகங்கைதிங்களணியுந்தேவா
மான்மழுதரித்ததோக்கும் மங்களரூபமகானுபாவா
மீன்கண்ணிமடிமீதுவிளங்கவின்னவர்முனிவர்பொன்னடிவணங்க
வான்புகுங்கைலாஸவாசாவணங்குமன்பர்கட்கிரங்குஞ்சர்வேசா
தய

உன்னதமானதெய்வமுனைப்போலுண்டோசரிக்குநேராய்
உலகிலெனைப்போலெளியவரெங்குமொருவருமில்லைப்பாராய்
உன்னையல்லாமல்வேறுநிர்வாகமொன்றுமில்லைக்காணீயேதாரகம்
அன்னைதந்தையுமானமுதலேயடியார்க்கிரங்குங்கருணைக்கடலே
தய

பாடிபுனைக்கொண்டாடுமடியர்பரதவித்திடப்போமோ
தேடிப்பொல்லாதவினைகள்சுமக்கச்சிறியேனென்னாலேயாமோ
வாடியபயிர்தனழிந்திடப்பெய்யும்மழையெனக்கிருபை
பொழிந்திடச்செய்யும்
கூடியசமயமிதுவேகண்டாய்
கோவேபுகழ்கொண்டதேவேநீலகண்டா — தயவு

இராகம் பைரவி. தாளம் சாய்ப்பு.

பல்லவி

உன்போலதெய்வமுண்டா வெங்கட்
குறுதுணையாங்கதிநீயே கண்டாய்

அனுபல்லவி

சாம்பசதாசிவமேஜீவதாரகமேஜகநாதாரமே — உன்போல

சரணங்கள்

எல்லாம்நீயன்றியுண்டாவுன்னையில்லாததானவையேதுமுண்டா
நல்லாயெனக்குமெங்குமுமைநாதனுய்நின்றன்பர்மீதிரங்கும் — உன்
வானம்புவியுமொன்றுய்த்தங்கிவாழுமனைத்துயிர்தோறும்நின்றுய்
தாமொருவர்க்குமெட்டாப்பெருந்தன்மயமானபெருமைதொட்டாய்
புன்மாயப்புவிமயக்கில்மனம்புந்துகரைந்தறிவைக்கலக்கி
ஜன்மாதித்துன்பங்கொண்டவெங்கள்தீமைதடுத்தாளுநீலகண்டா

இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஆதி

பல்லவி

என்னேரமுமென்மேற்கிருபைசெய்வாயீசாபரமீசா

அனுபல்லவி

தென்னாடர்கள்பணிசெய்துபுகழ்மைகொண்ட
தென்குளந்தையில்வாழுந்திருநீலகண்டா
பன்னகபூஷணமணிதிகழ்தேகா
பார்வதிநாதபரமவைபோகா
பொன்னனமேருவில்வளைத்திடுமேகா
புரஹரமறைப்பொருளருளும்விவேகா — என்னேர

சரணங்கள்

உன்னையல்லாற்கதி பின்னுமெனக்கார்பாதி
யுடனுமைக்கிந்தவருட் கடலேநிறைந்தசோதி
யென்னுளமுன்னடிக்கீழ் மன்னுநிலையருணீதி



யென்னவுமாண்டுகொள்முக்கணெம்பரமனேயாதி
அன்னைதந்தைநீயாகவேமத்தே
னாதரிக்கவுன்கடனெனவிதித்தேன்
சந்நிதியிற்சந்ததம்நின்று துதித்தேன்
சரணஞ்சரணமென்றுனடிமையாய்ப் பணிந்தேன் — என்னேர
அம்புஜநாபனுமரி யன்புடன்றன்கண்பறித்து
அம்புஜமெனநின்பாத வம்புஜந்தனிலர்ச்சித்து
நம்புபன்பர்க்காயிரங்கி நல்லசக்கிரமளித்து
ஞாலமெல்லாம்பணியு நான்மறையும்புகழ்த்தும்
அன்பர்க்கன்பனு மானேபோற்றி
யடிமைக்கடிமையாமெனையுந்தேற்றித்
துன்பவினைமாயத்துயர்தனைமாற்றித்
தொலையாஜனனக்கடற்கரையேற்றி — என்னேர
பாலனுக்காகவே காலனையுமுதைத்த
பாதனேகருப்புவில் மாரனையுமெரித்த
பாலநயனபுரமூன் றுமனல்விடுத்த
பாவனபரமீசயானையின்றோலுரித்த
சூலகபாலமணிந்திடுங்கரனே
சுருதிபுகழ்ந்திடுஞ்சோமசுந்தரனே
மூலமுதற்பொருளாகியபரனே
முத்தியருளுஞ்சர்வசதநிசங்கரனே — என்னேர

இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஏகம்.

பல்லவி.

பரமதயாகரசங்கர சந்திரசேகராபுரஹரா
பரமதயாகரசங்கர

அனுபல்லவி

சுரமுனிவரானைவருந்தொழுஞ் சுந்தர சுதானந்தசுந்தரிநாத — பரம

சரணங்கள்

ஆனந்தநிர்த்தவிநோதாம்புஜத்தா
ளணைத்தெந்நாளுமெனைச் சொந்தமாயாளும் — பரம
பத்தவிலாஸாவதாகிலேசா
பணிபவரார்த்திஹராணகிருபாமூர்த்தி — பரம
ஆதிமத்தியாந்தரகிதவேதாந்த
வறிவாயகண்டப்பொருணீலகண்ட — பரம

இராகம் தன்னியாசி. தாளம் ஆதி

பல்லவி

சோதிப்பதென்னஞாயமா பரமசிவச்
சோதிப்பொருளேமாயமா

அநுபல்லவி

பாதிப்பிறைபணியுஞ்சோதிப்பொருளேயுன்னைப்
பரமெனவேநம்பிச்சரணமடைந்தவென்னைச் சோதிப்ப

சரணங்கள்

மாயையகற்றுநீயென் மனவேதையெனுமற்ப
பேயைவிலக்குவதுபாரமா உன்னை
வந்திப்பவர்க்கிரங்காச்சிந்தைநீ வைத்திடுவ
துந்தன்பெருமைக்கலங்காரமா பெற்ற
தாயைப்பிரிந்தவிளஞ்சேய்க்காரைக்கண்டாலுந்
தாயைக்கண்டன்றித்துயர்தீருமா விந்தத்
தரணியிற்றருமாதிபலதவமுமுனையான்
சரணமென்றதவத்தைநேருமா ஸாமி சோதிப்ப

மேருவைச் சேர்ந்தகருங்காகமும்பொன்னிறமாய்ச்
சேருமென்றுரைப்பதும்பொய்தானே யந்த
மேருவிற்கொண்டபெருமானுன்சரணடைந்துப்
பாராசைதீராதுழல்கின்றேனே புகழ்ந்
தாராதனைசெய்வோர்கட்கயன்முதலோர்க்குமேலாய்ச்
சீரானபதங்கொடுத்தருள்வோனே பிழை
யனந்தஞ்செய்தாலுமடிபணிந்தபின்பொறுத்தாள
நினைந்திடவேண்டும்நீயே பெரியோனே ஸாமி சோதிப்ப

ஸ்ரீராகம் ரூபகதாளம்

பல்லவி

ஈசுவரனேஇந்தவேளைகிருபைதந்தெனையாள்பர மீசுவரனே

அநுபல்லவி

ராஜராஜவாஸவன்முத லானதேவதானவர்தொழுஞ்
சேஷபூஷவேஷநேசதந்திமுகவன்ஜநகானந்தஜக தீசுவரனே



சரணங்கள்

சரணாகதிசேரு மருணைப்புயநேருஞ்
சரணமேநிதமுமுன் சரணஞ்சிவசரணம்
கருணாசாகரனேகாமஸம்ஹாரனேவரதானபரனே கிரி
மகளுமைமகிழ்வரசுகஜக தீசுவரனே

ராப்பகற்றுபாப்போல் லாப்பாவிபெறிராய்
நானின்றுவலையச்செய் தானன்றோநினையாய்
பாவியென்றாலுமுன்பாதம்பணியுமென்பாபமகற்றியருள்
பாராய்க்கிருபைநாராயகம்வாராய்ஜக தீசுவரனே

நேமமொன்றறியேனுன் நாமமேபிரியேன்
நேருண்மைதெரியேனிப் பாரினிற்சிறியேன்
நீமறந்திடாதேநின்பரங்கைவிடாதே கோமளமான்மழுக்கரங்
கொண்டவிஷமுண்ட நீலகண்டஜக தீசுவரனே

இராகம் நாகநந்தினி. தாளம் ஆதி.

பல்லவி

ஈசனேநின்பாதஞ்சரண மிருவினைதீர்த்
தருளஞ்சுந்த ரேசனேநின்பாதஞ்சரணம்

அநுபல்லவி

தேசம்புகழும்பாண்டியராஜன்
செல்வியோர்பாகங்கொண்டருளு மீசனே

சரணங்கள்

சிட்டர்புகழுந்தென்மதுரைச்சிறந்தபொற்றாமரையருகி
லெட்டுநாகந்தாங்குமானவெழில்பெறுமிந்திரவிமானத் தீசனே

ஆறுருடிமாறியாடி யன்பர்க்கின்பமாதரித்தோ
யாறுபத்துநாலுவிளை யருள்புரிந்ததிருவாலவா யீசனே

மீனவிழிஞானமாதுமெய்கலந்துமைபொருந்து
மானநீலகண்டமுமோடமர்ந்தருளுங்கடம்பவனத் தீசனே

இராகம் நாட்டைக்குறிஞ்சி. தாளம் ஆதி.

பல்லவி

ஜயஜயகைலாஸகிரிவாஸா
ஸ்ரீகண்டபரமீசா ஜோதிவிலாஸா

அனுபல்லவி

பயபவநாசனபரமதயாகர
பார்வதிமனோகரபரசிவசங்கர ஜயஜய

சரணங்கள்

அண்டசராசரமாகியகாரண
வனைத்துயிர்க்குயிராகிநிறைபரிபூரண
தொண்டர்மனமேகுடிகொண்டருளுமெய்ஞ்ஞானச்
சுடராய்விளங்கும்பரஞ்சோதிசொரூபமான ஜயஜய

காமனைப்பொடிசெய்தஞானப்பிரபோதா
கடலிடைபொங்கிய கறையுண்டநாதா
ஓமெனும்பொருளுண்மையானசுபாவா
வுலகம்பணியுஞ்சகலோத்தமதேவா ஜயஜய

மாலயன்தேடியவடிமுடியானே
மாவிடையேறியருட்சிவபெருமானே
நீலகண்டனேயுனைநினைந்திடத்தானே
நீங்கிநின்றுயரெல்லாமறிவாருட்டேனே ஜயஜய

இராகம் முகாரி தாளம் சாய்ப்பு.

பல்லவி.

இனிநான்மறக்கேனே யிணையடியை
யிதயங்கொண்டிருப்பேனே

அனுபல்லவி.

பனியாமதிபுனலணிசெஞ்சடையானே
பரமனேயபயவரதனேமான்மழுப்
படையனேயெனையாளுடையவனேவுனை இனிநான்

சரணங்கள்

தாயுமையொருபாகனே சரணமாயுன்
றனைமுற்றும்நம்பினேனே
நீயுள்ளஞ்சோதித்தாலு நிதியந்தந்தாள்வித்தாலும்
நித்தனேநிகிலகர்த்தனேயடியார்
நேசனேயென்பாவநாசனனேயுனை இனிநான்

மங்கலந்தருநாதனே வானவர்மற்றும்
மலரிட்டிறைஞ்சும்பாதனே



சங்கடம்புரிந்தாலுஞ் சந்தோஷமிருந்தாலும்
தாரகனேகால மாரகனேவேத
தற்பரனேயென தப்பனேயுன்றனை இனிநான்

அடுத்தவர்க்கருளையனே யாலமுண்டிருந்த
வகிலமாட்கொண்டமெய்யனே
தடுத்தினிமேலாண்டாலுந் தனப்பெருமைகொண்டாலுஞ்
சங்கரனேநாலு செங்கரனேசர்வ
சத்தனேயெனது கர்த்தனேயுன்றனை இனிநான்

முத்தொழில்செய்முவுருவனே மூன்றுமொன்றான
முழுமுதலாயசிவனே
பத்தனைநீவாதித்தாலும் பாலிக்குமருள்வைத்தாலும்
பஜனைவிடேனிது நிஜங்கெடேன்பவநோய்ப்
பண்டிதனேநீல கண்டனேயுன்றனை இனிநான்

இராகம் ரீதிகவுளை தாளம் ஆதி

பல்லவி

சிவானந்தம் ப்ரம்மானந்தம் சின்மயபரானந்தம்

அனுபல்லவி

பவாதிரஹிதபரம் நிராதாரம
பரிபூர்ணமிர்தபாராவாரம் சிவ

சரணங்கள்

ஸந்ததம் நித்யம் ஸர்வதா ஸத்யம்
சமதமாதிகுண ஸாதுஸ ப நயம்
சிந்தனாதீதம் சிதாகாசபோதம்
ஜனனமரண பயஸாகரபோதம் சிவ

வேதாந்தஸாரம் விமலாகாரம்
விஷயவிஷாசன ஜடஜனதூரம்
நாதாந்த ரங்கம் நதஜனஸங்கம்
நாராயண ப்ரஹ்மாதிப்ரஸங்கம் சிவ

சின்மாத்ரசேஷம் சிவயோகபாஸம்
சிததநிர்மல பக்தமுக்திப்ரவேசம்
நிர்முக்தபாபம் நிச்சலதீபம்
நீலகண்டதாஸத்யானசுவரூபம் சிவ

இராகமாலை நாட்டை தாளம் ரூபகம்.

பல்லவி

நாதனைநம்பும்போதரே யின்ப(நாட்டை)யாள்வரே

அநுபல்லவி

சீதமதிச்செஞ்சடையினனைத்திகழ்(வராளிப்)
பூந்தோடையினனை        நாதனை

சரணங்கள்

பூவளந்தோ னுமய னுமறியாப்போதனைச்(சிராகத்)தெரியாப்
பாவியர்களுக்குணரவரியப்பாப(பைரவ)னைத்
தேவதேவனைப்புரமுன்றெரியச்செய்த(கல்யாணி)யுமையாட்குரிய
ஆவியையருட்டேனைத்துரியவாரமுதைச்சிந்தைமற
(வராபி)மானப் பொருளை        நாதனை
ஐம்புலன்களையடக்கிநிறுத்திய(சைந்தவி)கற்பமனதைத்திருத்திச்
சம்புபதத்திற்சமாதிபொருத்திச்சாந்தத்(தோடி)கமேல்
நம்புமன்பர் தம்பவத்தைத்தொரத்திகன்றுய்ப்(பரசு)பாணிதன்
கரத்திலின்புறச்செய்யுஞ்சிவத்தைக்கருத்தி
லெண்ணுவரேபுண்ணியரெம்மேகனைநன்(மோகன)னை        நாதனை
பத்திபுரிவார்புகழ்ந்துள்ளநடம்பரவி(சாவேரி)கரத்துடனுடுஞ்
சத்தியோர்பாகாசதுமறைபாடுந்தார(கமாசிற்)சித்தமுடையார்
பணிந்துகொண்டாடுஞ்சிவ(சங்கராபரணெ)னவண்போடும்
நத்திசெய்தென்றுநல்லவர்தேடுநாயகனைத்தியவால
நஞ்(சுருட்டி)யுண்டவனை        நாதனை
அந்தமிற்பிறப்பல்லலைநீக்குமந்தகம(தநாசி)யைச்சேர்க்குஞ்
சிந்தையுடையார்க்கருள்வெளிநோக்குந்தீங்(கடாநா)மனை
எந்தவுலகுமின்புறக்காக்குமே(சகநா)நாவெனத்துயர்போக்கு
மெந்தைநீலகண்டனையார்க்குமெளிதில்முத்தியருணிதியை
யெழில்வா(மத்திமாபதி)யை        நாதனை

இராகம் நாதநாமக்கிரியை தாளம் சாய்ப்பு

பல்லவி.

தரிசிக்கவேணும் நித்யம்நிதயம்
தரிசிக்கவேணும்



அநுபல்லவி

தரிசித்தபொழுதேநல்வரமுத்திதரும்மூர்த்தி
திருநீலகண்டரருள்புரியும்வடிவையேத்தி        தரிசிக்க

சரணங்கள்

பாவமகற்றுஞ்சிவகங்கையும்வினைதீர்த்துப்
பலந்தருங்கணபதிதரிசனமுமுயர்ந்த
கோபுரமும்விளங்குந்தொசமும்யாவர்க்குமனு
கூலஞ்செய்யுந்துவாரபாலர்தமையுங்காணக்
கோடிக்கண்வேணும் ஆனந்தக்கூத் தாடிடந்தோறும்
மண்டபங்கள்தன் ரூபமுமெங்குநிறைதீபமும்
நடனவி னோதன்சிதப்பர நாதனருள்புரியும்
சோபிதமானபொன்னம்பலமுன்சென்று
துய்யநந்திபின்நின்று மேயன்வடிவைக்கண்டு
துதிசெய்தபணிந்து அவரடியே கதியெனநினைந்து
மனமகிழ்ந்து தாபமகற்றிக்கிருபையாலே
நினைந்தவரந் தரும்புராகரகங்கா தரஹராஹராவென்று        தரிசிக்க
சந்திரவொளிபோன்ற நந்திமண்டபத்திலுஞ்
சார்ந்துவாவந்தக்களி கூர்ந்துபணிந்தெழுந்து
சந்ததமடியவர் சிந்தையிற்குடிகொள்
ளருசானன்மகிழும்ப ஞ்சாட்சரநினைவுடன் சங்கரன்பாதம்
தஞ்சமென வணங்கியபோதம் அடைந்தபின்
சிந்தைதெளிந்துமனம் மகிழ்ந்தேயனுதினமும்
சிவத்தைநினைந்துபொல்லாப் பவத்தையொழிந்திடுந்தன்
சொந்தவறிவிலுணர் வந்துபரமமான
சூட்சமறிகிருபாக டாட்சமருளுஞ்சோம சூடனைநாடி
யனேகவித நாமங்கொண்டாடி துதிகள்பாடி
அந்தரங்கபந்தியா னந்தமுட்கொண்டுபர
மரமிர்தக்கடலாடி க்ஷேமப்பதவிதேடி        தரிசிக்கவேணும்
அண்டமுழுதும்பெற்ற வம்மையுமையாளென்று
மானந்தநாயகி தான்வளர்மாமணி
மண்டபந்தனிற்பத்தி கொண்டதொண்டர்க்குமுக்தி
வருமென்றண்டமுழக்குந் தருங்கண்டதொனிகேழ்க்க

மனச்சுத்தமாகும் முன்செய்தகன்ம வினையற்றுபோகு
மருகிற்சென்று கண்டவுடன்கவலை மண்டி
யோடுமேயம்மை காருண்ணியாமுத பூரண
லோசனப் புண்டரீகமும்ரத்னக் குண்டலமுடனருள்
பூண்டபரனும் நீலகண்டன்மனமுருகும்
புன்சிரிமுகமும் மதுவையுண்டு கொஞ்சும்பொன்சுகமும்
நானுபதமும் மண்டபத்தில்வைத்துக் கொண்டுநின்றருள்தரும்
நித்தியகல்யாணிரூபம் பத்தியுடனேகண்டு தரிசிக்கவேணும்
நாலுபுறமுந்தென்னைகமுகுகதலிமாபுன்
னாகம்பனஸ்ம்முதலாக நெருக்கிடுபூஞ்
சோலைநடுவிலைய்ய னாலயம்நவரத்தினஞ்
சூழ்ந்தபதக்கம் நடுச்சேர்ந்தவச்சிரம்போலே
துலங்குஞ்சொரூபன் தேவர்முனிவர் வணங்கும்பிரதாபன்
மாலயன்தேடும் மூலன்நம்பினோர்க்கனுகூலன் மோகத்தால்
மாயா மோகினியுடன் சேர்ந்த போகத்தில் வந்தவன
பாலனுடனே யாதி மூலனையுந்தொழுது
பிரதக்ஷிணமாகப்பின்னர் திருச்சன்னதியில்வந்து
பாழ்வினைபோக்கி யருளும்பூசு ராலயம்நோக்கி
மனந்தேக்கிப் பாலனையாண்டகால கலனையாலமுண்ட
பரனைத்தென்குளந்தையில் மருவும்நீலகண்டனை தரிசிக்கவேணும்

இராகம் ஆனந்தபைரவி தாளம் ஆதி,

பல்லவி

பஜனைசெய்வாய்மனமே ஸதாசிவ
பஜனைசெய்வாய்மனமே

அனுபல்லவி

ஸ்வஜனபந்துமனைவிசுதனதியிற்பெற்ற
நிஜவாசையையீசன்மேல்நினைவிருத்தியன்புற்ற

சரணங்கள்

கற்மத்தால்வந்தகாயபொம்மையாட்டம் இடி
கரைவாழ்க்கைநோய்வினைவளர்தோட்ட மப்பன்
அம்மைமனைவிமக்களுறவாட்டந் தன



மனைத்தும்வழியம்பலந்தனில்வந்துசேர்ந்தகூட்டம்
உண்மையிதறிந்துள்ளபொழுதேயுனமை
யம்மையுடனேகருணைப்புநிசர்தமை பஜனை
அற்பசுகபோகத்திலிச்சைதொட்டு உழன்
றுதினியாதிகளிலவதிப்பட்டு தேக
கப்பனுடைந்துளநிமதிகெட்டுக் காலன்
கற்பிதகண்டனையேற்றுமிப்புவிவழியிட்டு
மிப்படியானபொல்லாவிருவினைக்கடல்தாண்டி
யப்பனருளைநாடியானந்தம்பெறவேண்டி பஜனை
ஊளவுபோகுமுன்வீட்டைக்காக்கவேணும் போனால்க்
காத்திருப்பதிலென்னபலன்காணும் உந்தன்
சளமதியெல்லாம்விட்டுவிடவேணும் நல்ல
தருணமிதுதப்பினால்வருவதெதுவோபேனும்
இளமதியணிபரமீசன்ஸ்ரீநீலகண்ட
ருளமகிழ்ந்தெதுவுந்தந்தருளும்வைபவங்கொண்ட பஜனை

இராகம் காம்போதி தாளம். ஆதி.

பல்லவி

மலையாதே மனமே வீணே நீ
மலையாதே மனமே

அனுபல்லவி

தொலையாசம்சாரத்துயர்தொலைந்துச்சுகம்பெருக்கத்
தூயநமச்சிவாயமனுச்சொல்லவாயிருக்க
நலமாய் நம்புவார்க்கெல்லாநாடும்பொருளளிக்க
நாதன்நம்முட்களிக்கவேதுனக்குக்கலக்கம் மலையாதே

சரணங்கள்

தினமுஞ்சிவநாமமேதனமென்றுபாடு
திங்களணியுங்கெங்காதரனைக்கொண்டாடு
அனவரதமுமன்பருளஞ்சொந்தவீடு
அந்தரங்கப்பொருளை வந்தித்துநாடு மலையாதே
தந்தையாயனைவர்க்குஞ்சொந்தமாயருமை
தாங்கியஜகமெங்குமோங்கியபெருமை

விந்தையுளான்கருணைச்சிந்தையுளான்புகழ்மை
விளங்கியசிவபாதம்வணங்கிற்போமிகழ்மை — மலையாதே
பரிதிமாமதிகனல்திருவிழிகளைக்கொண்டு
படைத்தழித்தல்முதலாந்தொழில்கள்மூன்றையுங்கண்டு
அரி அயன்தேவர்தொழுவாலமருந்திப்பண்டு
அகிலம் பாலித்தநீலகண்டந்துணையுண்டு — மலையாதே

இராகம் சௌராஷ்டிரம். தாளம் சாப்பு.

பல்லவி

தினமும்நினைமனமே நீலகண்டனைத்
தினமும்நினைமனமே

அநுபல்லவி

தினமுநினைமனமேயுனதுளத்திருள்போமே
செய்தபாவமகலுமேபொய்யல்லவிதுமெய்யாமே — தினமு

சரணங்கள்

எங்குநாம்போயினுமவரங்கெலாகூடவருவார்
எந்தவாபத்துவந்தாலும்வந்ததனைநீக்கிடுவார்
மங்களமென்றுமுதவிமனதினிற்குடிகொள்ளுவார்
மாயவிருளையொழித்துஞானவெளியைத்தருவார் — தினமு
பொல்லாஜனனக்கடலெல்லைகண்டுதேறலாமே
புண்யன்பதத்தைமனம்நண்ணிசுகமுறலாமே
வெல்லாவினையகன்றுநல்லானருள்சேரலாமே
வேண்டியதைப்பெற்றுபவந்தாண்டிக்களையாறலாமே — தினமு
பததர்க்கிரங்குங்கருணைச்சித்தமுடையபரனைப்
பனிமலைமகட்குரியவினியசிவசுந்தரனை
முத்தராம்மார்க்கண்டர்முன்னுதித்தகாலசம்ஹாரனை
முப்புரமெரித்தமுக்கணப்பனைச்சிதம்பரனை — தினமு

இராகம் அமீர்கல்யாணி தாளம் ஆதி.

பல்லவி

சிவனைநினைமனமே ஸாப்பஸதா
சிவனைநினைமனமே

அநுபல்லவி

பவவினையகன்றுபோம்படிகிருபைதந்தாளும்
பரனைப்பரமதயாகரனையுமாவரனைச் — சிவ



சரணங்கள்

தரித்திரம்வந்துபொல்லாப் பொருட்டேடவாசைசொல்லச்
சாசுவதமாகிநில்லா வாஸமென்றறிவில்லா
பருத்தஸம்ஸாரத்துள்ளா வருத்தக்கடலுக்குள்ளாய்ப்
பதியாமலொன்றுங்கள்ள முதியாமலாண்டுகொள்ளச் — சிவ
மாதர்மோகம்ஜனிக்க மன்மதப்பேய்பிடிக்க
மனதுமெத்தச்சலிக்கக் கனபவம்நிர்வகிக்க
வியாதிவந்துற்பவிக்க போதமழிந்திறக்க
இன்னமும்பிறப்பிருக்கப் பண்ணாமல்முத்தியளிக்கச் — சிவ
ஏகாந்தசித்தசுக போகாதியனுபோக
மெதுவுந்தந்தின்பமாக வுதவிசெய்திடும்யோக
ஸ்ரீகாந்தன்முதலாக ஸேவிக்கும்வைபோக
ஸ்ரீநீலகண்டமகா தேவன்கிருபையுண்டாகச் — சிவ

இராகம் காம்போதி தாளம் ஆதி.

பல்லவி

சிவனைநினைந்துஸ்துதி பாடிக்கொள்மனமே
சிவமோக்ஷம்வருமே

அநுபல்லவி

தவஜபவிரதமெல்லாமுனக்கிதுவாமே
சகலசம்பத்தென்றெண்ணியகமகிழ்ந்துபரம — சிவ

சரணங்கள்

சூதானவேஷம்பூண்டு நடக்கவும்வேண்டாம்
சூத்திரங்கையிலேந்திச் சுமக்கவும்வேண்டாம்
வேதமந்திரமொன்றுஞ்சபிக்கவும்வேண்டாம் — [சிவ
விரதங்கள்கொண்டுதேகத்தைக் கிலேசப்படுத்தவேண்டாம்
ஆலயமெல்லாந்தேடி ஓடவும்வேண்டாம்
அலைகடல்முதற்றீர்த்த மாடவும்வேண்டாம்
காலதர்ப்பணமோமங்கழிக்கவும்வேண்டாம்
கண்ணையடைத்துத்தியானம் பண்ணிவிழிக்கவேண்டாம் — சிவ
நேமநிஷ்டையஷ்டாங்க யோகங்கள்வேண்டாம்
நெடுமலைவனமெங்கும் போகவும்வேண்டாம்
பூமிவாழ்க்கையைத்தள்ளித் திரியவும்வேண்டாம்
புஸ்தகங்களைப்பார்த்துச் சித்தங்கலங்கவேண்டாம் — சிவ

வஞ்சகஞ்சூதுவாது பாபமனைத்துமாறும்
மதியுதயம்போலவே யிதயந்தெளிந்துதேறும்
நஞ்சமுதுண்டநீல கண்டன்கருணைவீறும்
நன்மையுனக்கிதென்றே வுண்மையாய்த்தினந்தோறும் சிவ

இராகம் எமுனாகல்லியாணி. தாளம் ஆதி.

பல்லவி

சங்கரனைத்தினந்துதிமனமே அவர்
தானுனக்கிகபரதனமே

அனுபல்லவி

இங்குளவாழ்க்கையெலாஞ்சொற்பனமே நீ
இத்தைநம்பி ப்புத்திகெட்டுழைப்பதுபேய்த்தனமே சங்கரனை

சரணம்.

மைந்தருறவுபொருள்பெண்டு ஆடு
மாடிவைகளில்மகிழ்கொண்டு
இந்தவுடலைநிலையென்று நீ
எண்ணியிருப்பதிற்கேடுண்டு
அந்தகனார்தூதர்கண்டு உனை
அணுகியிழுத்தழைக்குமன்று
உந்தனுடனேகூடவொன்றும் வந்
துதவிசெய்யாதெனவேமதிதெளிந்தாசைவிண்டு சங்க
காமக்குரோதலோபமோகப் பெருங்
கானனந்தனிற்புலியாக
நீமயங்கியலைவதாகா தறு
நீதியில்லாதவவிவேகப்
பாமரனுப்வெகுசோகப் பொல்லா
பவஸாகரமதில்மூழ்கச் செய்யு
மாமிந்ததுர்க்குணம்போகப் பர
மானந்தமுடனென்றுமழிவிலாக்கதிக்கேக சங்கர
அவனியிலொருபாலகனை வேண்டி
யந்தகனையுதைத்தசிவனைக்
கவிசொல்லித்துதித்தசுந்தரனைத் திருக்
கைலையிலழைத்துவைத்தவனைத்
தவமுனிவர்தொழும்பரனைத் தொண்டர்



தமக்கிரங்குங்கருணாகரனைச்
சிவசிவாவெனவேநோய்வல்வினை பல
தீங்குகளறக்குடிதாங்கும்நீலகண்டனை சங்கர

இராகம் சுருட்டி. தாளம் சாய்ப்பு.

பல்லவி.

ஈசனைத்துதித்தேதேறுமனமே என்றென்றைக்கும் நீ

அனுபல்லவி

ஆசைவலைக்குளேசிக்கிவீணு
லோசனையால்மதிமோசம்போகாதே ஈசனை

சரணங்கள்

மாயாப்ரபஞ்சவாழ்வைநிலைவரமாகநினையாதே என்றன்
காயமென்பெண்டுபிள்ளைமனையென்று சருதிமலையாதே ப்ராண
வாயுவொடுங்கும்போதுபாபபுண்ணியமல்லாலொன்றும்
வாராதே இவைநேயமென்றெண்ணுமல்மாயையில்மாட்டி
வீணேமண்ணினிற்பிறந் தின்னமிறவாதே ஈசனை
நடவாநடக்கைநடந்துபின்பு நரகத்திற்சாடாதே பொல்லா
மடவார்மயக்கவலைக்குளேசிக்கி மயங்கியாடாதே துஷ்ட
ருடனேயுறவுதொடர்ந்துதிரிந்து துறவில்விழாதே பவக்
கடலையகற்றிக்கதிதந்தருளுங் கர்த்தனையன்புடன்
சித்தம் மறவாதே ஈசனை
மைக்கண்ணியானவுமைக்கருளும்மணவாளனைப்பரனை முன்னந்
தக்கனெனுமாமன்றலைகொய்தப்ர தாபனைஹரனை மேலும்
அக்கரவம்பூண்டமார்பனைஸச்சி தானந்தரூபனை நாகம்
கக்கியவிஷத்தினைப்புசித்தாண்டருள் காலனுக்குங்
காலனைநீலகண்டனை ஈசனை

இராகம் பியாகு தாளம் ஆதி

பல்லவி

நம்பிக்கொள்நம்பிகொள்சிவனை
நம்பிக்கொள்நம்பிக்கொள்

அனுபல்லவி

அம்புவிவாழ்க்கையை அனித்தியமென்றுணர்ந்து
அறிவுகொண்டபிந்துகண்திறந்துமனந்தெளிந்து நம்பி

சரணங்கள்

மெத்தச்சுகந்தருமே பாழ்த்தவினை விட்டுப்பிரிந்திடுமே
சித்தப்ரமையின்றுசுத்தநிலைகண்டு தேறிக்கொண்டாடித்துயராறிக்
கொள்மனங்கொண்டு — நம்பி

எல்லாஞ்சிவன்செயலே — அல்லால்வே
றில்லைஜகத்திலே
எல்லாம்வெளிமயக்கமெல்லாம்மோகத்தியக்க
மென்றறிந்தேயன்புநிலைநின்றுவந்துண்மைப்பொருளை — நம்பி

காயம்சதமல்லவே — தேடிவைத்த
கனதனம்நிஜமல்லவே
சாயாபுருஷன்மீது சாதனைசெய்யும்வாது
தள்ளியிதுகள்ளமென்றுவெள்ளிமலையானையென்றும் — நம்பி

கண்டதைக்கண்டுமோகங் கொள்ளாதே
காலன்வரும்முன்னே
அண்டம்புகழ்நீலகண்டன்றிருத்தாளை
அன்புடன்பணிந்துபாடித்தன்பரமென்றுகொண்டாடி — நம்பி

இராகம் ஸாமம் தாளம் சாப்பு.

பல்லவி

மனமேயுனக்கொருமருந்துசொல்லக்கேள்
மரணஜனனவியாதிதீர்ந்திடும் — மனமேயுனக்

அநுபல்லவி

ஸனகமுனிவர்கள்தேடியறிந்தது
ஸகலகாலமுந்தழைத்தருவது — மனமே

சரணங்கள்

கங்குற்பகலறவெங்குநிற்பதுவே — யாவர்க்குமது
கருத்துக்கிசைந்திடும்பொருத்தமானதுவே
தங்கமெனவேவிளங்கும்பொதுவது
தன்னந்தனிமருந்துண்ணத்திகட்டாது — மனமேயுனக்

காலபாசம்வந்தேறவொட்டாது கனிவில்லாத
கள்ளக்கருத்தர்க்குக்கொள்ளக்கிட்டாது
மூலமுனிவர்கள்கற்பமாயது
முன்னேறுமது அன்பர்க்கெளியது — மனமேயுனக்



பாபதாபமனைத்துமாறிடுமே — யுள்ளங்குளிரப்
பாதிமாமதிசூடியாடிடுமே
தீபம்போலகந்திருளைநீக்கிடுஞ்
சித்திதரும்கலமுத்தியளித்திடும் — மனமேயுனக்

கவுரியென்றொருபொன்கொடிதாங்கிக் கைலாஸமென்ற
கிரியினின்றுவளர்ந்துபேரோங்கி
அவனியெங்குநிறைந்துபெருகிய
வாதிமாமறையோதியுதவிய — மனமேயுனக்

அடிசுவந்துவெண்மேனிகொண்டதுவே நீலகண்டமுண்
டடையாளங்கைகண்டபலமிதுவே
அடியராய்ப்பலபேர்கள் முன்னிதை
அருந்திப்பவவினைதணிந்தசுகமிது — மனமேயுனக்

இராகம் பரசு தாளம் ஆதி.

பல்லவி

சிந்தனைசெய்வதெப்போது தெய்வத்தைநெஞ்சே
சிந்தனைசெய்வதெப்போது

அநுபல்லவி

இந்தவுடலைவெகுசொந்தமெனவேநினைந்
தெந்தவேளையும்மோகபந்தமுற்றிருந்தால் — சிந்த

சரணங்கள்

தன்னைமறந்துநிதம் பெண்ணைக்கண்டுமகிழ்ந்து
மண்ணில்வாழ்வுநிலையென் றெண்ணிநீயலைந்தால் — சிந்த

இரவும்பகலும்பொருள் வரவினைநாடியாசை
பெருகியறிவழிந்து கரைகாணாதுழன்றால் — சிந்த

சொற்பசுகமாகிய அற்பத்தனவுத்தியோக
தற்பவாங்காரமுற்றுக்குப்புறவீழ்ந்தால் — சிந்த

தனகனம்பெரிதென்றுமனமயங்கியேற்பத்
தனமதிலுறவாடித் தினம்வீணாய்க்கழித்தால் — சிந்த

அர்க்கவுதயங்காட்டித்தக்கோர்சொல்வழியெல்லாந்
தர்க்கவாதங்கள்பேசிச்செக்குப்போற்றிரிந்தால் — சிந்த

தாரம்மக்களுதரபூரணைக்குத்துர்விவ
காரம்பேசிப்பாபாந்தகாரத்திற்படிந்தால் — சிந்த

மண்டலமிசைவெகுமிண்டனெனவேதிநங்
கண்டவர்கட்குழைத்துமண்டைச்சோறழிந்தால் சிந்த
பேர்பெற்றுப்பணந்தேடிசீர்பெற்றுவாழநாடி
பார்முற்றுமலைந்தோடியூர்சுற்றத்துணிந்தாற் சிந்த
உதரநிமித்தம்பாஹிதமஹிதமறியா
விதமாம்பலர்கள்முன்போய்த்துதிபேசிப்புகழ்ந்தாற் சிந்த
கொடியகரகில்விழும்படிதுடிகொண்டுசிவ
னடியாரைநிந்தனைசெய்திடிவிழநடந்தாற் சிந்த
பெருங்கல்விபலகற்றுப்பெரியவனானேனென்று
திருநீலகண்டகுருவருள்பெறுதிருந்தால் சிந்த

இராகம் கமாசு தாளம் ஆதி

பல்லவி

தேறுவதெப்போநெஞ்சே தெளிந்துகரை
யேறுவதெப்போநெஞ்சே

அநுபல்லவி.

கூறும்வேதத்தினுண்மைகுறியாமலேயஞ்ஞானக்
காரிருளில்கவிழ்ந்துகலங்கிமயங்கிநின்றால் தேறு

சரணங்கள்

மண்ணைபொருளையெந்தன்மனைவிமைந்தரேசொந்தக்
கண்ணேநீங்களையல்லாற்கதியிலையென்றிருந்தால் தேறு
உடலேநிலையென்றெண்ணியுலகவாழ்வினைநம்பி
மடமைபெருகநின்றுவனமிருகம்போலலைந்தால் தேறு
தானதர்மங்களெல்லாந்தன்புத்தியில்லார் செய்கை
ஞானம்பேசுவதெல்லாம்நலிந்தோர்சொல்லென்றிகழ்ந்தால் தேறு
வந்தவழியும்போகும்வழியுமனமோராமல்
இந்தவுடலைநம்பியிறைவனைமறந்தால் தேறு
அகங்கைத்தேனைக்கவிழ்த்தியதன்பிறங்கையைநக்கும்
வகைபோல்ஜன்மத்தைவீணேமடியச்செய்தல்லலுற்றால் தேறு
பரமன்றனைமறந்தோர்பாவிகளாகிப்பொல்லா
நரகம்புகுவாரென்னும்நல்லோர்சொல்லுமிழந்தால் தேறு
புகழுமுண்மையுணராப்பொய்யிலுழன்றுமோகக்
குகையிலமுந்திவெளிக்கொள்ளாக்குருடரானால் தேறு



சொற்பனம்போலேகண்முன்றோன்றியழியுமிந்தக்
கற்பனையுலகத்தைக்கண்டுமகிழலானால் தேறு
எண்ணமுடியாஜன்மமெடுத்திறந்தல்லற்படும்
புண்ணைபொழித்தானந்தம்புகுமருந்துண்ணவிட்டால் தேறு
அண்டமளந்தமாலுமயனுமளவாநீல
கண்டன்கருணைதேடுங்கருத்துணராகில்ஜன்மம் தேறு

இராகம் இந்துஸ்தானிகாப்பி தாளம் ஆதி.

பல்லவி

மோசம்போகாதேநெஞ்சே வீணாய்மதி
மோசம்போகாதேநெஞ்சே

அநுபல்லவி

ஆசாபிசாசுபிடித் தாடியோடித்திரிந்து
ஈசன்பாதாரவிந்த மேத்திப்போற்றமறந்து மோசம்

சரணங்கள்

கன்மவினையால்மாயக் கானலினுற்றகாயம்
ஜன்மவினைகளோயச் செய்தல்மானிடஞாயம் மோசம்
கற்பனையானலோகங் காணுவதெல்லாம்மோகம்
புற்புதமானதேகம் போதமில்லாமலாகம் மோசம்
காசுபணம்பொன்நாடிக் காடுமலைகளோடி
தேசந்திரிந்துதேடிச் சிவனைமறந்துவாடி மோசம்
வாழ்வுதாழ்வுஇரண்டும் மண்ணிற்கண்டனிர்கண்டுஞ்
சாவுமறிகொண்டு ஸன்மார்க்கவழிவிண்டும் மோசம்
பிறப்புமிறப்புத்துன்பம் பிழைத்தலும்பெருந்துன்பம்
பிறப்பிறப்பில்லாவின்பம் பெருக்குஞ்சிவாவலம்பம் மோசம்
போதமுணரமட்டும் பொய்யுலகம்பிரட்டும்
ஆதரவீசன்மட்டு மாமென்றோர்க்கவர்கிட்டும் மோசம்
காலனைவென்றவல்லான் கதிநீலகண்டநல்லான்
காலினைசேரார்க்கெல்லாங் காலனய்யயோபொல்லான் மோசம்

இராகம் உசானி தாளம் ஆதி.

பல்லவி

தேவனைப்போற்றுவோம்வாருங்கள் அவர்
திருக்கூத்நாட்டத்தைப்பாருங்கள்

அநுபல்லவி

ஜீவனைப்பந்தாய்த்தேகத்தைச்செப்பாய்
ஜகந்தனிற்செப்படிவித்தைகள்செய்யும் மகா தேவனைப்

சரணங்கள்

கங்காதரன்பேரைச்சொல்லுங்க ளுங்கள்
காமக்குரோதாதியைவெல்லுங்கள்
சங்கரன்சந்நிதிநில்லுங்கள் தங்கள்
சங்கடமெல்லாந்தள்ளுங்கள் மகா தேவனைப்
பத்தர்விலாஸங்கேளுங்கள் ப்ரதி
பந்தரணங்களைமீளுங்கள்
அத்தனைநிதம்பாடுங்க ளுங்க
ளாத்மநிலையைத்தேடுங்கள் மகா தேவனைப்
சிவனைப்பணிந்துயராறுங்க ளுங்கள்
சித்தப்ரமணம்விட்டுத்தேறுங்கள்
தவமானஞானப்படியேறுங்கள் பொல்லா
ஜனனமரணப்பிணியாறுங்கள் மகா தேவனைப்
ஸத்துக்கள்ஸகவாஸம்பண்ணுங்கள் சிவ
ஸாம்பனைச்சித்தத்திலெண்ணுங்கள்
நித்தியமுஞ்சத்தியத்தைக்காருங்கள் திரு
நீலகண்டனைக்கதிசேருங்கள் மகா தேவனைப்

இராகம் வேகடை. தாளம் ரூபகம்.

பல்லவி

ஆதிசிவனருளாருக்கிருக்குதோ அவரே பெரியவரே

அநுபல்லவி

பாதிமதிநதிபூதியணிந்தன்பர்
பங்கிற்றங்கியெங்கும்பொங்கிப்பூரணமாய்ப்
பாதியில்மாதுபொருந்த வேதமோர்நான்குமறைந்த
பரவெளியாகிநிறைந்தக் கருணுருவாகியேவந்த ஆதி

சரணங்கள்

மாதுமக்கள்வீடுமாடுகனதன
வரிசையுள்ளாரைப் பெரியோராமென
பேதமுள்ளாரறிவில்லார் சொல்லேயல்லாற்



பெரியோர்களவரல்லவுண்மைசொல்லப்
பெருகும் பரகதிசெல்லக் கருதாதெமனையும்வெல்லக்
குருவாய்வந்தருள்செய்யப் பொருளாய்த்தானுணர்ந்துய்ய ஆதி

மேதினியுள்ளோர்கள் போதித்திடச்சாலம்
மேவிப்பணிமணிவாகனப்பெற்றாலும்
வேதநூல்மந்திரவாதங்கள் கற்றாலும்
மெய்யனடிக்கன்புசெய்யாவிடில் வம்பு
வேடமிதுபெருமையல்ல சாடும்வினையகன்றுசெல்லப்
பாடிமறைகள்மொழிசாற்றும் வீடுகுடிபுகுதவேற்றும் ஆதி

சாதிகுலம் நீதிதாழ்ந்ததோர் சிறியோர்
சங்கரற்குரியோராயிடின்பெரியோர்
வேதம்புகழ்கொண்டநாதன் நீலகண்டன்
மெய்யருளகன்ற வையகமாள்கின்ற
விண்ணவராகிலுஞ்சிறியோர் பின்னொருவரும்நேர்சரியோ
புண்ணியமீதுணர்வோரே விண்ணுமண்ணுந்தொழுவாரே ஆதி

இராகம் கமாசு தாளம் ரூபகம்.

பல்லவி

இகபரந்தரும்பெருமை சிவதர்மம்
மிதுவேநாஞ்செய்யுங்கடமை

அநுபல்லவி

புகழும்பொருள்கள்பெற்று மிந்தப்
பூமிக்குச்சுமையாகாமற்
றிகழுந்திருநீலகண்டன்
றிருவடித்தொண்டுக்காளாகுதல் இக

சரணங்கள்

பொங்குகடல்சூழுலகிற் பொருள்தேடிப்புதைத்துவைத்தும்
மங்கையர்க்கும்மக்களுக்கும் மணிபணிகள்பூணவைத்துங்
கண்குளிரக்காண்பவெல்லாங் கனவாய்ப்பிணமாகும்போதி
லங்கிதனையென்னபய னோர்துணையாமறஞ்செய்யாகி
லரர்க்கன்புசெய்குவதே நார்க்குமுறையாகுவதே
திருப்பணிகள்புரிகுவதே பெருந்தபுண்ணியமீதே இக

கற்கட்டுவீடுகள்சமைத்துக் கல்லறையுமுள்ளமைத்துப்
பொற்கட்டிவைத்திருந்தாலும் பூமியாளப்பெற்றாலும்
பற்கட்டிவாயடைத்துயிர்போம் பருவந்திலோர்காணிப்பொன்னுங்
கைக்கெட்டுமோகருதிவைத்தாற்காண்பதென்னேகாய்ந்துமன்னுங்
காலன்புரிபோகாமே காலாந்தகனைவிடாமே
சிலம்பெறுவதுதாமே வேலைநமக்கிதுவாமே — இக

இராகம் பைரவி தாளம் ஆதி.

பல்லவி

சிவநாமம்வெகுக்ஷேமம் ஜபதபங்களிலுமுத்தமோத்தமம்

அனுபல்லவி

பவமாகியபொல்லாஜனனமரணமாற்றிப்
பரமானந்தமுத்தி தந்தருள்சித்தி — சிவநாமம்

சரணங்கள்

ஸகலவேதாகமசாஸ்திரபுராண ஸகலமந்திரசூக்ஷ்மம்
சூக்ஷ்மாதிசூட்சமம் — சிவநாமம்
அகிலமானகன்மஹோமதானதன்மமவற்றிலெலாம்
ஸாரம்ஸாராதிஸாரம் — சிவநாமம்
அனந்தமூர்த்தியாகிப்பரந்தவிவஹாரமற்றசத்திய
போத்தியம்வேதாந்தவேத்தியம் — சிவநாமம்
ஆலமுண்டதிருநீலகண்டரூபமானதிருகுணாதீதம்
ஜீவேசபோதம் — சிவநாமம்

இராகம் வேகடை தாளம் சாப்பு.

பல்லவி

ஏழைநெஞ்சே யேதுக்கின்னம்வருந்துகின்றா
யித்தனைபித்துனக்கேன்

அனுபல்லவி.

பாழுக்குழைத்துப்பலங்கெட்டுநிலைவிட்டுப்
பாபத்தோடு மந்தத்தாபத்துளகப்பட்டு — ஏழை

சரணங்கள்

விழலுக்குள்நீர்பாயக்கால்வெட்டிக்குழிக்கவும்
வேலியில்லாவிளைவிற்பயிர்செழிக்கவும்
அழுகென்றநீயிந்தத்தொழில்செய்துகூத்தாடி
அவலமென்றறிந்தும்வீண்சபலதையைக்கொண்டாடி — ஏழை



மலையேறிவானத்தைப்பற்றித்தொடர்ந்துசென்று
மாமேருவைக்கண்டுபொருள்பெறலாமென்று
பலமானசகடங்களுண்டுசெய்திடக்கோடும்
பெருங்காட்டில்மரந்தேடித்திரிந்தோடிமயங்கிடும் — ஏழை
வேம்புக்குப்பாலையுந்தேனையுநன்றாக
விட்டுக்கனிந்தமதுரக்கனியாக
ஆண்பாடுபெண்பாடுபட்டுழைத்துமண்ணி
லைய்யய்யோபொய்யினைமெய்யென்று நீயெண்ணி — ஏழை
வஞ்சகமானபிரபஞ்சந்தனிலேநீ
வாதுஞ்சூதுஞ்செய்ததேதும்போதுமினி
நஞ்சமுதுண்ட ஸ்ரீநீலகண்டன்பாதம்
நாடிக்கொண்டாடிக்கொள்வாடிப்போமுன்னேரம் — ஏழை

இராகம் எதுகுலகாம்போதி தாளம் ஆதி.

பல்லவி

பெரியோர்பதம்பணிந்தாலெதுவும்
பெறுமேவருமேநலமேகாண்

அனுபல்லவி

பரமாய்கதியென்றறிவாய்நாளும்
பாடிக்கூடியுண்ணடியேவாழும் — பெரி

சரணங்கள்

அட்டமகாசித்தியிட்டமாயவர்த
மருகினின்றேயருள்திருவிளையாடும்
கட்டமெலாந்தீர்த்திட்டமெலாந்தாக்
கவிவுடன்சிவனிருகழலிணைபாடும் — பெரி
பரமசிவனைக்கொண்டாடிக்கொண்டிருப்பார்
பணிந்தவர்நினைந்திடும்வரங்களைக்கொடுப்பார்
திருநீலகண்டர்தமதருட்கொள்ளையடிப்பார்
சின்மயமாகிநின்றுண்மையிங்குரைப்பார் — பெரி

இராகம் சுருட்டி தாளம் சாப்பு.

பல்லவி

பத்திகொண்டாற்போதும் முத்தியுண்டாமிந்தப
பாரிற்பிறந்தவர்க்கே

அநுபல்லவி

நித்யநிராமயநீலகண்டசிவ
சத்தசுபாவசுகானந்தவைபவ — பத்தி

சரணங்கள்

தரிசித்தும்பூமலர்வருஷித்தும்பணிசெய்தும்
செபித்துங்கைகுவித்தும்வாய்துதித்தும் தியானித்துமன்பாய்
பரிசுத்தமானபதம்பணிந்துங்கவிந்துங்கதை
படித்துந்தொடுத்துங்காதுகொடுத்துமடுத்துமன்பு
பெருகியல்லாலறுமோவினைபந்தம் ஸம்ஸாரமான
பெரியகடல்கரையேறமறுசொந்தம் இதுவேயல்லால்
கருமம்பலபலசெய்கினுஞ்சிவ
கதியடைந்திடலருதுவெகுதொலை பரமாயெவருக்கும்
பொதுவாகியநிலைபரமசிவனன்றிவேறிலை — பத்தி

இராகம் புன்னாகவராளி. தாளம் சாய்ப்பு.

பல்லவி.

ஏகாந்தநிஷ்டையில் நீயும்நானுங்கூடி
யிரண்டற்றிருப்போம்வாடி

அநுபல்லவி

மோகாந்தகாரத்தில் மூளைக்கும் பேய்களைநீக்கி
தேகாந்தரத்துளாடும்சிவனைநம்முறவாக்கி — ஏகாந்த

சரணங்கள்

தேசங்களெல்லாம்போய்த்தேடியலைந்தோமே
தெருவுக்குத்தெருச்சென்று பாடியிரந்தோமே
பாசமறுப்போரைப்பார்த்துநாங்காணோமே
பாழுக்குழைக்கும்வீண்கூத்தாடியானோமே. — ஏகா
தேடினகன்மங்கள்மதித்துப்பேயாட்டுதே
தெரிந்தவர்மங்களும் சதித்துண்மையோட்டுதே
ஆடினயின்பமுமதிதாபமுட்டுதே
அரசாளுங்கனமுஞ்சொற்பனமாகக்காட்டுதே — ஏகா
பூதங்களாடும்புலக்குடியுறவாடி
புறம்போந்தலைந்துமறவினைக்கைகூடி
நாதங்கடந்தபேரின்பசுகம்வாடி
நாயாய்த்திரிந்தென்னபேறுபெற்றாயடி — ஏகா



பாலையுண்டுநாலாகும் வீடுகுடிபுகுந்து
பரமானந்தமேலாகும்படி கலவிபுரிந்து
நீலகண்டகுருவின்பாதம் மனநினைந்து
நிரதிசயமாஞ்சுகம்மருவியகப்புணர்ந்து — ஏகா

இராகம் தநாசி. தாளம் ஆதி.

பல்லவி

உன்னிப்பாரடி தன்னை
யுணர்ந்துபாரடி யுன்னை

அநுபல்லவி

மன்னியிரண்டுமொன்றாய்
மருவியிருப்போம் நன்றாய்

சரணங்கள்

நன்னிலங்கண்டுநம்மை நாமுணர்ந்திடுந்தன்மை
இன்னிலமாகுஞ்செம்மை யிதுவேவேதாந்தவுண்மை — உன்னி
இங்குநாங்கண்டதெல்லாமிந்திரஜாலமடி
மங்கியுழல்வதெல்லாமறந்ததோர்சிலமடி — உன்னி
உடல்வாழின்பமீதெல்லாமுறக்கத்திற்கனவடி
திடமாய்விழித்தாலந்தச்செய்கை தெரியுமடி — உன்னி
நமைத்தொடர்பந்தமெல்லாநாங்கட்டிக்கொண்டதடி
தமைவிடாதென்பதுந்தூண்தனைக்கட்டல்போலாமடி — உன்னி
அகண்டங்கண்டமாய்க் காண்பதவித்தைவசமாயடி
அகம்மறந்தொருவனையறியான்போலானதடி — உன்னி
திருநீலகண்டர்சொந்தத்திருவருளாற்சிறந்து
பொருளுணர்ந்தார்மொழிந்தபுதுமைகண்டுதெளிந்து — உன்னி

இராகம் மோகனம். தாளம் சாய்ப்பு.

பல்லவி

ஆரானாலென்ன அன்புள்ளபேர்களே
சீரானபந்துக்களே

அநுபல்லவி

ஊராரானாலுமுடையாரானாலும்
நீரும்பாலும்போலேநிறைந்துகொண்டால் மனமே — ஆரா

சரணங்கள்

ஊருக்குச்சேராதபேரானாலென்ன
உலகத்துக்கொவ்வாத பேரானாலென்ன
ஆருக்குமிணங்காத பேரானாலென்ன
ஆணானாலென்ன பெண்ணானாலென்ன ஆரானா

கல்வியில்லாதவரானாலுமென்ன
காமவெறியர்கள் ஆனாலுமென்ன
செல்வங்குறைந்தவரானாலுமென்ன
சிறியோரானாலென்ன பெரியோரானாலென்ன ஆரானா

சாதியில்த் தாழ்ந்தவரானாலுமென்ன
சாஸ்திரமுறையில்லாரானாலுமென்ன
நீதியிழந்தவரானாலுமென்ன
நீலகண்டன்பாதமாசைகொண்டாற்பின்னே ஆரானா

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி

எத்தனைதான்சொன்னாலும் புத்தியில்லாமூடருக்கு
ஈனகுணம்போகாது ஞானதனம்வாராது

அநுபல்லவி

முத்தமிழையுங்கொண்டாடி
முன்னேநின்றுபாடிப்பாடி எத்த

சரணங்கள்

மாமறைசாத்திரமெடுத்து
வகைவகையாய்க்கொடுத்துச்
சாமதானாதியடுத்துச்
சதுருபாயங்தொடுத்து எத்த

தத்துவப்பொருளைநாட்டிச்
சாந்தகுணமணியாட்டிப்
பத்தியென்றபாலையூட்டிப்
பகலிரவுஞ்சீராட்டி எத்த

நாலுபடிகளையுற்று
நன்மையாகச்சோம்பலற்று
நீலகண்டன்பாதம்பற்றும்
நேர்வழியைக்கற்றுக்கற்று எத்த



இராகம் முகாரி தாளம் சாய்ப்பு.

பல்லவி

ஆங்காரவெறியருக் கருமைஞானஞ்சொல்லி
ஏன்காணுமேங்குகிறீர் ஐயய்யோநீ ரேங்காணுமேங்குகிறீர்

அநுபல்லவி

பூங்காவனத்தின் புதுமதுவுண்ணக்கான்
வேங்கையைச்சென்று விரும்பியழைத்தாற்போல் ஆங்கார

சரணங்கள்

நச்சுமரத்தினை நன்மரமாக்கிட
இச்சிப்பதென்னகொதி நல்ல
பிச்சிமலர்மாலை பேய்க் கபிக்குப்பூட்டித்
துச்சப்படுந்துன்மதி அதுபோலும் ஆங்கார

வெட்டருப்பாரிலே வித்துவிளைந்திடத்
தொட்டதொழிலெனவு மொட்டைச்
சட்டியிற்பாலைச் சரித்துத்தரையிலே
விட்டவிதமெனவும் வீணாகவே ஆங்கார

கள்ளிக்குநீர்விட்டாற் கற்பகமாகுமோ
கொள்ளைச்சமத்துக்கொண்டு நாறு
முள்ளியின்வாடையொழித்தாலொழியுமோ
கள்ளக்கருத்தையுண்டு அறிவற்ற ஆங்கார

திருநீலகண்டனைச் சிந்தையில்நாடிக்
கருதாக்களைமூடி மோக
விருளானகாட்டுக்கு விகவாழ்க்கையைப்பாடிக்
குருடானகுணந்தேடி புள்வெளியில்லா ஆங்கார

இராகம் சகனா தாளம் சாய்ப்பு.

பல்லவி.

கேள்வியில்லாச்செவிடர்க் கோதும்மெய்ஞ்ஞானமம்மா
கேட்கலையவரென்ற கேதமேன்கம்மா

அநுபல்லவி.

பாழ்மருபூமியிற் பயிரிட்டுப்பாடுபட்டும்
பலிக்காதகேதென்று பரிதாபப்படுமாபோல் கேள்

சரணங்கள்.

இரவும்பகலுமொன்று யிருள்மயமாகத்தோனு
மிருகண்குருடர்கள்க்கிங் கிரவியாலென்னகாணுங்
கருமலைகரையுமோகனமழைசொரிந்தாலும்
கழுதைகுதிரையாமோகடிவாளமணிந்தாலும் கேள்

ஆலங்கொள்கடல்நீரை யரித்ததாலுவர்போமோ
அளந்துகுத்தினுற்சாவி யதிலரிசியுண்டாமோ
கோலங்கள்பூட்டினாலும் குரங்குமனிடனாமோ
கோட்டியடங்கிடுமோ குற் என்பதுமாறுமோ கேள்

மண்ணிலுவரைப்போலும் மரத்தினித்திலைப்போலும்
வளரும் நெற்பயிரின்கீழ் வந்தோங்குங்களைபோலுங்
கண்ணில்மனிதர்போலுங் காணுமவர்க்குள்மேலுங்
கரையுமோ நீலகண்டன் கருணைக்குக்கரைத்தாலும் கேள்

இராகம் பரசு தாளம் சாய்ப்பு.

பல்லவி

ஸேவிக்கவேணும் பெருந்திருக்
கோவிலப்பனையே

அனுபல்லவி

ஸேவிக்கவேபெருஞ்சித்திமுத்திதருந்
தேவாதிதேவாவென்றுநாவாலஞ்செழுந்துண்டு ஸேவி

சரணங்கள்

ஆர்த்திராசனசிவ தீர்த்தத்தின்முழுகித்தா
பாக்கினியுடனேபா பாக்கினியுந்தணித்து
மூர்த்திமூவர்க்கும்முதல் மூர்த்தியாகியமுக்கண்
மூர்த்தியைமனம்நாடிக் கீர்த்தனைசெய்துபாடி
மோகவிருள்விண் டாகமகிழ்கொண்டு
மூலன்மருவுஞ்சிவாலயஞ்சென்று ஸேவி
தங்கக்கொடிமரமுந்துங்கமண்டபங்களுஞ்
சாலைப்ராகாரமன்ன சாலைகளும்மணி
ரங்கங்களும்மண்டபமெங்கும் பொன்கும்பங்களும்
ரஞ்சிதமணிஜால ஸஞ்சிதங்களுங்கண்டு
நெஞ்சிலன்புகொண்டு வஞ்சகமகன்று
நிலைத்தமனமாக்கிச் சிரத்திற்கரந்தூக்கி ஸேவி



சோதிப்பரவையுமொரு பாதிச்சந்திரக்கலையும்
துலங்குந்திருவிழியு மிலங்குங்காதிற்குழையும்
மாதிணங்கும்பொன்மேனி மீதிசைந்தமாமணி
மாலையணியுங்கைக ளாலும்விளங்கத்திரு
மனமகிழ்ந்துநின்று வினைபலவும்வென்று
மருவும்நீலகண்ட னருள்வடிவைக்கண்டு ஸேவிக்க

இராகம் ஆனந்தபைரவி தாளம் சாய்ப்பு.

பல்லவி

தரிசிக்கப்பெறுங்கண்காண் கண்ணே பெரும்
திருக்கோவிலீசனைக்காணுக்கண்புண்ணே தரி

அனுபல்லவி

கரிசற்பிணியகற்றிக்கருணை மழைசொரிந்து
காக்குந்தாய்க்கினியசங்கரனைப்பணிபுரிந்து தரி

சரணம்

அரிசிக்கும்மற்றவைக்கு மகிலைபார்க்கவேண்டாம்
அறிஞர்போலாடிப்பாடியிருக்கலாம்பசிதீண்டா
தருசிக்கும்படிக்கன்னமுண்ணலாம் வினைவேண்டா
தோர்கவலையுமில்லையுத்தமனன்புகொண்டால்
அரசருக்குமமரருக்கும்பெரியானை
அயன்மால்தேடியடிமுடியுந்தெரியானை
துரிசறமொழியுஞ்சோதியாயவனை
சுந்தரமைமணிகந்தரசிவனை தரி

இராகம் கமாசு தாளம் ஆதி.

பல்லவி

ஒருநாளொருபொழுதாகிலுஞ் சிவனை
யுச்சரிக்கவேணுமிச்சன்மக்கடத்தேற

அனுபல்லவி

வெறுநாளாக்கிப்பின்நரகாதித்துயர்
வேலைக்குண்மூழ்கிவீண்காலங்கழிக்காமல் ஒருநாள்

சரணங்கள்

பெண்டுபிள்ளைவீடுகன்றுமாடுதனம்
பெருமையாதிபெருவெள்ளம் அவை
கண்டுசிந்தைமகிழ்கொண்டு சென்றுசாடிக்

கடல்மூழ்காதேபெரும்பள்ளந் தனிற்
கொண்டமிழ்த்திவிடுமே கரை
கொள்ளவெகுவருத்தமே முனிவர்
தொண்டுசெய்சிவபதமே நினைத்தாற்
றேணியாகிவருமே யதனால் ஒருநாள்
காற்றையடைத்தபெருஞ்சோற்றுப்பாண்டமொன்பது
கண்ணவாசலாகிய தேகம் மாய
சூத்திரங்கிருமிகள்பாத்திரம்நோய்வினை
தொடர்ந்திடுஞ்சடமதில் மோகம்
ஏற்றுத்திரிந்தால் மோசம் வருமே
எவ்விதத்தாலுங்கிலேசம் பின்சதி
பார்த்திடுங்காலபாசம் பூண்டு
பவிக்கும் நரகவாசம் அதனால் ஒருநாள்
காலனைவதைசெய்தகாலனுமங்கெளந்தக்
காலமுந்திப்பார்க்கு ஒருக்
காலும்பாபம்வாராமல்காளுஞ்சுகிருதமீந்து
கன்மவினைகள்போக்கும்
பாலனைஞ்செய்தாற்றிப் பொல்லாப்
பவக்கடல்கரையேற்றி யருகில்
நீலகண்டனைத் தோற்றி யானந்த
நிதிபெறவருள்மூர்த்தி யதனால் ஒருநாள்

இராகம் பியாகு தாளம் சாப்பு.

பல்லவி

பணிந்தார்பிறவிநோய்தணிந்தேபோம்பின்னே
பரமசுகமாஞ்சொன்னேன்

அநுபல்லவி

அனந்தாதிதன்பரமானந்தமூர்த்தி
ஆலமுண்ட திருநீலகண்டனையேத்திப் பணிந்தார்

சரணம்.

பரிபூர்ணகிருபையாலே காலனைப்பண்டு
பாலனுக்காய்வென்றகோலமுட்கொண்டு
அருவினையகன்றோடவரன்நாமமுண்டு
ஆனந்தநடமிடும்பாதத்தைக்கண்டு பணிந்தார்



ஓராயிரம்பங்கஜபுஷ்பங்களாலு
முளபத்திபுடன்பூசைபண்ணுந்திருமாலுக்
கொருநாளொருபுஷ்பங்குறைந்தந்தவேளை
ஒருகண்ணுரித்தர்ச்சித்தவுமைநாதன்றனைப் பணிந்
இந்திராதிமுனியாவரும்நாடும்பொருளை
யேமகிரிவணங்கிப்புகழ்ந்தகடவுளைத்
தந்திரமாய்வாலுக்காமொகாரிதலை
தாழ்த்திடவேவிண்ணிற்றூக்கியபதநிலை பணிந்தார்

இராகம் காம்போதி தாளம் ரூபகம்.

பல்லவி

பரமதயாகரனைப் பரனைப்
பணிவாய்மனமேதினமும்

அநுபல்லவி

அருமறைகள்விருதறையுமருமுதல்ப்பெருவருளை
அந்தகனைவென்றவனைச்சிந்தைசெய்துஸந்ததமும் பரம

சரணங்கள்

குளிர்நதியுமிளமதியுங்கொன்றைமலருஞ்சூடுங்
குமரன்றந்தையையன்பர்தமதுறவாயருளமுதை
நளினமலரயனரியுமளவரிதாமடிமுடிசேர்
நாயகனைத்தூயதேனைநம்பியுளத்தன்புருகிப் பரம

வரமபயந்தருகரனைமழுவொடுமானுந்தரனை
வன்னமுலைப்பெண்ணுமையாள்கண்மணியைக்கனகமயக்
கிரிதனைக்கைக்கொண்டவனைப்புரமெரியக்கண்டவனைக்
கெதமறப்போதமுறக்கதிபெறநன்மதியுடனே பரம

சுரர்புகழும்பரமுறவைச்சுருதிசொலுஞ்சிவவடிவைச்
சுந்தரதூதனையாரும்வந்தனைசெய்தருள்சாரு
மரனைசிதம்பரனையனங்கனையெரிசெய்தவனைநினைந்
தஞ்செழுத்தைநெஞ்சிருத்தியாலமுண்டநீலகண்ட பரம

இராகம் பைரவி. தாளம் ஆதி

பல்லவி.

ஆருவருவார்கூட ஆருவருவார் மனமே
ஆருவருவார்

அனுபல்லவி

பாருலகாண்டாலும்போகச் சிறுநின்றாலுந்தேகப்
பாவையாட்டநிற்கும்போது பாவபுண்யமேயலாது   ஆரு

சரணங்கள்

கனமிருந்தாலென்னவேண்ட தனமிருந்தாலென்னவந்து
காலதூதர்கண்டழைக்கும் வேளையிலுனைத்தொடர்ந்தே   ஆரு
பெண்டுமக்கள்பந்துகூட்டமண்டியுனைக்கொண்டாடுவார்
பிராணன்வெளிபோனாற்பிரேதமானானேயோபோனானேயோவென்பார்   ஆ
வாதபித்தங்கபங்கோபித்தாதிபுழுள்ளுக்குத்தாவி
வசங்கெட்டுப்புலனழிந்துஉயிர்விடும்போதுன்னைமேவி   ஆரு
சந்தையிற்கூட்டமும்விற்கவந்தவரையும்போற்பொல்லா
ஜகத்துறவும்வாழ்வும்அல்லாதகத்துறவுக்காமோசொல்லாய்   ஆரு
காலனையுதைக்கவல்லோன்நீலகண்டனடியிணை
கருத்தில்வைப்பவர்க்கன்றிப்பெருத்தவுலகிற்றுணை   ஆரு

இராகம் பரசு தாளம் ஆதி.

பல்லவி

உலகத்துக்காகக்கொண்டக்கவடவேஷங்களெல்லா
முள்ளத்துக்குதவாதே பழக்கமான கள்ளக்கருத்தறாதே

அனுபல்லவி

கலவைப்பொடிகள்மேலேநலமாய்ப்பூசினதாலே
காயத்தினாற்றம்போமோசாயப்பிரட்டுபோலே   உலக

சரணங்கள்

பத்தர்போற்கோலம்பூட்டிபத்தியிராதுமோட்டிப்
பாத்திரந்தோளில்மாட்டிருத்திரங்கையிலாட்டி
உத்தமர்கவிபாடிச்சுத்தர்போல்நடமாடி
பூணுடம்பைச்சிராடிச்சரண்வயிற்றைக்கொண்டாடி   உலக
புண்யவானென்றுமெய்த்துளெண்ணியுதடசைத்துப்
பொய்யையுள்ளிலொளித்துச்செய்யுந்தொழில்தரித்துக்
கண்ணைமூடிவிழித்துத்தண்ணீர்வரவழைத்துக்
காமனையுநினைத்துநேமம்பிறர்க்குரைத்து   உலக
வேதமந்திரங்கூறிப்போதப்வேறொன்றிற்றேறி
வீணாய்மண்ணிலேமுட்டிக்காணிகட்டாகக்கட்டி
ஆதவன்நமஸ்காரம்ஆயிசுக்கிதுஸாரம்
ஆமென்றுபிறர்க்கேத்தித்தாம்வெள்ளிக்காசைவாழ்த்தி   உலக



சங்கராசிவாசம்போநின்கதியெனவன்பு
சாதித்துநீலகண்டர்பாதத்தருமைத்தொண்டர்
தங்கள்சொல்லினிலக்கிபங்கபரைமயக்கிச்
சகம்பிரட்டும்பிரட்டும்புகன்றுபணந்திரட்டும்   உலக

இராகம் முகாரி தாளம் ஏகம்.

பல்லவி

என்னவிதம்பிழைப்போமெளியோரே   நாம்
எப்படித்தேறுவோம்சொல்வீரே

அனுபல்லவி

அன்னையுந்தந்தையுமவர்பெற்றவரும்மதித்
தன்னிபோன்னியஞ்சேராதவன்னியாயகாலமிதில்   என்ன

சரணங்கள்

வேலிபயிரைக்காத்தநாட்போய்   பின்பு
வேலிபயிரைத்தின்னுநாளாய்   இப்போ
வேலிபூமியைத்தின்னலாச்சே   யினி
மேலெப்படியாமோகாலம்பிசகிப்போச்சே   என்ன

காலமழைகளில்லாதாச்சே   யது
காலந்தவறிப்பெயலாச்சே   பஞ்ச
காலமெப்போதுநில்லையாச்சே   பொல்லாக்
காலமென்றுசத்தியப்பாலமிடியலாச்சே   என்ன

செட்டெவர்க்கும்மெய்புறவாச்சே   தான
சீலமுந்தன்மமுமேலோலமாச்சே
எட்டிநல்லெருமிச்சியாச்சே   இப்போ
ஏழைக்குப்பெரியோர்களிரங்காதகாலமாச்சே   என்ன

கன்மங்கள்வன்மமதாச்சே   பொய்யுங்
களவுஞ்சதிவுங்கற்றோர்வழியவராச்சே
துன்மதியுதித்துயர்ந்தாச்சே   பாவ
தோஷத்துக்கஞ்சாதாகோஷநிரம்பலாச்சே   என்ன

வேதக்கொடிகள்படலாச்சே   யந்த
வேதியர்நடைகளனீதமுமாச்சே
சாதியெலாமொன்றாகலாச்சே   யிந்தச்
சாண்கும்பியின்பொருட்டால்நாந்துன்பப்படலாச்சே   என்ன

முன்னோர்செய்திருத்திபவழிக    ளெல்லாம
    முழுகுதர்க்கங்களினலழிந்திடலாச்சே
நன்னூல்புராணமுதலானதிப்போ
    நம்புதற்கிடமில்லாவம்பென்றுரைக்கலாச்சே    என்ன
கனமாயிருந்தசாஸ்திரமெல்லா    மிப்போ
    கடிதாசில்க்காட்டியெங்கும்பறத்திடலாச்சே
தனமில்லார்பிணமாகுமென்பார்    சொல்லும்
    தாராளமாயெங்கும்பூராயமாகலாச்சே    என்ன
நேர்வழிநடந்துபோவாரைப்    பாவ
    நேசர்கள்பரிகாசம்பேசிடலாச்சே
ஓர்மைமுழுதுமில்லாமொண்டி    யிப்போ
    ஒற்றவிரலில்லாரைகுற்றம்பேசவுமாச்சே    என்ன
கருத்திலொன்றைநினைந்துதேடும்    போது
    காணுவதெல்லாமதுவாகவேதேடும்
பாக்குத்தியோர்போகியாடு    மந்த
    வகைபோலுங்கருதிப்பொய்மிகுந்தறிவில்லாரோடும்    என்ன
இனியபலங்கள்தந்தநருக்கள்    எல்லா
    மிலைகூடவன்றிநின்றுசலிக்கக்கண்டோமே
கனிகள்மாநார்மூலைகளென்று    தேடிக்
    காகங்கள்போலேபறந்துஜனங்கொறிக்கக்கண்டோமே    என்ன
பாம்புக்குப்பால்பழமூட்டி    யதைப்
    படுக்கைமெத்தைமீதில்வைத்தடுத்துறவாட்டி
சோம்புக்குச்சகமெத்தக்காட்டிக்    காமத்
    தூக்கப்பேய்கொண்டதுன்மார்க்கருறவைபோட்டி    என்ன
காலத்தைக்குறியாமல்ப்பார்மே    லித்தக்
    கவலைப்படுவதென்னதாமே
ஆலத்தையுண்டநீலகண்ட    னருள்க்
    காகாமற்பேய்கொண்டமாயவுலகைக்கண்டால்    என்ன

இராகம் முகாரி தாளம் சாயப்பு.

பல்லவி

ஆகாதாகாதே இதெல்லா மாகாதாகாதே

அநுபல்லவி

தாகத்துக்குதவாதத்தண்ணீர்க்குளந்தேடித்
தேகந்தளரவோடிச்சிந்தைவாடியுழைப்ப    தாகா



சரணங்கள்

ஏறுதமேட்டுக்கிறைக்கின்றதண்ணீர்போல்
சோரதமூடருக்குச்சிவஞானம்போதித்திடல்    ஆகா

சாணக்கிடங்குக்குச்சவ்வாதுபூசினைப்போல்
வீணக்கசடர்க்குவேதாந்தமுரைத்திடல்    ஆகா

சுடுகாட்டுப்பனைத்தேன்போல்தொல்லுலகினுளுந்தர்
துடுமாறிப்பெற்றதனம்ஸாதுக்கள்க்குபகாரம்    ஆகா
வெட்டுங்கிடாவைப்போலவிரண்டுதிரியும்பொல்லா
துட்டர்கள்தமைநல்லசுகிர்த்துக்களாகவெண்ணல்    ஆகா
மணத்தையுங்குணத்தையும்மனத்தையுங்கெடுத்திடும்
குணத்துவமில்லாநதோர்கொடியவர்க்குரைத்திடல்    ஆகா
வேதத்தையுங்கடந்தமெய்ஞானசெல்வந்தேடி
போதித்தபெரியோர்முன்பொய்யைப்பொரிச்சுக்கொட்டல்    ஆகா
ஜன்மஸபலயாகத்திங்குகள்யாவும்போக
நன்மைபெருகச்சொல்லும்நல்லோர்மொழியைத்தாண்டல்    ஆகா
கன்மஷத்தையேயுண்டுகளித்திடுமட்டையேபோல்
துன்மதத்தாரைக்கூடிதுற்குணம்பெருத்திடல்    ஆகா
மின்மினியொளிகண்டுவிளக்கையிழப்போர்போல்
உன்மதங்கொண்டுநல்லவுற்றபேரைவெறுக்கல்    ஆகா
கனத்தகள்ளியைநம்பிக்கரும்பசுவிழப்போர்போல்
தனப்பெருமையைக்கொண்டுசாதுக்களைவெறுக்கல்    ஆகா
வழக்குண்மைதெரிந்தபின்வழக்கழிவுசெய்வோர்போல்
உழக்குக்குள்ளேநாழியையுநட்டியேற்றிடவெண்ணல்    ஆகா
கல்லிலேநாருரிக்குங்காலனோலைவந்தால்
கல்லறைக்குள்ளொளித்துக்கொள்ளலாமென்றுவெண்ணல்    ஆகா
கிடைத்தபொருளை இகதிக்கும் பரதிக்கும்
கொடுத்துப்பலம்பெறாமல்க்குழியில்ப்புதைத்துவைக்கல்    ஆகா
அகமும்பிறமுமாகவனைத்துயிர்க்குயிராக
ஜகநிறைந்திடும் சர்வசாக்ஷியை மறந்திடல்    ஆகா
கள்ளபின்கஞ்சாவுண்டு கனமதிகெட்டோர்போலக்
கள்ளவாசனைகொண்டு காலம்வீணைச்செய்யல்    ஆகா
சிங்குழல்நாதங்கேட்டுத் தியங்கிவலையில்வீழும்
மான்கள்போலாசைகொண்டுமாயாந்தகூபம்மூழ்கல்    ஆகா

கண்ணாடிக்குள்ளேரூபங் காணும்போல்ஜீவனுண்மை
எண்ணாமல் நெஞ்சிலீரமில்லாமல் மோசம்போகல் ஆகா
ஆலமதையுமுண்டு அடியாரையாண்டருளும்
நீலகண்டத்தோன்பாதம் நித்திரையிலும்மறக்கல் ஆகா

இராகம் தனுசி தாளம் ஆதி.

பல்லவி

நம்பாதே நம்பாதே சற்றும்
நன்மையில்லாமாயமாதரை மனமே

அனுபல்லவி

வம்பராசைவைக்காதே யவர்கள்
வலையுக்குள்கப்பட்டுக்கவலைப்படாதே நம்பா

சரணங்கள்

கண்காட்டிமுகங்காட்டிக் கொங்கை
காணக்கைதூக்கிநின்றாசையையூட்டி
தன்காலடியின்கீழ்மாட்டி யென்
சாணானவுடம்பையும் வாணாளும் வாட்டிடுவார் நம்பா
காரியங்கொள்ளக்கவடுரைப்பார் நயங்
காட்டிமயில்போல்க்கொஞ்சிக்கைமுதல்பறிப்பார்
பாரீராவென்று விவகரிப்பார் கையிற்
பணமில்லையானால்வெளிதள்ளிக்கதவடைப்பார் நம்பா
குணமாயிருந்துகாதறுக்குந் திட்டக்
குரங்குபோற புருஷர்கள் மானத்தையழிக்கும்
பணம்பெரிசென்று நம்பித்துதிக்கும் புண்ய
பாவங்களுக்கஞ்சாதுமாதராசைசதிக்கும் நம்பா
கணவனென்று மானத்தைக்கணியார் ஞானக்
கருணைசெய்தெய்வத்தைக் கனவிலும் நினையார்
துணிபணிகொடுப்பாரைப் பணிவார் பணந்
தனைகூட்டிச்சொன்னால்செத்தசவத்தையுமணைவார் நம்பா
இதமறிந்தபேணியாளார் நம
திங்கிதமறியார்சொன்னதையுங்கேளார்
மதம்பிடித்துச்சிரித்துள்ளுவார் தின்ன
வாய்க்கரிசிவாங்கிப்பின்னுமெதிருமியள்ளுவார் நம்பா



காசிருந்தாற்கனமாயழைப்பார் வெறுங்
கைப்பரானாற்சுடுமொழிசொல்லிப்பழிப்பார்
பாசமில்லாமற்கட்டியாட்டுவார் பஞ்சப்
பாட்டுகள்பாடியாடிப்பெருங்குடியோட்டுவார் நம்பா
கொடுத்ததெல்லாம்போராது முன்னங்
கொடுத்துக்கொண்டதுக்கொன்றுநன்றியிராது
பிடித்தபிடிசாதிப்பார்வாது மெத்தப்
பேசிமோசம்செய்வாரவராசைபொல்லாது நம்பா
தேவாதிதேவனைத்தேடு எங்கள்
திருநீலகண்டபரங்குருவைக்கொண்டாடு
நாவாற்சிவநாமத்தைப்பாடு கொடும்
நஞ்சாகும்மாதரோடும்கொஞ்சாதேயதுகேடு நம்பா

இராகம் கல்யாணி தாளம் ரூபகசாய்ப்பு.

பல்லவி

ஆகுமாகுமெவர்க்குமீது ஆகுமாகுமே

அனுபல்லவி

தாகமுடனேயேகமனதாய்
சதாசிவபக்தியதுசெய்தால்முக்தி ஆகு

சரணங்கள்

கள்ளமொழிக்கவுமுள்ளந்தெளிக்கவுங்
சாபத்தைமெய்யென்றமாயந்தொலைக்கவும்
தெள்ளுந்திபூசிவெள்ளிமலைவாழும்
தேவாதிதேவனைச்சேவித்திடநாளும் ஆகு
வாணாளைவாட்டிபொய்யானபணங்கொண்டு
வைத்ததொன்றுமாபத்துக்குதவாதென்று
கோணாமற்றன்மமுந்தானமுஞ்செய்துள்ளக்
கோதகற்றிச்சிவபோதமதுகொள்ளல் ஆகு
பாலப்பருவநீராலேயுபகாரம்
பாலித்துடர்ந்தோர் காளிகேரச்சாரம்
போலுப்பசுத்தரும்பாலெனவுஞ்ஞான
போதரைப் பூசிப்பதுத்தமமேயான ஆகு

சந்திரனைமறைக்குஞ்சிறுநீர்மேகஞ்
சாந்தமெய்ஞ்ஞானதீபந்தடுக்கும்யோக
பந்தத்தைநீக்கிச்சுகானந்தந்தர்திடப்
பாதிமதிவேணியானைப்பணிந்திடல் ஆகு
ஆலக்கடலின்மேல் பூமேவகமேழுக்
காடிபாய்ந்தாலதுகூடித்தெளிந்தெழும்
பாலுக்குத்தண்ணீரைப்போலேசேருந்தன்மை
பத்திகொண்டாற் செய்யுமெத்தொழிலுநன்மை ஆகு
கரிசாப்பலாகந்தருங்கானகாக்கினி
கரிசாப்பலின்றியெரிக்குஞ்ஞானக்கினி
பெரிதுவேயென்று பெரியோரைப்புகழ்ந்திடப்
பெருத்தமெய்வழிதேடிப் பரத்துக்குழைத்திட ஆகு
மங்கயரைச்சேர்ந்திணங்கிச்சுகப்போனு
மன்மதநாடகக்கும்மிபடித்தாலும்
சங்கடவேளையுமிங்கெந்தவேளையுஞ்
சாக்ஷியானசிவசாக்ஷியைத் தேடவும் ஆகு
சாதியுயர்ந்தோர் வேதியராலும்
சாதியிற்றாழ்ந்தவராதிகளாலும்
ஆதிபராபரஞ்சோதியைப்போற்றவும்;
அன்புசெய்துமனத்துன்பங்கள் மாற்றவும் ஆகு
காலம்போவதாயுட் காலமகன்றிடல்
காலனதர்க்குத்தபாலெனவோடிடல்
காலன்வரும்முன்னே சூலம்விழும்முன்னே
கண்டிரங்குநீலகண்டனைச்சேர்சொன்னேன் ஆகு

இராகம் தருபார். தாளம் ஆதி.

பல்லவி.

சிவன்வருவார் துணை யவர்தருவார் கதி
தேறிக்கோ நீ மனமே

அனுபல்லவி

எவருமிவர்போல்த் தஞ்சமவனியிலில்லை நெஞ்சம்
ஏங்காதேமயங்காதே தூங்காதேதியங்காதே சிவன்



சரணங்கள்

அஞ்சக்கரத்தைநிதம்நெஞ்சத்திருத்திச்சிவா
காரநினைவுடனோங்காரங்கூட்டிச்செபித்து
பஞ்சமகன்றுபிரபஞ்சத்தில்மாதர்சேரா
வான்கருத்தேபோலிகபரநிறுத்திப் பொருத்து சிவன்
ஆறுமதங்கடோறும் வேறுவேறாகித்தோன்று
மந்தரகசியத்தைச் சிந்தையிலொன்றாய்க்கண்டார்
தேறும்படிக்குஞானங்கூறுங்கருணாகர
தக்ஷிணாமூர்த்திபாதப்பக்ஷமாய்வேண்டிக்கொண்டால் சிவன்
காலன்கருத்தழியமேலேயுதைத்தபாதன்
கண்டவர்விண்டிடாதகண்டஸச்சின்மயன்றான்
மாலுமயனுங்காணாமூலன்ஸ்ரீநீலகண்டன்
வைபவங்களைச்சிந்தைசெய்துபத்திபுரிந்தால் சிவன்

இராகம் கமாசு தாளம் ஆதி.

பல்லவி

பிரட்டைக்கண்டுபிரமிக்காதே அதில்
பித்துக்கொண்டுசலிக்காதே மனமே

அனுபல்லவி

இருட்டுக்குள்மனதையிழுத்துப்பற்றிஞானத்
திருட்டுச்செய்யும்மோகச்செய்கைமாயமான பிர

சரணங்கள்

கயிற்றுப்பாம்புகண்டு கானநீரிற்சாடும்
சயித்தியங்கொண்டுதலைகிறுங்கிபாடுஞ்சகப் பிர
வயிற்றுப்பேய்க்குவழிவாடுசெய்யவுள்ளப்
பயித்தியங்கொண்டுபலவேஷங்காட்டுங்கள்ள பிர
பொய்மிகுந்தபலபுஸ்தகங்கள்காட்டிச்
செய்தவத்தைவிடச்செய்யும்பேயர்கோட்டிப் பிர
இசைநரம்புதொலியிட்டுப்பூட்டிபெண்ணைப்
பசைநூலாடைபணிபகட்டுக்காட்டும்பெண்ணின் பிர
ஆணவக்கால்வீசியற்பக்கல்விமேகம்
வீண்வாதங்கோஷித்துவினைபொழியும்மோகப் பிர
விலக்கிலோட்டிப்பலவினைகளூட்டிப்பவக்
கலக்கில்விட்டுச்சதிகாட்டியோடுஞ்செல்வ பிர
மூலங்கண்டுணராமூடர்செய்புரட்டும்
நீலகண்டர்பாதநிழல்சேரார்பிரட்டும் பிரட்டை

இராகம் வஸந்தா தாளம் ஆதி

பல்லவி

ஏனிந்தப்படியானு யேழைநெஞ்சமே
எதுக்குச்சலிப்பானாய்

அநுபல்லவி

ஆனந்தநிலைதேடியமர்ந்தநீ வெளிசாடி
வீண்வாதம்பேசிவாடிவிவரமில்லார்போற்பாடி. ஏனிந்த

சரணங்கள்

வருவதுவருந்தானேமனமதாற்லைவானேன்
ஒருவகையும்வினை நீயுண்டுபண்ணிக்கொள்வானேன்
கருணையில்லார்போலேக்கிக்கவலைவிலைக்குவாங்கி
ஒருவரிடம்போய்த்தாங்கியுரைபேசிப்பிறந்தூங்கி ஏனிந்த
ஆரெப்படியிருந்தேனாரெப்படித்திரிந்தேன்
ஆரெப்படியிசைந்தேன் ஆர்சொல்ப்படிமறந்தேன்
ஆரெப்படிப்பூசித்தேன் ஆரெப்படிதூஷித்தேன்
பாரிற்பேதமைகொண்டுபலவிசாரத்தையுண்டு ஏனிந்த
ஈசனடியாரல்லாமலெவருனக்குறவுண்டு
ஈசன்பெருமைபாடுமின்பவாயதுகொண்டு
ஈசனன்பில்லாரிடமென்னபேச்சினிவிண்டு
ஈசனருண்டாமவினங்கரூதவரைக்கண்டு ஏனிந்த
முன்னாள்ப்புண்யவசத்தால்முளைப்பதேசிவபக்தி
தன்னாலறிந்துதானேதழைக்கும்பேரின்பமுக்தி
இன்னுளறியாமலேயேன்வருந்துறுப்கத்தி
அன்னாய்நீலகண்டகற்டிமைநீ ஐயோபுத்தி ஏனிந்த

இராகம் பியாகு தாளம் ஆதி.

பல்லவி

மருந்திருக்குது மருந்திருக்கிது மனமன்புற்றவற்கே

அநுபல்லவி

மருந்துமற்றேது மிதுக்கொப்பாகாது
மனைகொண்டால்போதும்ஜனனம்வராது மருந்

சரணங்கள்

ஆட்டும்பழவினைப்பாசமறுத்திடு மானந்தம்மூழ்காட்டும்
அளவற்றகாலம்பயிரிட்டுப்பட்டுக்கரிந்தவினை யூட்டும்



வாட்டும்பழிபவக்கானத்தைத்தீமூட்டும்
வஞ்சப்பிறவியைவேரறச்செய்தோட்டும் மருந்
அற்பவிஷயவிஷமுண்டறிவற்றஅல்லலெல்லாம்போக்கும்
ஆணவம்மாற்றியறிவைத்துலக்கியுள்ளன்பிலேசேர்க்கும்
சிற்பரஞ்சோதிதழைவித்துக்கண்ணேறுக்கும்
தின்றுதுதின்றுலுந்தகிக்கும்படியாக்கும் மருந்
வாதபித்தகபமுன்னையும்வேரறவாரியெறிந்துவிடும்
மாயமயக்கத்தைப்போக்கியறிவின்மறைவைத்துறந்துவிடும்
போதப்பிறந்தின்பமுறுமவழியிடும்
புண்ணியப்பொருள்காணுங்கண்ணினைத்தந்திடும் மருந்
கொடும்பிறவிநோயறுக்க நால்வேதங் கூட்டிவைத்தமருந்து
கோடிகோடிப்பேர்கள் தின்றனுபவங்கைக்கொண்டதிருமருந்து
திடப்பெறச்செய்துதித்திக்குமருந்து
சித்தியுமுத்தியுந்நல்குநன்மருந்து மருந்
பத்திபுள்ளார்க்குண்ணப்பளிக்குமருந்துபசாவிலையில்லை
பரவெளிதன்னில்முளைத்துச்சிவமாய்த்தழைத்ததனிமருந்து
நித்தியமாகுமழிவில்லாமருந்து
நீலகண்டநாமம்பெற்றமெய்மருந்து மருந்திருக்கிது

இராகம் இந்துஸ்தானிகாப்பி தாளம் ஆதி.

பல்லவி

நன்முத்திருக்குது நன்முத்திருக்குது நல்லவர்பூண்பதற்கே

அநுபல்லவி

ஜன்மச்சிடுக்கறச்சிவன்புகழ்படித்திடும்
திருமறைக்கடல்மூழ்கிக்குருக்கள்கண்டெடுத்திடும் நன்

சரணங்கள்

சிற்போதமெய்யடி யார்கள்புகழ்ந்திடும்
தேவர்முனிவர்கொண் டாடிமகிழ்ந்திடும்
நற்போதவைப்பறைக் குள்ளாய்த்திகழ்ந்திடும்
நான்மறைநூல்புராணங்கள்பகர்ந்திடும் நன்
சப்தப்ராகாரங்கள்க்குள்ளாய்த்தழைந்திடும்
சதுர்வேதசாகரந் தன்னில்விளைந்திடும்
சுத்தசுயம்பிர காசமாயிலங்கிடும்
சுந்தரமெல்லாந் திரண்டுநிலங்கிடும் நன்

மேலாம்மணிக்கெல்லாமேன்மணியாய்வரும்
லெண்டவைவேண்டினல்கிருப்படங்கத்தரும்
காலாந்தகாரங்கரைந்துவெளியறும்
கருமணிகந்தான்கருணைமணியாய்ப்பெறும் நன்

இராகம் கேதாரகவுளை தாளம் சாப்பு.

பல்லவி

சித்தத்தைச் சிவன்பாற்சேர்த்திடுவோம் நித்திய
வஸ்துதரிசனம் பார்த்திடுவோம்

அனுபல்லவி.

அத்தனுமயன் முத்தனென்றுமறைகள்
கத்துவதாலுறுதி வைத்துப்புத்திதெளிந்து சித்த

சரணங்கள்

இத்தனைகாலமிந்தச் சித்தத்தையுலகுக்குத்
தத்தம்செய்திருந்ததாற்பெறறதெதுமறிந்தோம்
மெய்த்தவிருண்மயவித்தையுட்பட்டுழன்று
செத்துப்பிழைத்தோமன்றியெத்தைநாம்பேறுபெற்றோம் சி
மறந்தவுடலமெல்லாமிறந்துகதையாய்ப்பெற்றோ
முறங்கும்போதிலுள்ளம்மறந்துகாணுமையுற்றோம்
சிறந்தவுலகுக்கேய்ந்துபறந்திடப்போகச் செத்தோம்
நிறைந்தபொருளாயுள்ளமுறைந்தநாமேசேவித்தோம் சித்த
என்றுமொழியாச்சிவனன்றிமிஞ்சியதெய்வம்
ஒன்றுங்காணோமுலகிலொன்றில்வேறென்றுதோன்றல்
நின்றதம்பத்திற்பூதங்காணும்பிரமையதை
வென்றுள்ளநீலகண்டன்கருணைசேரச் சித்த

இராகம் கமாசி தாளம் ஆதி.

பல்லவி

தினமும் நீ பணிசெய்குவாய் மனமே
ஜன்மப்பேறத் தினமும்

அனுபல்லவி.

புனலுறைந்த நெல்வேலிமாமதி
ப்பூணும்வேணுவனை சற்பூங்கழல் தினமு



சரணங்கள்

பூத்தகொன்றைபணிந்தசெஞ்சடையும் பொங்கரவமும்
பூண்டவிழிபொருமுன்றுந்தோலுடையும் தேவர்முனிவர்
ஏற்றுஞ்சரணமும்போற்றுமடியவர்க்
கிரங்குங்கருணைமெய்யுருவமுங்கண்டு தினமும்
தாருகாவனமாதர்மனத்தையெல்லாம் கொள்ளைகொண்டநத்
தாபசாருளமேமிகுந்தபொலா மதமகலப்
பாரிடம்பலிகொள்ளவந்தபொற்பாதனைக்கங்காளநாதனைத் தினமும்
ஆலமேயுண்டகிலமாண்டவனை அன்பர்கோமானை
ஆதிமாலயன்றேடநின்றவனை பூஞ்சோலைசூழும்
சாலிவாடியமர்ந்தகீர்த்திவி
சாலமென்றிரு நீலகண்டனைத் தினமும்

## நடராஜக்கீர்த்தனங்கள்.

இராகம் தருபார் தாளம் சாப்பு.

பல்லவி

பரமானந்தநடனம் கண்டபேர்க்குப்
பார்மேலுண்டோஜனனம்

அனுபல்லவி

கருணாகரசிவபெருமான்கதிநாட்டுங்
கனகப்பாதமீதென்றே கையாற்சுட்டிக்காட்டும் பரமான

சரணங்கள்

சதுரானனன்றாளம் மால்மத்தளம்
சதுராகியமேளம்
சதுமாமறைநாதம் விதிமாதுசங்கீதந்
தரும்நித்தியானந்தமோடுந் திருச்சிற்றம்பலத்தாடும் பரமான
பூதாதிகள் கூட்டம் முனிவர் நாட்டம்
புகழ்ந்துதேவர்கொண்டாட்டம்
வேதாந்தவிஞ்ஞானம் நாதாமுதபானம்
மெத்தப்பெரும்வைபோகஞ் சத்தியுமையோர்பாகம் பரமா
எரிசெங்கனல்முட்டி டமருகாட்டி
இடவலக்கரங்காட்டி
விரிசெஞ்சடையாட வரிதோலுடையாட
வினைத்திரளிருட்போகத் தனக்குத்தானிகராகப் பரமா

முயலகற்பீடமாக்கி யோர்பதந்தாக்கி
முழுதுந்தானண்டந்தூக்கி
ஜயஜயவிஷமுண்ட தயாநிதே நீலகண்டா
சரண்சரணெனுந்தொண்டர்க் கிரங்குங்கருணைகொண்ட பர

இராகம் பூர்விகல்யாணி. தாளம் ரூபகம்.

பல்லவி

ஆனந்தநடமாடுவார்தில்லை யம்பலந்தனி
லடிபணிபவர்க்கபஜயமில்லை.

அனுபல்லவி

தானந்தமில்லாதரூபன் தச்சந்தகசந்தகசனு
தளாங்குதகததிங்கிணதோங் தளாங்குதககததிங்கிணதோங்
தளாங்குதககததிங்கிணதோங் தகதிமிதகததிங்கிணதோமென் றுன

சரணங்கள்.

வஞ்சகமில்லாதவடியார்குதிக்க
வானவர் முனிவரானவர் துதிக்கச்
சஞ்சலவிழிமாதுமையாள்மதிக்கத்
தக்கிட தரிகிட தொங்கிட தித்திமி திமிதக ததிங்கிண
தகதோங்தகதோங்தகதோங்தகதிமிதகததிங்கிணதோமென் றுன

பாக்யமுயலகன்மீதொருகால்தாக்கிப்
பத்தர்தொழுமற்றவொற்றைக்காலுந்தூக்கி
ஆக்கியளிப்போரைமேளகாரராக்கி
அப்பரநாதசிதம்பரசப்புரசதாசிவசுந்தர
வரைபணிசலசலசலவென
வணிபணிகலகலகலவென தக்கிட தரிகிட ஆனந்த

பாதிமதிச்சோதிபளீர்பளீரென்ன
பாதச்சிலம்பொலிகலீர்கலீரென்ன
ஆதிகறையுண்ட நீலகண்டம்மின்ன
அரபுராஹரசிவசங்கரவருள்குருவரபரசங்கர
அண்டமும்பிண்டமுமாடிட
எண்டிசையும்புகழ்பாடிட தக்கிட தரிகிட ஆனந்த



இராகம் இந்துஸ்தானி காப்பி தாளம் சாப்பு

பல்லவி

காணவேணும் ஜன்மமெடுத்தால்
காணவேணும்

அனுபல்லவி

காணவேணுங்கண்டு காட்சிபெறின்பரம்
பேணியளித்திடுமே பேரின்பஞ்சிதம்பரம் காண

சரணங்கள்

சேரன்சோழன்பாண்டியனுந் தீரனிரண்யவன்மாவும்
மேருநிகராயமைத்த விண்ணுயர்கோபுரம்நான்குஞ்
சிருவுல்திருமண்டபங்கள்சூழப்
பாரும்விண்ணும்புகழ்பாடும்பொன்னம்பலங் காணவே

ஆயும்மறைபேசுந்தில்லை யந்தணர்மூவாயிரர்வாழ்
வாயிலகும்வீதிசூழ வமரர்தொழுவன்பர்பாட
மாயன்கொட்டியாட மலரோன்றாளம்போடத்
தூயநடமிடுந்துரியானந்தசபை காண

ஞானவல்லிசிவகாமி நங்கையுஞ்சிவகங்கையு
மூனமில்ராஜசபையு மும்பர்சபையுங்கனக
மானசபைமுதலைந்துசபைகளு
மானந்தரூபமுமருள்மூலஸ்தானமும் காணவே

பாதந்தூக்கிமார்க்கண்டற்காய்ப் பாரிலேமனையுதைத்தும்
வாதவூரார்வாசகத்தில் மனமுவந்துதனையளித்தும்
நீதமறைபாட நீலகண்டனொடும்
போதமுடையார்கள் போற்றுஞ்சிற்றம்பலங் காணவே

இராகம் தோடி தாளம் ஆதி

பல்லவி.

தரிசனமே முக்தி தருந்நிஜமே

அனுபல்லவி

அரி அயன்றொழும்பாத வம்பலந்தருணந்தன்
தரிகிடதிமிதகதளாங்குதோமென
எரிகரமொடுநடமிடுசிவதம்பர தரிசன

சரணங்கள்

பூசித்துமூவாயிர முனிவர்நான்மறைபாட
புகழ்ந்துவானவர்மனஞ் சிறந்தமாமலர்போட

ஆசித்திருமாதவருகினின்றுகொண்டாட
அன்னைசிவகாமிதனருட்டிருவிழிகூட
மாசிற்பிறைசேர்கொன்றை மலர்முடிமேற்றழைக்க
மகிழ்ந்தொருதாள்முதுகில் முயலகனுஞ்சுமக்க
யோசித்தரிமத்தளம் வாசித்தொலிமுழக்க
வுணர்ந்துபிரமன்றாள மிடுந்தொனியுஞ்சிறக்க
உகந்துசிவகணம்ஹரஹரஹரவென
மகிழ்ந்துமுனிவர்கள்சிவசிவசிவவென
வுலகமாடவொருவனுமதிசய
மிலகுமானபொன்னம்பலரகசிய தரிசன
தத்தோந்தத்தோந்தக தரிகிடகிணதகு
தகுணகுஜந்தரி தடிங்குகுடிங்குகு
தித்தோந் தித்தோந்திமி திரிகிடதிகுதகு
செகுணகுணந்தரி ஜந்தரிடி குடிகு
தித்திமிதிமிதக திந்திந்திமிபெண
திமிகிடகிணதக ஜம்ஜம்ஜம்மென
தந்தரிகிடதிமிதகுதகுதகுவென
தளாங்குதிமிதக தரிகிடதோமென
தழைந்தசிலம்பொலி கலகலகலவென
எழுந்தவெரிகனல் தகதகதகவென
டமருகோதைடுடு டுடு வெனமாவிட
மமரும்நீலகண்ட னடிமெகாநடம். தரிசனமே

இராகம் கேதாரகவுளை தாளம் ரூபகம்.

பல்லவி

ஆடுஞ்சிதம்பரேசுவரா ஸததமென்னை யாதரிஸ்ரீபரமீசுவரா

அநுபல்லவி

பாடித்தும்புருநாரதர் துதித்திடப்
பதஞ்சலிவியாக்கிரபாதர் புகழ்த்திடந்
தேடிமுன்றிருமால்காணுச்செம்பொற்பாதந்தூக்கித்
திந்தோந் திந்தோந் திந்தோ
திருகிடதோந் திருகிடதோந் திருகிடதோமென் றாடுஞ்சிதம்

சரணங்கள்

அங்கமிசைநாகந் தொங்கக்காதிற்குழை
யணிந்தானையின்றோலு டுத்தம்பலத்திற



திங்களுங்கங்கையுங்குலுங்கச் செங்கையின்மான்மழுவிலங்கத்
திகழ்காதிற்குழையாடப் புகழ்வேதச்சடையாட ஆடும்
மத்தளகாகளம்டமருகம்டங்கா
வல்லகிதுந்துமிசங்கமுழ்ங்க
சித்தர்கள் சிவயெனமொழிந்திடத் தேவர்கள் பூமலர்பொழிந்திடச்
சலசலெனுஞ்சிலம்பிலங்கக் கலகலெனுங்கழல்விளங்க ஆடும்
மாதவன்மத்தளஞ்சதிவறிந்துகொட்ட
மலர்ப்பரம்மன்மனம் மகிழ்ந்துதாளந்தட்ட
வேதங்கணிகணிரெனவே நாதப்முழங்கமுனிவர்
விருதொலியந்தரமேறப் பெருமுழவந்தறைகிற ஆடும்
வாதுக்காடும்பத்ர காளிமனநாண
மாதுமையாள்பார்வதி கண்களிகாணச்
சோதிசபையில்வளரீசா சுருதிபுகழ்ந்தவுல்லாசா
சூலசண்டகாலதண்ட வாலமுண்டநீலகண்ட ஆடும்

இராகம் தருபார் தாளம் ரூபகம்.

பல்லவி

ராஜனைத்தொழுவாய் நடராஜனைத் தொழுவாய்

அநுபல்லவி

மாசில்மதிக்கொன்றைசூடி மாமறையாயிரம்பாடு
மேமசபையினடமாடும் ராஜனை

சரணங்கள்

வேதனை விண்ணவர் போற்றும் பாதனை
போதனைப்பரிபூர்ணனை ஞானப் பொருளினை
யிருவர் கொண்டாடு மொருவனைத்திருநடமாடும் ராஜனை
மூலனை முப்புரம்சுட்டசிலனை
பாலனுக்கன்றுபாற்கடலீந்த
பரமனையரவணிந்தாடும் வரதனையரி அயன்தேடும் ராஜனை
ஆளனை யாடுங்குஞ்சிதத் தாளனை
காளமுண்டநீலகண்டனைக்
கர்த்தனைச்சிந்தைமகிழ்ந்திட கீர்த்தனசுந்தரமாநட ராஜனை

இராகம் உசானி தாளம் சாப்பு.

பல்லவி

ஆடும்பரமன்பாதந்தொழுவாய் இனி
அல்லற்பிறவிப்பிணியொழிவாய்

அநுபல்லவி

பாடும்மறைகளென்றும்தேடும்பொருளுருவாய்ப்
பாதிமதியஞ்சூடிபாதமையோடுங்கூடி — ஆடும்

சரணங்கள்

பாவத்தையொருகாலனுறுத்தி மற்றப்
பாதத்தைத்தூக்கியின்பநிறுத்தி
ஆபத்தணுகாதென்றேயபயக்கரம்பொருத்தி
அனலும்டமருகமுங்காட்டி நிலையிருத்தி — ஆடும்

பார்மினென்றொருகையை நீட்டிச் சிவ
பரமரகசியமுங்காட்டி
சீர்மிகும்விபூதிதந்துவினைகளோட்டித்
திரையைத்திறந்துபரமானந்தமுதமூட்டி — ஆடும்

எல்லையில்லாளிருவர்பாடும் பாடற்
கிரங்கியருளுருவாயாடுந்
தில்லைமதுரைத்திருநெல்லைமூவிடந்தேடுஞ்
சிதம்பரதாஸன்வேண்டத் திருநீலகண்டமோடும் — ஆடும்

இராகம் அடாணா தாளம் ரூபகம்.

பல்லவி

ஆனந்தமன்றனாடியைப்பணிவாய் அநுதினமும்

அநுபல்லவி

தானந்தமில்லாதசிவ சம்புவையன்போடும்
தும்பைகொன்றைசூடும் — ஆனந்த

சரணங்கள்

கண்டவருக்குக் கருணைக்கண்காட்டுங்
காதுக்கினியடமருகமாட்டும
அண்டியவருக் கருளமுதூட்டும்
அல்லற்பிறப்பெனுந் தொல்லையெலாமோட்டும் — ஆனந்த

பாடிமுனிவரிருவரிணங்கும்
பங்கயத்தயன்மாலும் வணங்கும்
ஆடியன்பர்கு முரங்கணெருங்கு
மாயிரங்கைவாணன் முழவங்கறங்கும் — ஆனந்த

ஒருகால்முயலகன்மேனடிக்கு
மொருகாலடியார்க் கெமனைத்தடுக்கும்
திருநீலகண்டம் பயத்தையொழிக்கும்
செல்விசிவகாம வல்லிகண்களிக்கும் — ஆனந்த



இராகம் கமாசு தாளம் ரூபக சாப்பு.

பல்லவி

கட்டைவிட்டுப்போகுமுன் சிவ
கருணைதேடிக்கொள்ளுமின் — கட்

அநுபல்லவி

துட்டநாயும்நரியுங்கழுகுஞ்
சுடுதீயுமுண்ணக்காத்திருக்கும் — கட்

சரணங்கள்

அளவறுநோய்கள் வளருந்தோட்டம்
ஆசைக்கறையானரிக்குங்காட்டம்
கலைகள்முளைத்துக்காட்டும் வாட்டம்
கண்மூடின்கொண்டுபோடுவார் மூட்டம் — கட்

காமக்குரோதாதிக்கள்ளர்வாழுங்காடு
கடக்குய்வாசலோரொன்பதாயவீடு
காமமொழியாதலைக்கும்பொய்க்கூடு
கனவிசாரமுதிக்கும்பெருங்கூடு — கட்

கடுப்சுவாஸம்விட்டுக்கண்ணைப்பிதுக்கும்
கண்டுறவோர்கள் பிணமென்றொதுக்கும்
நடுங்கிநமனுக்கஞ்சியொளிக்கும்
நாறுடம்பைநமதென்றுட்களிக்கும் — கட்

காலனுங்காற்றலழிந்துமாறிடும்
கருநீர்க்குமிழியாம்மறைகூறிடும்
நீலகண்டர்க்கு நேர்ந்திடப்பாடிடும்
நீதிவிட்டுநமதென்றுகொண்டாடிடும் — கட்

## மகாவிஷ்ணுக்கீர்த்தனங்கள்.

இராகம் புன்னாகவராளி தாளம் சாப்பு.

பல்லவி

தெய்வம்நீயேயல்லதெய்வம் யாங்கள்
சிந்திக்கும்வகையெல்லாமந்தப்படிக்குதவும்

அநுபல்லவி

சைவமிருந்தென்னாட்டிற் றும்பிரதிநிரத்தில்
மைவண்ணனென்றுங்கூடி வருளாசலத்தில்வாழும் — தெய்

சரணங்கள்.

இட்டவேடத்தின்வடிவல்லா லுனக்
கியல்பாய்மாயவடிவமித்தலத்தில்லால்
தொட்டதொழில்களெல்லாம்தொண்டர்கள்தேறக்கண்டோம்
சோதித்துப்பார்த்தால்மதவா திக்குவாயிக்குண்டோ   தெய்
சங்குசக்கிரம்பக்கத்திற்பூட்டி நாமஞ்
சாத்தியேவேறுவேடம்தானுவிற்காட்டி
இக்குணமறைத்தாலு மியலுருவத்தையூன்றும்
ஏகனைநம்புமன்பர்க் குள்ளவாறாகித்தோன்றும்   தெய்
முக்குணங்கடந்தருள்சோதி முழு
முதலாய்நிறைந்த வுலகுக்கனாதி
நிற்குணமாகிவிண்ணின்றருள்மாரி பெய்யும்
நீலகண்டதாஸன் பாடற்குதவிசெய்யும்   தெய்

இராகம் வஸந்தா தாளம் ஆதி

பல்லவி.

வந்தருள்ஸமயமிதே வரம்தந்தருள்ஸமயமிதே

அனுபல்லவி

ஸந்ததமன்பர்மேலே சிந்தையுளாருன்போலே
சொந்தப்வேறில்லாதாலே சுந்தரராஜமாலே   வந்

சரணங்கள்

கருணைமிகுந்தநாயனே   ஆளுதற்கிதே
தருணமருள்சகாயனே
இருமாதர்க்கணையனேகருமேகம்போற்காயனே
பெருமறைசொல்வாயனே அருவுருவமாயனே   வந்
வேதமுண்டானுயிராய்த்தோனே வானவர்க்காய்முன்
பூதலம்முதுகிலேற்றோனே
பூதலப்கொம்பிற்சேர்த்தோனே நாதஸிங்கமாய்வாய்த்தோனே
சோதிவடிவாய்ப்பூத்தோனே நீதபச்சகங்காத்தோனே   வந்
வீசியாக்கரையோட்டினாய்   நீலகண்டனைப்
பேசியிலைகடல்காட்டினாய்
நீசரையலத்தோட்டினும்   ஆசையெவர்க்குநாட்டினாய்
மாசுறுவாரைவாட்டினாய்ப் பேசரும்புகழ்நீட்டினாய்   வந்த



இராகம் சங்கராபரணம். தாளம் சாய்ப்பு.

பல்லவி

கோபாலகிற்ஷண தயாநிதே   ராஜ

அனுபல்லவி.

பூபாலவம்சநற்சோபிதஸங்காச
பூர்ணானந்தகாருண்யனான ராஜராஜ   கோ

சரணங்கள்

பங்கஜப்பதம் ரஞ்சிமின்னவே   தங்கப்
பணிகள்பளீர்பளீரென்னவே   அரைக்
கிங்கிணிஜாலம்பெருகவேகாளிங்கன்
கர்வமடங்கநிர்த்தம் புரிந்துமகிழ்ந்துநின்ற   கோ
உரல்கவுத்தியதின்மீதேறித் தயிர்
உறியெல்லாங்கட்டுண்டு பசியாறி   தாகம்
பெருகவேயிடமாதாருகிற்போய்விளையாடிப்
பேதைசோதைமடிமீதுறவாடிநின்ற   கோ
அடியவர்க்கருளமுதூட்டியே   துஷ்ட
ரானவிருளையோடச்சாட்டியே   இரு
கடவிழிகொண்டுநற்கருணையுதவும் நீல
கண்டதாஸனுனைவந்தண்டினேன் ராஜராஜ   கோ

இராகம் கேதாரகவுளை தாளம் சாய்ப்பு.

பல்லவி

ஸ்ரீகண்டேசுவரனை ஸ்ரீபத்மநாபனைத்
தரிசனஞ்செய்வோமே

அனுபல்லவி

நாகந்தரித்தோரிவர் நாகமேற்படுத்தோரவர்
ஏகமாயிரண்டு பேர்கள்வைபவங்கண்டு   ஸ்ரீக

சரணங்கள்

அன்னைபூர்ணேசுவரிமனையாளிவர்க்குண்டு
அஷ்டலக்ஷ்மிமனையாட்டியவர்க்குமுண்டு
பொன்னுங்கிரியும்வெள்ளிமலையுமிவருக்குண்டு
பொங்கும்பாற்கடல்நவமணிகளவர்க்குமுண்டு
உன்னதமானவிடைவாகனமிவர்க்குண்டு
வுயர்ந்துபறக்குங்கருடாஸனமவர்க்குமுண்டு
தன்னியபாணன்முதல்தாஸர்களிவர்க்குண்டு
சாதுப்ரகலாதர்முதலானோரவர்க்குமுண்டு   ஸ்ரீக

உண்பதர்க்குக்காளகூடவிஷமிவர்க்காத்தி
யுருத்தாய்ப்பெருத்தபார்மண்ணுண்ணலவர்க்குநேத்தி
தும்பமாலைவில்வமாலைபிவருக்காத்தி
துளசிமாலைவனஜமாலையவர்க்குநேத்தி
இன்பமானபஞ்சாக்ஷரமந்திரமவர்க்காத்தி
யினியவஷ்டாக்ஷரமந்திரமவர்க்குநேத்தி
தன்பரதாரகத்தியானமிவருக்காத்தி
சங்கரத்தியானபூசைதானையவர்க்குநேத்தி ஸ்ரீக

ஆனையைக்கொன்றுதோலுரித்தாரானார்முன்னே
ஆனைக்காய்முதலையையறுத்தாரரியும்பின்னே
சேனைமுப்புரத்தையெரித்தார்சிவனார்முன்னே
தயித்தியர்களுயிரைக்குடித்தார்நாரணன்பின்னே
கானில் முயலகன்மேல்நடித்தார்சங்கரன்முன்னே
கருநீர்க்காளிங்கனிர்த்தந்தொடுத்தார்மாதவன்பின்னே
ஊனமில்லாமலைவில்லெனத்தாரீசுவரன்முன்னே
வுயர்ந்தகிரியைக்குடைபிடித்தார்கேசவன்பின்னே ஸ்ரீக

பெண்டுசுமப்பிவர்க்குப் பெண்ணைத்தரிப்பவர்க்குப்
பெருத்தமழுபிவர்க்குச்சொலித்தசக்கிரமவர்க்கு
அண்டமழிப்பிவர்க்குவகிலம்பாலிப்பவர்க்கு
அன்பர்கூட்டமிவர்க்குவடியார்காட்டமவர்க்கு
கண்டங்கறுப்பிவர்க்குக்கறுத்தமேனியவர்க்கு
கடல்போற்றனையிவர்க்குக்கருணைமெத்தவவர்க்கு
கண்டுபார்க்கிலிரண்டுபேர்க்குமொன்றேவன்மை
கண்முன்னுடையநீலகண்டதாஸன்சொல்லுண்மை ஸ்ரீக

## மஹாலக்ஷ்மி கீர்த்தனம்.

இராகம் ஆனந்தபைரவி தாளம் ரூபகம்.

பல்லவி

பரதேவி திருப்பாற்கடல்வந்த தீர்க்கலோசனி

அநுபல்லவி

அரிமோகினி வரதாயினி அகிலலோக ஜனனிபூரணி
பரமானந்தபிதயாம்பிகெ பக்தப்ரியேபுண்ணியொத்தமியே
பரிபாலனமருள்வாயே பங்கஜமேல்வளர்தாயே
கரிநாயகதடையாளே கஞ்சநாபன்மனையாளே பரதே



சரணங்கள்

அஷ்டதிசையுஞ்சிறந்துவிளங்குமருட்ப்ரகாசலட்சுமி
அருந்தவர் முனிவரர்கள்தேடுமாத்மஞானலட்சுமி
இஷ்டமானவன்பர்தமக்கிரங்குமானந்தலட்சுமி
இந்திரர்முதலானதேவருக்குகந்தபாக்யலட்சுமி
துஷ்டர்தொழும்வீரலட்சுமி சூரர்பெறும்ஜபலட்சுமி
கஷ்டமறுஞ்சுபலட்சுமி கமலபாணிமகாலட்சுமி பரதேவி

அவனியிலுள்ளோர்புகழ்ந்துபாடுமரும்பொருள்தான்யலட்சுமி
அருமையாய் மாதர்க்குதவிசெய்திடுமங்கசவுந்தரியலட்சுமி
புவனமுழுதும்போற்றுமானந்த பூர்ணகடாக்ஷலட்சுமி
பொய்யில்லாமெய்யற்காதரவாகுப்புகழ்பெறுஞ்சத்தியலட்சுமி
தவமுனிவர்தேஜோலட்சுமி தன்மமுளார்கீர்த்திலட்சுமி
சிவகருணைமுதலெலட்சுமி ஸ்ரீமாதவதயாலட்சுமி பரதேவி

ஸ்ரீநீலகண்டதாஸர்க்கருள்செய் தாளுங்கல்யாணலட்சுமி
சேஷசயனன்மார்பில்விளங்குஜகத்காரணலட்சுமி
ஊனமில்லாதசுந்தரவடிவானமோகனலட்சுமி
உமையும்வாணியுஞ்சசியும்மகிழுமுத்தமகுணலட்சுமி
காணஸாத்வகுணலட்சுமி காமராஜோகுணலட்சுமி
ஸ்ரீநிவாஸபுரலட்சுமி ஜயஜயஸ்ரீவரலட்சுமி பரதேவி

## தேவிக்கீர்த்தனங்கள்.

இராகம் கமாசு தாளம் ஆதி.

பல்லவி

அம்பிகே கவுரிகாமாக்ஷி பர
மானந்தவல்லி விசாலாக்ஷி மீனாக்ஷி

அநுபல்லவி

நம்பினேன் நம்பினேன் நம்பினேனுனையே
நாராயணஸோதரி தயாகரி ஜக அம்பிகே

சரணங்கள்

ராஜராஜகிரிராஜகுமாரி
ஸ்ரீஜகதீசுவரிசிவசுந்தரி ஜக அம்பிகே

காத்தியாயனிமகாகாளிமாதங்கி
பார்த்தருள்வாய்பரம்பரியிரங்கி ஜக அம்பிகே

நீலமுகிலெனவேநீண்டபூவேணி
நீலகண்டர்குடும்பினீமோகினி ஜக அம்பிகே

இராகம் தோடி. தாளம் ரூபகம்.

பல்லவி

கருணாகடாக்ஷவீக்ஷண தானந்தந்தருளானந்தேசுவரி கருணா

அனுபல்லவி

சரணாம்புஜம்பணியுமெம்மை
சமரக்ஷைசெய்யிமகிரிமகளுமையம்மே கருணா

சரணங்கள்

இல்லாமையாலேயென்புத்தி
யிடிந்தற்பர்கள்முன்னேகிப்புகழ்த்திச்
சொல்லாமையெல்லாஞ்சொல்லிருந்தி
தோஷமுஞ்சிந்தைக்கேயோர்கிலேசமும்வாராதகற்றி கருணா

என்னுளுமென்மனவண்டுவ்
னிருபதபங்கயத்தெழுதேனுண்டு
முன்னாட்செய்தவினையாவுமின்டு
முத்திநிலைசோ வைத்திடுமனமகிழ்கொண்டு கருணா

சூதானகொடுமைபற்றித்
தொடாரமலதனையசற்றி
நீதானன்னையென்னையும்வளர்த்தி
நீலகண்டன்மகிழ்நீலாம்புஜதளநயனத்தி கருணா

இராகம் கமாசு தாளம் ரூபகம்.

பல்லவி

தாயேதிரிபுரசுந்தரியேகிருபை தந்தருள்செய்குவாயே

அனுபல்லவி

மாயாமயிமகாதேவி மதனாந்தகன்மனோமோகினி
ஆயும்பிறையணியுஞ்சதுராரணிபூரணிகாரணிகாரணி தாயே

சரணங்கள்

அனைத்துலகமும்படைத் தாதரித்தருளும்பராசக்தி
அகிலபாக்கியமுமுதவுங்கடாக்ஷ லோசனவாரிஜத்தி
இனித்ததேன்மொழியுடனரன்மார்புக் கிசைந்தகும்பகுசத்தி
ஈரேழுலகமும்புகழ்ந்திடும்பர மேசுவரிபாசாங்குசதரிமகே
சத்தி தாயே



பண்டாசுரன்முதலாகியபலதானவசமனி
பானுகோடிபோலவினங்குஞ்சக்கிரராஜகமனி
வண்டாடியபதுமாடவிவளர்ஸ்ரீபுரவாசினி
மாயன்ஸோதரிவாமலோசனிவாரணகமனிமகிஷமர்த்தனி தா

அன்பர்க்கருளும்பெருங்கடலானதயாம்பிகையே
அரனுடற்பாதிமருவியுலகை யாளும்ஜகநாயகியே
சம்புமோகினிசாம்பவி சங்கரியிந்துமுகியே
சண்டிகேஸ்ரீநீலகண்டர்மனைவியே சத்திபுத்திபத்திமுத்தி
தாயகியே தாயே

இராகம் காகரப்ரியை தாளம் ஆதி.

பல்லவி

அந்தரிசுந்தரி காமாக்ஷி யெனக்
கருள்புரிமாமதுரைமீனாக்ஷி

அனுபல்லவி

சுந்தரேசர்வாமாங்கமேவியானந்தமோடென்
சுகமுங்கைக்கொண்டுநாளுமகமகிழ்ந்துறவாடும் அந்த

சரணங்கள்

மலையத்துவஜபாண்டியமகாராஜன்பெற்றசேயே
பணமாய்ச்சுந்தரபாண்டியஜகதீசர்க்குற்றஜாயே
பலமானவுக்கிரபாண்டியமன்னவனையீன்றதாயே
பத்தர்க்கிரங்குஞ்சிவசத்திசங்கரிநீயே அந்தரி

தாமரைமலரடியிணைபூண்பணியழகுஞ்
சந்தேகமானவிடையுடையும்மணியழகும்
மாமதிமுகமந்தகாஸவடிவழகும்
மைக்கண்கடாக்ஷமுஞ்சேவிக்கக்கலிவிலகும் அந்தரி

மும்முலைத்தடாதகையெனப்புவிமீதுதித்தாய்
முழுதுலகமும்வென்றுவீரமுடிதரித்தாய்ச்
செம்மையாயுலகாண்டுஜகம்புகழ்ந்திடவைத்தாய்
திருநீலகண்டர்பாதியுடற்கலங்காரமுற்றாய் அந்தரி

இராகம் தர்பார் தாளம் ஆதி.

பல்லவி

என்னிடத்திற்கிருபைபுரிவாய் மனமிரங்கி
எந்தவரமுந்தந்தருள்வாய்

அனுபல்லவி

பன்னகசயனன்சோதரி பார்வதிபர்வதராஜகுமாரி [என்னி
அன்னையேயாதிமாயேபுவனேசுவரி ஆனந்தநாயகியனாதினமாதரி

சரணங்கள்

பங்கஜப்பாணிசர்வாணி பன்னகவேணிகல்யாணி
பங்கஜலோசனிவாணி பத்தபராயணி
சங்கரிசர்வேசுவரிஸ்ரீ சாம்பவிசந்திரசேகரி
சங்கராங்கிசர்வ பூஷணாங்கிஷடங்கி
மங்களாங்கிமரதகாங்கி மாதங்கி      என்னிட
வேதஜனனிருத்திராணி விசுவகாரணிநாரணி
வேதபூஷணிபுராணி வீணாவினோதினி
வேதாந்தரூபிணிசர்வ வித்தியாதாயினிபவானி
வேதகதம்பவன வாசினிமதுபாஷிணி
ஆதியநாதிவினோதினிஹம்ஸகமனி      என்னி
காஞ்சிநூபுரபூஷணி கனகாம்பரதாரிணி
காஞ்சனகங்கணபாணிகாமியபலதாயினி
காஞ்சனகும்பஸ்தனிஸ்ரீ நீலகண்டமனோன்மணி
காஞ்சிகாமாக்ஷிமது ரைமீனாக்ஷிவாமாக்ஷி
காசிவிசாலாக்ஷிகரு ணாகடாக்ஷிநிதம்ரக்ஷி      என்னி

இராகம் கல்யாணி தாளம் சாய்ப்பு.

பல்லவி

ஆவுடையம்பிகையைப் பணிந்திடப் பாவந்தணிந்திடுமே

அநுபல்லவி

தேவதேவன்மகா தேவன்வாமபாகம்
மேவியசுந்தர ரூபியையன்பாக      ஆவுடை

சரணங்கள்

பொற்கொடிபோலுடனு மடியர்க்கு
திக்குங்கிருபைக்கடலும் இரு
நற்கமலக்கரமும் உலகைம
யக்கிடுஞ்சுந்தரமுந் திரு
மைக்கண்கடாக்ஷமு முட்கனிவுங்கண்டே
முக்கியமானசுக்கிர வாரந்தனிற்சென்றே      ஆவுடை
புவனமெல்லாம்பெற்றதா யவள்மாயா
விவரமெலாங்கற்றதார் ஸதா
சிவராஜியாய்வந்தவள் வேதாகமத்
தவப்பொருளாய்நின்றவள் சோதி
நவரத்தினப்பணிபூண்டு நவசத்திவடிவாகி
அவனியில்விளையாடும் நவராத்திரிதினமேகி      ஆவுடை



ஸாலோகமுதலரிய பதவிக
ளாளுந்தரும்பெரிய ஆதி
மூலபராசத்தியாய் விளங்குஞ்சி
வாலயசாரத்தியாய் நின்று
பாலப்பிறையணியும் நீலகண்டனைக்கூடி
லீலைபுரியுமனு கூலரூபியைநாடி      ஆவுடை

இராகம் சாவேரி தாளம் சாப்பு.

பல்லவி

சரணஞ்சரணங்கோமதி சங்கரிநீயே
சரணஞ்சரணங்கோமதி

அநுபல்லவி.

கருணைபுரியிது தருணம்நீயலது
கதியறியேனிள மதிநுதல்சிவையே      சரணம்

சரணங்கள்

உலகம்புகழ்விலாசினி புன்னைவனேச
ருடனமர்ந்தவுலாசினி
மலையரசர்குச்சொந்த மகளாயருள்வந்த
மாயமில்நிசந்தியாயகிலசித்தி
மகாதேவர்வசத்திற் றிகழும்பராசத்தி      சரணம்
அவனியோரேத்துஞ்சுந்தரி சங்கரநாரா
யணனுமாயினெனந்தரி
தவமுடையார்க்கெதுவுந் தாரகமாயுதவுந்
தற்பரமேயும்பர் கற்பகமேயன்பர்
தமக்கிரங்குந்தாயே யெமக்கருளுவாயே      சரணம்
ஒன்றிலுந்தீராப்பெருநோய் மைந்தரில்லாமை
ஒழியாப்பேய்தீர்த்தருளுந்தாய்
என்றெங்கும்புகழ்பெற்ற யெவருஞ்செய்யுமன்புற்ற
யிம்மைமறுமைக்கு மம்மையாய்ப்புரக்கு
மீசர்மனோகரி கேசவஸோதரி      சரணம்
ஆதிமூலப்ரகிருதியே அநாதிவேதந்
தரும்பொருட்சிவநிதியே
நீதிசுகரூபிணி நித்தியானந்தபூரணி
நின்பெருமைபெரு தன்பர்தொழுந்திரு
நீலகண்டர்ஜாயே பாலனஞ்செய்வாயே      சரணம்

இராகம் கல்யாணி தாளம் சாப்பு.

பல்லவி

அம்பிகேயேயருள்செய் ஸ்ரீஜக தம்பிகேயருள்செய்

அநுபல்லவி

எம்பெருமான்பிரியம்பகனுடனே
யின்பாகவந்தென்பாலமர் அம்பிகே

சரணங்கள்

அத்தன்சீர்மயிலே டியர்மனத்தமர்குயிலே
சுத்தபூரணியே யுலகமளித்தகாரணியே
நித்தனோடாடுநர்த்தவிலாசினி பத்திநேசர்மனத்திருணாசினி
சித்திமுத்தியளித்திடுமோராணி சத்யரூபிணிசத்துருசம்ஹாரணி
சித்திரபெறு கத்தகாமனை யொத்தவங்கைதரித்துமுத்தம்
ரத்தினங்களிசைத்தகுண்டலமுத்தசைத்தகித்தத்தையாள்ஸ்ரீஜக த
பாக்யமாநிதியே வறுமை நோய் போக்குமவுஷதியே
தாய்க்குமேலருளே புரிந்துகண் பார்க்குமாபொருளே
தீர்க்கமைவிழியார்க்குட்கிலாக்யமே
பார்க்குள்வன்பவந்தீர்க்குமாவாக்யமே
யேர்க்கவர்தருள்தாக்கும்பேரின்பமே
நோக்கினுமொன்றுநோக்கிற்போந்துன்பமே
ஆக்கியுலகெதுங்காக்குங்கருணையே
யாக்கையொடுபணிவார்க்கருளமுத
வாக்குறுஞ்சுருதிருக் குமமேயடி
பேர்க்குநீலகண்டனார்க்குரியஸ்ரீஜக தம்பிகே

இராகம் சுருட்டி தாளம் சாப்பு

பல்லவி

அம்பிகெவுன்பாதவம்புஜம்நம்பினேன்
ஆதரித்தாண்டுகொள்வாயம்மா

அநுபல்லவி

நம்பினபேரைக்காக்கும் நாரணியேதென்குளந்தை
யாம்பதியில்வாழுமானந்தவல்லியகிலஜக தம்பிகே

சரணங்கள்

பங்கஜப்பாதமேற்செம்பொற் பாடகந்தண்டையிலங்க
அங்கைப்பிடிக்குள்ளடங்கு மரையிற்பட்டாடைவிளங்கக்
கங்கணங்குலுங்காபயங் கொடுக்குங் கரத்திற்றங்கப்
பங்கசமேற் செங்கிளியோ டிங்கிதமாய் நிற்குமெங்கள் அம்பிகே



மேருமலைநாணுமுலை மீதிற்றரித்தபூஷணம்
பாரிற்கோடிபானுதிகழானவைபோலவே தோண
பூரணமதியணியும் புன்சிரிமுகமுங்காணச்
சாருமூக்கில்முத்துமுக்குத்தியுடனின்றருள்ஞான அம்பிகே

அண்டர்வைரியானசண்டமுண்டரைக்கொன்றமாதங்கி
பண்டிணங்கியீசருடற்பாதிவாங்கிபசிவாங்கி
அண்டினேனுன்கிருபையினலாண்டுகொள்மனமிரங்கி
மண்டலம்புகழும்நீலகண்டாவாமம்நின்றிலங்கும் அம்பிகே

இராகம் சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி

வரசுகமேயென் றுயராமுழுதுந்தாய்க்குன்
மதுமொழிபாலறிவித் துதவிசெய்வாய்

அநுபல்லவி

அரனருளும்பரமானந்தேசுவரிருடங்
கரபங்கஜத்திலென்றுங்களிகூர்ந்துவிளையாடும் வரசுக

சரணங்கள்.

கருணாநிதிதேவிநின் சரணாசுதித்தளிலோர்
கணமாகிலுஞ்சிரமேல ணிபவேணுமெனவே
பிரமாதிதேவர்முனி வரமாமுனிவர்நிதம்
பேணித்தொழுநித்தியகல் யாணிமனமகிழுங்
காரசுகந்தருமிகவருள்முகசரோருகம்
பெருகும் மதுரஸிக பரிவாக வறிநுக வரசுக

எத்தனைதரமோவென் சித்தசோகாதியெல்லா
மெடுத்துப்படித்துரைத்து மடிக்கடிவேண்டிக்கொண்ட
தெத்தையுமறிவாயே தத்தையேயிப்போது
வெளியவென்மீதிரங்கித் தெளிவாயம்மையின்காதுக்
கதிரகசியமென்ன மதுவெனக்கூவும்வன்ன
நிதியிலங்கிள்ளாய்சொன்ன தெதுமுரைத்தென்னையுன்ன வரசுக

சக்கரைபால்பழமுனக்கெனதன்பினுலே
தருவேனொருபகாரம் புரிவாயுன்னருளாலே
பக்கச்சொற்பதினுயிரங்குணமென்பதாலே
பரதேவிமனம்நின்சொற்கிரங்குமாமாகையாலே
பதிபுகழுங்குளந்தைப் பதிவாழுங்கிருபானந்த
நிதிநீலகண்டர்சொந்த மதிவல்லிக்கன்பாய்வந்த வரசுக

இராகம் பைரவி தாளம் ரூபகம்.

பல்லவி

கருணைகரியுனதடைக்கலமா மெனையாதரி
காமாக்ஷிபரமேசுவரி

அனுபல்லவி

திருநீலகண்டர்மனோமோகினிபரிமோதரி
தேவிவரதாயினிமகாராஜ்யமானந்தேசுவரி கருணை

சரணங்கள்

கிரிராஜன்பாக்கியமென்ன வாகிவந்தமின்னையே
கிரிவில்லியங்கமேவிக் கொண்டவெங்களன்னையே
பரிபாலனஞ்செய்யவுன்னை யன்றிக்கதிவேறில்லைநீயே
பத்தர்க்கின்பமருளும்பரா சத்திநித்தியகல்யாணிநீயே கருணை
நீலவாரிஜலோசனப்பார்வை யாலேயென்மனவேதையை
நீக்கிவைப்பதுன்பாற்கடல்வேத சிலாக்கியமானகோதையே
நாலுகதிதந்தாளுங்கற்பகம் போலருளுந்தயாநிதியே
நாரணிப்ரிபூரணிபுகழாரணிலோககாரணிநீயே கருணை
எத்தனைபிழைசெய்தாலுந்தாய்க்குப்பெற்றபிள்ளைமேல்வாதாமா
எல்லாப்பிள்ளைக்குளேழைப்பிள்ளையாமென்னைச்சோதிக்கலாமா
மெத்தவுமுனைப்போற்றினேன்பிழையெத்தையும்பொறுத்தாள்
வேதமேயன்பர்போதமேயுந்தன் பாதமேகதியாதரவுற்ற [பெற்ற
கருணை

இராகம் புன்னாகவராளி தாளம் திருபுடை.

பல்லவி.

அகிலலோகஜனனி யானந்தேசுவரியுந்த
னடிமையாக்கியா ளெனை நீ

அனுபல்லவி

மகாதேவமனோகரி மாயாமயியான்செய்த
சகலாபராதமும் க்ஷமித்தருள்புரிநிதம் அகில

சரணங்கள்

தாயென்றுனைநம்பினோர் தமக்கருள்செய்தாரகம்
நீயன்றிவேறுளதோ நித்தியகல்யாணிஜக
மாயாவேலைக்குள்மூழ்கி மங்கியுழலும்மகா
வியாதியகற்றுங்கிருபா விழிதருமதிசுக
மாயமுதநிதிவாசந்தருங்கிரி
சேயேமறைத்துதி தினதயாகரி அகில



சரணஞ்சரணம்நீயேதருவாயபயம்நல்ல
தருணமிதுவேயம்மா தமியேனுனென்னசொல்ல
ஒருபோதுன்திருநாம முச்சரித்தாரையெல்லாம்
பரிபாலனஞ்செய்யும் பரதேவிநீயேயல்லாத்
திருபுவனத்திலுந் தெய்வமில்லையுன
தருணபதமலரடைக்கலமேதினம் அகில
நாரணிநின்பதமேநம்பினேனெனைக்காக்க
வேறொருகதியில்லால்வேண்டினேன்வினைதீர்க்க
பாருனதமுதகிருபாகடாக்ஷமேயோர்க்கச்
சேரனைவரும்நம்புஞ் சிவரூபிணிசின்மார்க்க
பூரணிபுராணி புவனமூன்றும்பணி
காரணிஸ்ரீநீலகண்டர்மனோன்மணி அகில

இராகம் வராளி தாளம் சாய்ப்பு.

பல்லவி

கருணைபுரியிதுதருணம்மீனாக்ஷி நானுன்னடிமை
சரணமுனக்கேசரணஞ்சகலாக்ஷி

அனுபல்லவி

பெருமையுறுமதுராபுரித்தனி யரசுபெறுசுந்தரேசர்மனோன்மணி
அருணிறைந்தகடாக்ஷவீக்ஷணி அம்பிகேயுனைநம்பினேனினி கரு

சரணங்கள்

மலயத்துவஜபாண்டியமகோதய நிலைபாக்கியநிறைந்தசுகமய
குலகுமாரியாமெனவந்ததிசயம் பலபுரிந்தருள்பாவனிஜய கரு
சொர்ணபதுமதடநிவாசினி கர்ணகதமபகுசுமபூஷணி
வர்ணமணிமகுடாலங்காரிணி யென்னநின்றருளன்னைகாரணி
நீலவேணிநிறைந்தபூஷணி லீலைதருமுக்ரபாண்டியஜனனி
சிலமிகுபரதேவிசுகபாணி நீலகண்டர்மனோவுல்லாசினி கரு

இராகம் தன்னியாசி தாளம் ஆதி

பல்லவி

நித்தியகல்யாணிபுராணி ஜகன்மோகினி
நீரஜலோசனிபவானி

அனுபல்லவி

சத்தியவாகீசுவரர்வாமந் தழைக்கும்புவனேசுவரி
பத்தபரிபாலனஞ்செய் பத்மநாபன்சோதரி நித்தி

சரணங்கள்

மகாராஜராஜேசுவரி மாதகாங்கசுந்தரி
சுகபாணிமதுவாணி சோகநாசனிகவரி நித்திய
வண்டாடும்பூங்குழலும் வைபவப்பெருஞ்சிறுங்
கோண்டசங்கடாக்ஷமும் கொண்டுநின்றருள்தரு நித்திய
தேறுமன்பர்கள்போற்றும் ஸ்ரீநீலகண்டர்மகிழ்
சேரும்வடிவமாகி தெரிசனந்தந்துதிகழ் நித்திய

இராகம் துஜாவந்தி. தாளம் ஆதி.

பல்லவி.

அம்பிகேவுன்பதமே நம்பித்தொழுவோர்க்கெல்லாம்
ஆனந்தமானந்தமே

அனுபல்லவி.

அன்பர்கள்தமைக்காக்க வின்பமாகவேபெற்ற
யானைமுகனுடனே ஆறுமுகனுக்குற்ற
சம்புதன்னிடப்பாகஞ்சார்ந்தகரமணியில்
சந்ததமும்வளரும்புவனேசுவரி
சிந்தைமகிழ்ந்தகோவிந்தசகோதரி

சரணங்கள்.

மாமறைபோர்முனிவோர்கேமமுடன்பணியும்
மணிமயமானபீடமும்
கோமளமலர்களும்பணிகளும்பூண்டநல்ல
குங்குமார்ச்சனப்பதமும்
ஸ்ரீமயமானவரடைசுற்றியசிற்றிடையுஞ்
சிங்காரமுஞ்சொகுசும்பூங்காவனக்கிளிபோல்
தாமரைப்பூவேத்தியகரமுங்கங்கணமுந்தி
தம்பமும்இன்பமுமன்புடனேகண்டு
டம்பமும்மோகமுந்துன்பமுமறவிண்டு அம்பிகே
ஆலிலைபோல்வயிறும்நீலரோமாவளியு
மருமையாநாபிச்சுழியும்
தாலிமணிகள்முத்துமாலைகளணிமார்பும்
தங்கச்செப்புபோற்குசமும்
நீலகண்டர்கட்டியபூலத்திருமங்கல்யமும்
நித்தியகல்யாணரூபவிஸ்தாரமுஞ்சிறந்த
வாலமயில்போல்நின்றுசேவுடன்வாழுந்தாயே
வந்தனைசெய்துதெளிந்தவுளங்கொண்டு
சிந்தனைசெய்துதினந்தினமுங்கண்டு அம்பிகே



சாதிப்பவளவாயுஞ்சந்திரிகைப்புன்சிரிப்பும்
சம்பகமூக்கினழகும்
சோதிவைரமூக்குத்திதொங்கலுங்கருணையாய்த்
துலங்குமிருநயனமும்
சீதபூரணமதிவதனமுங்கிரீடமும்
சிந்தூரப்பொட்டுமாகத்தென்றிசைநோக்கிநின்று
ஆதிசிவனுக்கென்றேயருமைவடிவாகிய
ஆவிடையாளேயும்பார்வதியேபரா
தேவியேநீலகண்டராணியேபரையே அம்பிகே

இராகம் சகனா தாளம் ரூபகம்.

பல்லவி

கருணைசெய்வையே அம்மா நின் கருணைசெய்வையே

அனுபல்லவி

அருமறைநான்கும் பெரும்புகழோங்கும்
பொருளேமெய்தாங்கும் திருவருள்தேங்கும்
பரயேதிருவடிபோற்றி இருவினைநோயெதுமாற்றி
சாண்பெறுந்தொண்டர்முன்னேற்றியருளுமையேயெனையாற்றி
கருணைசெய்

சரணங்கள்

ஊழ்வினையினாலுடம்பைகொண்டாடிப்
பாழ்விதியினாலலைந்துதிண்டாடிக்
கேள்வியில்லாதார்போல்மனம்வாடி பாவியரைக்கூடி
நோவுறும்மெய்ப்பிணிதூக்கிஆவியிழந்துவினைக்கிப்
போவர்தம்முறவினைநீக்கிதேவிநின்திருவருணோக்கி கருணை

அஞ்சிமனமில்லாயயாற்சென்றே
கெஞ்சியன்பிலார்முன்வினைப்பின்றே
வஞ்சியரின்பம்மிகவும்நன்றென்றே சஞ்சலங்கொண்டே
அஞ்செனவிருளேயும்மோக வெஞ்சிறைசென்றவிவேக
வஞ்சனையாற்பெறுஞ்சோக சஞ்சயம்வராதாக கருணை

ஆதிஅந்தமில்லாதசிவையே
ஓதிமுனிவர்புகழும்பரையே
பூதிதிகழ்ந்தவடியாரனையே கோதிலாமணியே
பாதிமதிச்சடைகொண்ட சோதியெனுநீலகண்டர்
மீதொருபாதியிற்பெண்டா மாதியேநீதிகண்டாய் கருணை

### இராகம் நாட்டகுறிஞ்சி தாளம் ஆதி.

பல்லவி.

ஏனிந்தத்தாமலம்மீனாக்ஷி மன
மிரங்கிவந்துதந்தருள் திருக்காக்ஷி

அனுபல்லவி

நீநினைந்தால்கூடவாதகெதுமுண்டா
நித்தியகல்யாணியென்பெற்றவள்கண்டாய் ஏனிந்த

சரணங்கள்

உந்தனடிமையாகி வந்தேனனலவோ
வுகந்துபார்த்தருளாகி லுனக்கதுநலவோ
எந்தவுலகுங்காக்கும்எந்தாய்நீயலையோ
யேழையென்றறிந்துமேன் மனமிரங்கலையோ ஏனிந்த
சரணஞ்சரணமென் றுதாழ்ந்தேன்போதாதோ
தளர்ந்தாரைக்கருணைக் கணுடனேபாராதோ
பரமுனையலாவிடம் வேறுமொன்றில்லால்
பராமுகமேன்சொல்லாய் திருமனங்கல்லா ஏனிந்த
சோதனையாமென்றாலும் நான்மனம்பொறுக்கேன்
திரும்பெனத்தள்ளினாலு மினியுனைவெறுக்கேன்
நீதனையாலவாயில் நீலகண்டனைமேவி
நிரந்தரவருள்புரிந்தெதுந்தரும்பரதேவி ஏனிந்த

### இராகம் காம்போதி தாளம் அடசாய்ப்பு.

பல்லவி

அருள்புரியிதுவேளைதாயே யன்பர்
அல்லல்வினைதீர்த்தருளுங்காந்திமதிநீயே

அனுபல்லவி

நார் முனிவோர்சுரர்முதலோர் புகழ்திருநெல்வேலி
நகரழகுதரமருவியருளுமனுகூலி அருள்

சரணங்கள்

ஓங்குமணித்திகழபீடமீது வாழு
முந்தனடிகண்டுதொழுமெந்தனுக்கிப்போது
ஈங்குதவிசெய்யாததேது யேழை
யென்பிழைபொறுத்தாட்கொணீக்கிவிடுவாது அருள்



யாவுயிருமீன்றவுனையல்லால்ச் சென்று
யான்கண்டுபேசுமிடம்வேறுளதோசொல்லாய்
பாவவினைத்தொடர்கொண்டுபொல்லா விந்தப்
பாரிலலைகின்றவெனக்குனையன்றியில்லால் அருள்
ஜகம்புகழுங்கன்னியருநீயே யேக
தந்தனையுங்கந்தனையுங்கந்ததுவும்நீயே
சகலவருள்பொருளுணர்வுநீயே நீல
கண்டனொருபாற்கொண்டகண்பணியும்நீயே அருள்

### இராகம் தோடி தாளம் ஆதி.

பல்லவி

சிந்தையிரங்குநீயே யெனதுதாயே மாமாயே

அனுபல்லவி

தென்றிசைநோக்கிவாழுஞ்சுந்தரியானபர
தேவிபுவனேசுவரியாவிடையம்மாகவுரி சிந்தை

சரணங்கள்

படைப்புமளிப்புமந்தத்தழிப்புந்தொழில்கொண்டிந்தப்
பதினாலுலகமைத்தபராசத்தி
கடைக்கண்பார்வைதந்தென் விடுக்கமெல்லாந்தீரக்
காத்தருள்வாய்பாசாங்குசத்தி சிந்தை
சுகதுக்கமுங்காலமும் புகழ்முக்கியஞானமுந்
தோற்றுஞ்சகமாயாவிலாஸினியே
இகபரமுஞ்சொர்க்கமும் பகலிரவுந்தர்க்கமு
மெல்லாங்காட்டிமயக்கும்மோகினியே சிந்தை
வேதக்கொடியேயனபர்க் காதரவேயின்பான
வேதாந்தவித்தேபரமேசுவரியே
சேதமனைத்துந்தீராய் நீதயவருட்பராய்க்
கேசவஸோதரியாதரியே சிந்தை
காரணிநாதபரி பூரணிசிவகாமி
காத்தியாயனிவரதாயகியே
ஆரணியானந்த ரூபிணிபார்வதி
யாதியேநீலகண்டர்நாயகியே சிந்தை

### இராகம் தோடி தாளம் ரூபகம்.

பல்லவி

நீதயவா யாதரிப்பாயம்மா வென்மேல்
நீதயவா யாதரிப்பாயம்மா

அனுபல்லவி

நீதயவாயாதரிப்பாய் மாதவஸோதரி நீதயவா

சரணங்கள்

தாரகமுனையல்லா லாரம்மாவென்னையாளாய்ப்
பாரம்மாகடைக்கண்ணா லென்னோமுப்பரதேவி நீதயவா
நம்பினோர்க்குதவிசெய்யு மம்பிகேயுன்னை
நம்பினேனென்னுளு மம்புஜப்பாணி நீதயவா
மாநிலம்புகழும்பா மானந்தநாயகி
ஸ்ரீநீலகண்டர்பனை விநோதமகாமாயே நீதயவா

இராகம் தோடி தாளம் ஏகம்.

பல்லவி

சத்திகவுரி காத்தியாயனி
நித்தியகல்யாணி பவானி
சித்தமிரங் குத்தமிபா லித்தருள்வா யெத்தினமுஞ் சத்தி

சரணங்கள்

சங்கரிசுந்தரி சுமங்கலசுபங்கரி மா
தங்கிசாமளாங்கிசிவ சங்கரனார்பங்கில்வாழும் சத்தி
சொர்ணமணிமாமகுடங் கர்ணாபரணங்களொடும்
வன்னவுடைமின்னற்கொடி யென்னவுமுன்னில்விளங்குஞ் சத்தி
காரணிஸ்ரீநீலகண்டர் சேருமனோன்மோகினிகு
மாரபுரிமேவும்பர மீசுவரியானந்தேசுவரி சத்தி

இராகம் மத்தியமாவதி. தாளம் ரூபகம்.

பல்லவி

ராஜராஜேசுவரி கிரிராஜகுமாரி ஸ்ரீராஜராஜேசுவரி

அநுபல்லவி

கேசவஸோதரி சுந்தரி கங்காதரமனோகரி
ஆசிருதஜனகருணாகரி அகிலலோகஜனனிசங்கரி ஸ்ரீராஜ

சரணங்கள்

மாயாமயிமகாமோகினி மங்களரூபிணிருத்திராணி
தாயேவரதாயினிவாணி சர்வாணிபுராணிதேவிநாராயணி ஸ்ரீராஜ
ஆதியேபரஞ்சோதியேபர மானந்தவல்லியுமையே
நீதயவருள்செய்திடுவாயே நித்தியகல்யாணியாதரிப்பாயே ஸ்ரீராஜ
நீலகண்டர்வாமமேவி நின்றிரங்குமகேசுவரி
பாலகுகனைகணேசனைப்பெற்ற பார்வதிபரமேசுவரிகவுரி ஸ்ரீராஜ



# மனோன்மணிக்கும்மி.

சீர்பெருகுந்திருக்கைலைமலைச் சிவன்
செல்வன்கணபதி தாள்போற்றிப்
பார்புகழுந்திருநீலகண்டர்பாதம்
பணிந்துக்கும்மியடிப்பமடி 1.

நீறுறையும்மேனியர்தம்பெருமையை
நீளுலகிற்பாடி மேவிரித்துக்
காறுறையுந்துன்மதங்களைநீக்கிக்
கதிபெறுஞ்சைவநெறிதுலக்கி 2.

நேர்பகரும்வேதஸாரப்பொருளுணர்
நின்மலசைவசிகா மணிநல்
லார்மருவும்பரஞ்சோதிகலந்த
தோருண்மையைநாடிக்கும்மிபாடி 3.

போதமுணர்ந்துபொருளறிந்து பவப்
பொல்லாவினைகளெல்லாமொழிந்து
நாதன்றிருவருள்சேருதற்குவாடி
ஞானமனோன்மணிப்பெண்மயிலே 4.

ஆதியனாதியனந்தசுகமய
மானசிரானபோனபரஞ்
சோதியைப்பாடிக்கும்மியடிப்போம்வாடி
சொந்தமனோன்மணிப்பெண்மயிலே 5.

வேதந்தொலங்குமோராயிரக்கால் கொண்ட
விந்தைநவமணிமண்டபத்துட்
போதம்விளங்குமகாஸபையிலங்கு
போவோம்மனோன்மணிப்பெண்மயிலே 6.

சாந்தகுருவைமனம்நினைந்தே யந்த
சற்குருசொன்னமொழியுணர்ந்தே
ஆந்தாமாகும்பயனறிந்தேவாடி
லாமேமனோன்மணிப்பெண்மயிலே 7.

நல்லதிருக்கூட்டவாசலடி யங்கே
நன்மைவிளையும்ப்ரகாசமடி
சொல்லற்கடங்காதவின்பமடி நாந்
துணிவோம்மனோன்மணிப்பெண்மயிலே 8.

இருளடையாவெளியானதடி மெத்த
வேகாந்தசாந்தபோகமடி
பொருளடைந்தாறலாந்துன்பமணுகாது
போவோம்மனோன்மணிப்பெண்மயிலே 9.

வாஸம்பொருந்துமலர்சொரியு மெங்கும்
வானமுதமயமாய்ப்பொழியு
மீசன்றிருநடனம்புரியும்மிக
வின்பமேமனோன்மணிப்பெண்மயிலே 10

வேதாந்தத்தங்கவிளக்கெரியும்ஞான
வித்யாபரிமளம்வீசிவரும்
போதாந்தமணிமுழங்குமவை
போகம்மனோன்மணிப்பெண்மயிலே 11

கவலையணுகாதசித்தசுகமான
கானரஸப்பனிநீர்தெளித்து
நவரஸகந்தப்பொடியிறைத்துநிலை
நாட்டும்மனோன்மணிப்பெண்மயிலே 12.

வஞ்சப்பிறவியைவேரோடே தூக்கி
வாரியிழுத்துப்பறித்தெறிந்து
சஞ்சலமற்றுவிளையாடும்நல்லஸ்
தானம்மனோன்மணிப்பெண்மயிலே 13.

ஆசைகளானபிசாசையெல்லாம் வெளி
யாடவைத்தாட்டியொழித்திடுமாம்
வாசாமகோசாரஸன்னிதியாஞ் சேர
வாடிமனோன்மணிப்பெண்மயிலே 14.

பாழ்த்தவினைகன்மபந்தமெனுங் காற்றிற்
பஞ்சுபோலோடிப்பறந்திடுமாம்
வாழ்த்தித்துதித்துக்கும்பிடப்போவோம்
வாடிமனோன்மணிப்பெண்மயிலே 15



சித்தவிகாரமயக்கமுற்றுமங்கே
தீர்ந்துதெளிந்துசுகத்தைப்பற்றும்
இத்தனைநாட்பட்டபாடுதணிந்திடு
மெந்தன்மனோன்மணிப்பெண்மயிலே 16

சித்தமலாதியமுக்கறவேநல்ல
சிரத்தாநதிதன்னினீராடி
பத்திக்கலையுடுத்தாதரவாகிப்
பணிவோம்மனோன்மணிப்பெண்மயிலே 17

சாந்தியோடுசமாதிகளாகிய
சந்தனங்குங்குமஞ்சிந்தூரம்
போதமலர்களுநாமணிந்துஸபை
போவோம்மனோன்மணிப்பெண்மயிலே 18

தித்திக்குமைந்தெழுத்தாகியபாலைச்
சிவோகவன்னதொடுஞ்சேர்த்தருந்தி
சத்திசிவந்தானுக்கண்டுணரொன்றைநாஞ்
சார்வோம்மனோன்மணிப்பெண்மயிலே 19

ஸப்தப்ருகாரங்களுந்தாண்டிப்பெரு
தானகோபுரநான்குங்கடந்து
பத்திக்கால்மண்டபத்துள்ப்புகுந்துசிரம்
பணிவோம்மனோன்மணிப்பெண்மயிலே 20

ஞானப்பரகாசஞ்சேர்நற்ஸபைசென்று
ஞாபகமுற்றுப்பதப்பணிந்து
மோனப்பரஞ்சோதிமூர்த்திமுன்போய்த்தானைப்
முடிப்போம்மனோன்மணிப்பெண்மயிலே 21

அரகரவென்றுசொல்லித்தேறிப்புகழ்ந்
தஞ்சுபாறும்படிமேதேறி
பரமசுகம்பெற்றுப்பரவசிவநாட்டத்தைப்
பார்ப்போம்மனோன்மணிப்பெண்மயிலே 22

நானென்னுமாங்காரவினைப்பழியெல்லாம்
நன்றாகக்கைதட்டிநீக்கிச்சிவந்
தானெனவேகண்டுகும்மிபாடிச்செல்வஞ்
சார்வோம்மனோன்மணிப்பெண்மயிலே 23

அரிஅயனாதியமரர்களுந்திசை
க்காதிபரும்முனிநாதர்களும்
சரண்புகுந்தெய்வசபையிதுவேநாமுஞ்
சார்வோமம்மேனென்மணிப்பெண்மயிலே 24

அப்பரடைந்ததுஞ்சம்பந்தர்பெற்றது
மாரூரர்சென்றதுமிவ்விடமே
செப்பவொண்ணாப்பரமானந்தமேநாமுஞ்
செல்வோமம்மேனெனமணிப்பெண்மயிலே 25

வாதவூரர்பெற்றவாழ்விதுவேநான்கு
மாமறைசொல்லும்பொருளிதுவே
வாதம்முடிந்தவிடமிதுவேசேர
வாடிமமேனென்மணிப்பெண்மயிலே 26

பத்தர்கள்போற்றும்பரம்பொருளைத்தேடிப்
பாடித்துதிப்பார்பெறுமருளாம்
முத்தர்களர்ச்சித்திடுமுதலாஞ்சிவ
மோனமம்மேனென்மணிப்பெண்மயிலே 27

பத்திஞானக்குருசங்கமமும்பெற்ற
பத்தர்கள்போற்றும்பரம்பதமா
மெத்திசையுநிறைந்தேகமயமாகு
மின்பம்மேனென்மணிப்பெண்மயிலே 28

வல்லான்சிவனருளில்லாதவர்காணா
மாமதிச்சோதியிலேகாந்தமாய்
அல்லற்பவப்பிணியில்லாதாகும்பர
மானந்தக்கும்மியடிப்பமடி 29

தானந்தமாகியதானானதன்மயந்
தானம்மேனென்மணிப்பெண்மயிலே
ஆனந்தமாகியறிவுக்கறிவான
அற்புதக்கும்மியடிப்பமடி 30

நானென்றவாங்காரவினைமகன்றுமெய்
ஞானமம்மேனென்மணிப்பெண்மயிலே
ஸ்ரீநீலகண்டர்திருவடிநீழலிற்
சேருதலாமிந்தக்கும்மியடி பவந்
தீருதலும்மிகநன்மையடி 31

முற்றிற்று

அரி அயனு மியமரர்களுந் திசை
க்காதிபரும் முனிநாதர்களும்
சரண் புகுந்தெய்வசபையி துவேநா முஞ்
சார்வோமமனேன் மணிப்பெண்மயிலே 24

அப்பரடைந்த தஞ்சப் பத்தர்பெற்றது
மாரூரர்சென் றதுமிவ்விடமே
செப்பவொண்ணாப்பரமானந்தமேநா முஞ்
செல்வோம்மனென மணிப்பெண்மயிலே 25

வாதவூரார்பெற்றவாழ்விதுவேநான்கு
மாமறைசொல்லும்பொருளிதுவே
வாதம்முடிந்தவிடமிதுவேசேர
வாடிமனேன் மணிப்பெண்மயிலே 26

பத்தர்கள்போற்றும்பரம்பொருளாந்தேடிப்
பாடித்துதிப்பபார்பெறுமருளாம்
முத்தர்களர்ச்சித்திடும் முதலாஞ்சிவ
மோனமனேன் மணிப்பெண்மயிலே 27

பத்திஞானக்குருசங்கமும்பெற்ற
பத்தர்கள்போற்றும்பரம்பதமா
மெத்திசையுநிறைந்தேகமயமாகு
மின்பம்மனேன் மணிம்பெண்மயிலே 28

வல்லான்சிவனருளில்லாதவர்காணு
மாமதிச்சோதியிலேகாந்தமாய்
அல்லற்பவப்பிணியில்லாதாகும்பர
மானந்தக்கும்மியடிப்பமடி 29

தானநதமாகியதானனதன்மயக்
தானும்மனேன் மணிப்பெண்மயிலே
ஆனந்தமாகியறிவுக்கறிவான
அற்புதக்கும்மியடிப்பமடி 30

நானென்றவாங்காரவினைமகன்றுமெய்
ஞானமனேன் மணிப்பெண்மயிலே
ஸ்ரீநீலகண்டர்திருவடிநீழலிற்
சேருதலாமிந்தக்கும்மியடி பவந்
தீருதலம்மிகநன்மையடி 31

முற்றிற்று